**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 10-4-2000 அன்று பேருந்து எண் டி.என். 23 என். 0579 என்ற பேருந்து, தடம் எண் 152 P.P. கடலூர்-சென்னை என்ற தடத்தில் இயக்கப்பட்டது. அப்பேருந்தில் திரு. நந்தகுமார், ஓட்டுநராக, திரு. ரங்கநாதன், நடத்துநராக பணிபுரிந்துள்ளனர். மேற்படி பேருந்து கடலூரிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்தபோது பழையலூர் பாலத்தின்மீது படாலம் நோக்கி சென்று கொண்டிருந்த மணல் லாரி எண் டி.என்.04/சி 3199 எதிரே வந்தது. பாலத்தின்மீது இரண்டு வாகனங்களும் கடந்து செல்ல போதுமான இடைவெளி இருந்தும், லாரி தடம் மாறி கழகப் பேருந்தின் வலதுபுறம் மோதி சுமார் 1-30 மணியளவில் விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 16 பேர் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டனர். செங்கல்பட்டு மருத்துவமனையில் 3 பேர் இறந்துவிட்டனர். மொத்தம் 19 பேரில் 13 பேர் ஆண்கள், 6 பேர் பெண்கள். மருத்துவமனையில் 35 பேர் சிகிச்சை பெற்றனர். அதில் 32 பேர் பேருந்துப் பயணிகள். 3 பேர் லாரி பயணிகள். இதில் புறநோயாளிகள் 23 பேர். உள்நோயாளிகள் 12 பேர். போக்குவரத்துக் கழக ஓட்டுநர், லாரி ஓட்டுநர் மற்றும் 17 பயணிகள் அடையாளம் தெரிந்துள்ளது. விபத்து நடந்த செய்தி அறிந்தவுடன் அந்த இடத்திற்கு நிர்வாக இயக்குநர், பொது மேலாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் சென்று நிவாரணப் பணியில் ஈடுபட்டனர். விபத்தில் இறந்துபோன கழக ஓட்டுநர் திரு. நந்தகுமார் 14



2000 ஏப்ரல் 12] [டாக்டர் க. பொன்முடி]

வருட அனுபவம் உள்ளவர். விபத்து நடந்த இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு செய்ததிலும், பயணிகளை விசாரணை செய்ததிலும் கழகப் பேருந்து மிதமான சீரான வேகத்தில்தான் இயக்கப்பட்டுள்ளது. பழையலூர் பாலத்தில் இருவாகனங்களும் நுழைந்துவிட்ட நிலையில் லாரி ஓட்டுநர் போதுமான இடைவெளி இருந்தும் எந்தக் காரணமுமின்றி தடம் மாறி வலதுபுறம் வந்து கழகப் பேருந்தின் முன் வலதுபுறம் மோதியுள்ளார். இந்நிலையில் விபத்து பாலத்தின் மீது நடந்ததால் கழக ஓட்டுநர் விபத்தை தவிர்க்க இயலாது போய்விட்டது. காவல் துறை முதல் தகவல் அறிக்கையின்படி இவ்விபத்திற்கு லாரி ஓட்டுநரின் தவறே காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பேருந்தினுடைய தகுதிச் சான்று புதுப்பிக்கப்பட்ட நாள் 20-3-2000-தான். இப்பேருந்து தகுதிச் சான்று முடியும் நாள் 19-3-2001 வரை F.C. பெறப்பெற்றிருக்கிறது.

இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விபத்து நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயும், நிரந்தர செயலிழப்பு ஏற்பட்டவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு ஏற்பட்டவர்களுக்கு 4 ஆயிரம் ரூபாயும், ஏனைய இனங்கள், சிறுகாயங்களுக்காக 500 ரூபாயும் என்று நிரந்தரமாகவே, விபத்து ஏற்படுகின்ற காலங்களில், விபத்து நிவாரண நிதி என்று முதலமைச்சர் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதற்காக தனி நிதியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று எதிர்பாராத விபத்துக்கள், பெரிய விபத்துக்கள் நடைபெறுகின்றபோது முதலமைச்சர் நிதியிலேயிருந்து இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 50 ஆயிரம் வழங்கப்படுகிறது. அந்தத் தொகையும் இந்த விபத்திலே உயிர் இழந்தவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

விபத்துக்களைப் பொறுத்தவரையில் பல்வேறு நடவடிக்கைகளை போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்டாலும், அதிலே ஓட்டுநர்கள் மற்றுமுள்ள பொதுமக்களுடைய, அரசியல் கட்சிகளுடைய ஆதரவும் தேவைப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே அக்கறை கொண்டிருந்த காரணத்தால், அனைத்து அதிகாரிகளையும் அழைத்துப் பேசிகூட, இதுபோன்ற Fatal Accidents, உயிரை இழக்கக்கூடிய விபத்துக்கள் ஏற்படுகிறபோது, ஓட்டுநர்கள் உரிமத்தை உடனடியாக இரத்து

செய்ய வேண்டுமென்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டபோது, பல்வேறு அரசியல் கட்சிகள் அனைவரும் ஒன்றுகூடி, அந்தச் சட்டம் இருக்கக்கூடாது என்றும், அந்த விதிமுறை இருக்கக்கூடாது என்றும் போராட்டம் நடத்தினார்கள் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். விபத்துக்கள் தடுக்கப்படவேண்டுமென்ற உணர்வோடு, ஓட்டுநர்களும் சிறிது கவனமாக இருக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் அதுபோன்ற விதிமுறைகளைக் கொண்டு வருகிறபோது இங்கே அமர்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் அவர்களுடைய உணர்வுகளையும் பகிர்ந்துகொண்டு ஒத்துழைப்பார்கள் என்று சொன்னால், வருங்காலங்களில் நிச்சயமாக மேலும் இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஏப்ரல் 14 ஆம் தேதி கோயம்புத்தூரில் நடத்தவுள்ள ஊர்வலம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கோயம்புத்தூர் பிரச்சினைப்பற்றிய சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு. திரு. சுப்பராயன், பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கிறோம். அது பத்தோடு பதினொன்றாகக் கொடுக்கப்பட்ட ஒரு தீர்மானம் அல்ல. கோயம்புத்தூரில், தமிழ்நாட்டில் இதுவரையிலும் நடக்காத ஒரு துயரச் சம்பவம், வகுப்பு மோதல் நடைபெற்றிருக்கிறது. இப்போதுதான் அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறது.

வேறுபாடே இல்லாமல், எல்லாத் தரப்பினரும் அந்த அமைதியை நிலைநாட்டுவதில் மாண்புமிகு முதலமைச்சருடைய முக்கிய பங்கை உணர்ந்து இந்த நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும், பராமரிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த நிலையில் 1982 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காட்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தில், அதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி ஆராய்வதற்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நீதிபதி வேணுகோபால் கமிஷன் மிகத் தெளிவாக, உறுதிபட ஒரு குற்றச்சாட்டை முன் வைத்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற வகுப்பு மோதல்களை தூண்டிவிட்டது ஆர்.எஸ்.எஸ். இயக்கம்தான் என்பதை அவர் தெளிவாக குற்றஞ்சாட்டி



இருந்தார். வகுப்பு மோதலை தூண்டுவதில் பங்கு பெற்றிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். இயக்கம் என்று நீதிபதி அவர்களின் தலைமையிலே அமைக்கப்பட்ட விசாரணை கமிஷனே, குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், வகுப்பு மோதலுக்கு காரணமான ஒரு அமைப்பு, ஓரளவிற்கு அமைதி இருக்கிற நிலையில், அங்கு ஓர் ஊர்வலத்தை நடத்த அனுமதித்தது மட்டுமல்லாமல், அந்த இயக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதித்து இருப்பதும் நல்ல முன்னுதாரணம் அல்ல; மீண்டும் கலவரமும், பீதியும் அங்கே தொடர்வதற்கு இது ஒரு அபாயகரமான முன் அடையாளமாக அமைந்துவிடும் என்ற அச்சத்திலிருந்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது, இத்தகைய சம்பவங்களை காலத்தில் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா, அல்லது இந்தப் பேரணியின் காரணமாக ஏதாவது எதிர் விளைவுகள் தோன்றி விடாமல் தடுப்பதற்கு மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைப்பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் மிகுந்த யோசனைக்குப் பிறகுதான் இந்தத் தீர்மானத்தை கொடுத்து இருக்கிறோம். அனுமதி இல்லாமலேயே அவர்கள் ஊர்வலம் நடத்துவதாக அறிவிப்பு செய்திருக்கிறார்கள். போலீஸ் துறையில் அனுமதி வழங்கி இருக்கிறார்களா, இல்லையா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். ஆனால் எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி, அனுமதி மறுத்த பிறகும் ஊர்வலம் நடக்கும் என்று அவர்கள் அறிவித்து இருப்பது, வன்முறைகளுக்கு வழிவகுக்குமோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறது.

கோயம்புத்தூரில் மட்டுமல்ல, எங்கள் வாணியம்பாடியிலேயே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. வாணியம்பாடி போன்ற நகரங்கள், கோவை போன்ற நகரங்கள் இந்தப் பிரச்சினையில் மிகவும் உணர்ச்சி உள்ள இடங்கள். எனவே, இந்த மாதிரியான இடங்களில் போலீஸ் அனுமதியும் இன்றி, நடத்தப்படுவதற்கு அரசு எப்படி அவர்களுக்கு அனுமதி வழங்கியது என்று எனக்குத் தெரியவில்லை. போலீஸ் அனுமதி இல்லாமல் நடக்கும்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது தடுக்கப்பட்டு இருக்கிறது என்பதுதான் இப்போது உள்ள கேள்வி.

இந்தப் பிரச்சினைக்கு உள்ளே சென்று நான் பேச விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அதுகுறித்து

பேசியிருக்கிறார்கள். நான் பேசுவதைவிட அவர் பேசுவதுதான் இன்றுள்ள சூழ்நிலையில் சரியாக இருக்கும் என்று நான் விவரங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. ஏதோ ஒன்று நடக்கிறது. எனவே, மீண்டும் தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்கள் அச்சத்தோடு வாழ்வதற்கான சூழ்நிலையை அல்லது சிறுபான்மை மக்களை அலைக்கழிக்க அவர்கள்மீது வீண்பழிகளைப் போட, அதனால் ஒரு ஆதாயம் தேட யாரோ முயற்சி செய்கிறார்களோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே, இதுகுறித்து துரித நடவடிக்கை எடுத்து, அனுமதி இல்லாமல் நடத்தப்படுகிற ஊர்வலங்களுக்கு, அது கோவையாக இருந்தாலும், வாணியம்பாடியாக இருந்தாலும், அல்லது வேறு எங்கிருந்தாலும், அரசு எந்த வகையிலேயும் அவர்களுக்கு இடம் அளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். முதலமைச்சர் அவர்கள்தான் இதற்கு உரிய தீர்வைக் காண வேண்டும்.

முற்பகல் 10-00

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜி. பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உங்களிடத்திலே அனுமதி பெற்ற உறுப்பினர்கள் வேண்டுமானால் இங்கு பிரச்சினைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆக, இப்படிப்பட்ட சம்பவங்களை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது, எந்த ஒரு தகவலையும் தங்களுடைய அனுமதி பெறாமல், எல்லாவற்றிற்கும் குறுக்கிட்டு திரு. வேலாயுதன் போன்ற உறுப்பினர்கள் பேசுவது என்பதை நீங்கள் தடுக்க வேண்டுமென்று நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலாயுதன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)..





## 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்—தொடர்ச்சி

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். 3 நாட்களுக்கு முன்பு வேதாரண்யத்திலே தேவாலயத்திற்கு ஆர்.எஸ்.எஸ்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கோவை பற்றியது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஏப்ரல் 14 ஆம் தேதி கோயம்புத்தூரில் நடத்தவுள்ள ஊர்வலம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் சி. வேலாயுதன் இதிலே குறுக்கே பேசக் கூடாது என்று சொன்னார்கள். கடந்த 3 நாட்களாக நடந்த சம்பவங்களை நீங்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அறையிலே வந்து என்னுடைய அனுமதியை வாங்கிக்கொண்டுதான் பேரவையில் பேச வேண்டுமென்று தெளிவாகச் சொல்லி வருகின்றேன். திரு. சுப்பராயன் அவர்கள் இந்தப் பிரச்சினையை என்னுடைய அறையிலே எழுப்பினார்கள். நான் அனுமதி கொடுப்பதற்கில்லை, நீங்கள் காலா காலத்திலே வந்து இதை கொடுத்து இருக்க வேண்டும், இதற்கு முன்னாலேயே சொல்லி இருக்க வேண்டும் என்றேன். உதாரணமாக நேற்றையதினம், நாகர்கோவிலில் அனைத்துக் கட்சி பந்த் நடத்தப்போவதாகவும் ஆகவே, நீங்கள் தயவுசெய்து முதலமைச்சரிடம் சொல்லி இதற்கு அனுமதி வாங்கித் தாருங்கள் என்றும் டாக்டர் குமாரதாஸ் சொன்னார். இது அனைத்துக் கட்சி பிரச்சினை என்பதனால், நேற்றையதினம் முதலமைச்சரிடம் இதை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன். திரு. சுப்பராயன் அவர்களிடம் சொல்கின்ற நேரத்தில், இதை உரிய காலத்திலே சொல்லியிருக்க வேண்டும்; இப்போது எப்படி பேச முடியும் என்று கேட்டேன். அப்போது அங்கே இருந்த திரு. வேலாயுதன் அவர்கள், அவருக்கு அனுமதி கொடுத்தால், எனக்கும் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஆகவே, திரு. ஜி. பழனிசாமி அவர்கள் திரு. வேலாயுதன் என்னிடம் கேட்காமல் பேசுவதாக நினைக்கக் கூடாது. திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ்.எஸ். அகில இந்திய அளவில் குறிப்பிட்ட நேரத்தில் தங்களுடைய நிகழ்ச்சிகளை நடத்தி,...

**திரு. கே. சுப்பராயன்:** Speaker Sir, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மாண்புமிகு உறுப்பினர் எம்.ஏ. லத்தீப் அவர்களும் எழுத்துபூர்வமாக தங்களிடம் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பின் மூலம் இப்பிரச்சினையைக் கிளப்ப அனுமதி கோரி இருந்தோம். இந்த நிகழ்ச்சியில் தாங்கள் முன்னர் சொன்னது எல்லாம் நடந்தது. முதலமைச்சர் அவர்களிடம் கேட்டோம்; அவர்களும் சில விஷயங்களைச் சொன்னார்கள். எழுதிக் கொடுத்த அந்த அடிப்படையில் நாங்கள் கிளப்புகிறோம் என்கிறபோது, எழுதிக் கொடுக்காமலேயே இப்போது மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களைத் தாங்கள் அனுமதித்ததன் மூலம், (குறுக்கீடு) ஒரு தவறான முன்னுதாரணம், (குறுக்கீடு) 'No, no' என்று நீங்கள் சொல்வதில் பிரயோஜனம் இல்லை; நான் ஸ்பீக்கரிடம் பேசுகிறேன்;...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சுப்பராயன், அவர்களுக்கு நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களிடம் நான் பேசுகிறேன். (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் என்னிடம் மோத வேண்டிய அவசியம் இல்லை; தேவையும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. சுப்பராயன்:** நான் தங்களிடம் பேசிக் கொண்டு இருக்கிறேன். அவசியமே இல்லாமல் அமைச்சர் என்னுரையில் தலையிடுவது ஆத்திரம் மூட்டுகிற நடவடிக்கை என்பதை மட்டும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதை விடுங்கள்; நான் சொல்கிறேன், நீங்கள் ஆர்.எஸ்.எஸ்.-ஐப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னீர்கள். அவர் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டும் என்கிறார். நான் அனுமதி கொடுத்து இருக்கிறேன். இதிலே என்ன தப்பு? திரு. வேலாயுதன் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பொறுத்தவரையில் குறித்த நேரத்தில் துவங்கி, எந்த வழியாகச் செல்கின்றோம் என்று சொல்லி, அனுமதி பெற்று, அதே வழியாகச் சென்று, குறித்த நேரத்தில் முடிக்கக்கூடிய இயக்கம். இதுவரையில், ஆர்.எஸ்.எஸ்.-னுடைய நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு பிரச்சினை என்றோ அல்லது அந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும்போது யாரையாவது தாக்கினார்கள் என்றோ இதுவரை சம்பவம் கிடையாது. நேர்மாறாக, தமிழகம் முழுக்க அனைத்து மாவட்டங்களிலும் ஆர்.எஸ்.எஸ். இரத்த தான இலவச முகாம் நடத்திக்கொண்டு இருக்கிறது. டாக்டர் செரியன் போன்ற பெரியவர்கள் அதைப் பாராட்டி இருக்கிறார்கள். அதேபோன்று நாட்டில் பல சம்பவங்கள், அதாவது மோர்தானா அணை உடைந்தபோது; இஸ்லாமியர்களுக்கு என்றே தனியாக அந்த நோன்பு காலத்திற்காக தனியாக முகாம் நடத்தி பாதுகாத்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். யுத்தகாலத்தில் ஜெனரல் கரியப்பா அவர்கள் பாராட்டி இருக்கின்றார்கள்; ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராட்டி இருக்கின்றார்கள்; லண்டன் பி.பி.சி. கூட அகில உலக அளவில்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்கள் அதோடு உங்களுடைய விளக்கத்தை நிறுத்திக்கொள்ளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரத்யேகமான காரணத்தையொட்டி இந்தக் கவன ஈர்ப்பைத் தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், தங்களுடைய அறையில் இது பற்றி விவாதிக்கப்பட்டபோது, நான் சொன்ன கருத்து, 'தடை செய்யப்படாத இயக்கங்கள் தமிழ்நாட்டில், ஒரு நிகழ்ச்சியை நடத்துகிற காலத்தில், அந்த நிகழ்ச்சியைத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கில் இதுபோன்ற தீர்மானங்களைக் கொண்டு வருவது என்றால், இந்தக் கவன ஈர்ப்புக்கு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உள்ள மதிப்பு credit குறைந்துவிடும். எனவே, இதை

நீங்கள் பேசும்போது வேண்டுமானாலும் குறிப்பிடுங்கள்; பல மானியங்களிலே பேச வேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்போது குறிப்பிடுங்கள்; இதை ஒரு கவன ஈர்ப்பாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ கொண்டுவரத் தேவையில்லை' என்று சொன்னேன்.

ஆனால், எப்படியோ, சுப்பராயன் அவர்கள் அவர்களுக்குள்ள திறமையின் காரணமாக, இந்தப் பிரச்சினையை அவையில் எடுத்து வைத்து சில கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பற்றி என்னுடைய கருத்து என்ன என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். இன்றைக்குக்கூட ஏதோ, நான் அதை சமுதாய இயக்கம் என்று சொன்னதாகச் சொல்லி, ஒரு குற்றச்சாட்டை என்மீது சுமத்தி, என்னை ஆர்.எஸ்.எஸ். என்றே சுட்டிக்காட்டுகிற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் அரசியலுக்காக நிறையபேர் செய்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும் என்னைப் பற்றி. நாத்திகம் பேசுகின்ற நாத்திகர்களைவிட நான் நல்ல நாத்திகன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் அறிவார்கள்.

ஆர்.எஸ்.எஸ். சமுதாய இயக்கம் என்று நான் எந்தச் சூழ்நிலையிலே சொன்னேன்? முதலில் உள்ள வாக்கியத்தையும் அடுத்து வருகிற வாக்கியத்தையும் விட்டுவிட்டு, 'சமுதாய இயக்கம்' என்று சொல்லிவிட்டார் என்று குறிப்பிட்டார். சமுதாய இயக்கம் என்றால் எந்தச் சமுதாயத்தினுடைய இயக்கம் என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது— ஒவ்வொரு சமுதாயத்திற்கு ஒரு இயக்கம் இருக்கும். இரண்டு சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமைகள், வேற்றுமைகள் இருக்கலாம். ஏதோ ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக பாடுபடுகின்ற இயக்கம் என்கிறபோது நான் சொன்னேன். 'திராவிடர் கழகம்' போல என்று சொல்ல முடியாது. திராவிடர் கழகம், ஆர்.எஸ்.எஸ். இரண்டிற்கும் மகத்தான வேறுபாடுகள் உண்டு. முரண்பாடுகள் உண்டு. நான் திராவிடர் கழகத்திலிருந்து வந்தவன் என்று சொன்ன பிறகும்கூட ஆர்.எஸ்.எஸ். முத்திரையை எப்படியாவது எனக்கு குத்த வேண்டுமென்று பல பேர் கருதுகிறார்கள்.

நம்முடைய வேலாயுதன் அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.னுடைய தூய்மை, ஆர்.எஸ்.எஸ்.னுடைய நேர்மை இவற்றைப் பற்றிப் பேச அவருக்கும் உரிமை உண்டு. இந்தியாவிலே, பெரிய ஜனநாயக நாட்டில் அவரவர்களுக்கும் பல உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளில் தலையிட யாருக்கும் நியாயம் கிடையாது.





கோயம்புத்தூரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இது தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல என்ற காரணத்தாலும், ஜனநாயகத்திலே எந்த ஒரு கட்சினுடைய ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்துவதாக இருந்தாலும், அவ்வப்போது உள்ள சூழ்நிலைகளை எண்ணிப் பார்த்து, அன்றைக்கு உள்ள சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, கடந்த காலத்தில் நடந்தது, எதிர்காலத்திலே நடக்கும் என்பதையெல்லாம் அனுமானிக்காமல், அன்றுள்ள சூழ்நிலையை எண்ணிப் பார்த்து உரிமைகளை வழங்குவது என்பது காவல் துறையினுடைய கடமையாக இருந்து வருகிறது. இதுபற்றி முதலிலே, கோயம்புத்தூரிலே உள்ள காவல் துறை அனுமதி வழங்குவதற்கு முன்பு, ஒரு வேளை அனுமதி வழங்க மாட்டார்களோ என்கின்ற கருத்தோடு என்னிடத்திலே வந்து சில தலைவர்கள் பேசினார்கள். இந்த அனுமதி வழங்கப்பட வேண்டுமென்றெல்லாம் கேட்டார்கள். நானும் கோயம்புத்தூர் என்ற காரணத்தால் பல இடையூறுகள் வரக் கூடுமே என்று எடுத்துச் சொன்னதுண்டு. ஆனால் அவர்களெல்லாம் என்னிடத்திலே உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அமைதியான முறையில் நடத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இங்கு அனுமதியே கொடுக்கப்படவில்லை என்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. எனக்கு வந்த தகவல் அவர்கள் 3 இடங்களிலே அனுமதி கேட்டார்கள். 3 இடங்கள் வழியாக ஊர்வலம் செல்ல. ஒரு வழிதான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அனுமதியை அங்குள்ள போலீசார் கொடுக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதி கொடுத்திருக்கும்பட்சத்தில் ஜனநாயக நாட்டில் இவற்றையெல்லாம், தடை செய்யப்படாத ஒரு இயக்கத்தினுடைய நிகழ்ச்சியைத் தடுப்பது என்பது இயலாத காரியம். எல்லா வகையிலும் அமைதியாக நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். எல்லோரும் ஒத்துழைப்போம் என்கின்ற அந்த உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, உத்தரவாதம் அளித்தவர்களும் உத்தரவாதத்திற்கு ஏற்றபடி நடந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்போடு அமர்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-10

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) அனுமதியின்றி அவையில் எழுப்பப்பெறும் பிரச்சினைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் எனத் தலைவர் தீர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி உட்காருங்கள். நான் இதிலே, அவையின் நேரத்தில் ஒரு ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டாவது அவையில் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் பெரிய அமளி நடந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் என்னுடைய அறையிலே வந்து அனுமதி பெறாமல் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்குப் பின்னால் ஏகப்பட்ட விவகாரங்கள் நடைபெற்றன. அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டோம்.

என்னைப் பொறுத்தவரையில், அவையை முறையாக நடத்தவேண்டும். நாட்டு நடப்பை எல்லோருமே அவையிலே பேச வேண்டும் என்ற உணர்வோடுதான் நான் செயல்பட முயற்சி செய்கிறேன். முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல அறையிலே திரு. சுப்பராயன் அவர்கள் அனுமதி கேட்டார்கள். அனுமதி கொடுப்பதற்கு இல்லை என்று சொன்ன பிறகு, இது எனக்கு மானப் பிரச்சினை, நான் கட்டாயம் எழுப்பத்தான் வேண்டுமென்று சொல்லி எழுப்பியிருக்கிறார்கள். என்னிடம் அனுமதி வாங்கவில்லை.

எனக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம்—நான் இந்த நேரத்திலே இதைக் குறிப்பிட்டால் வேறுவிதமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்த மாண்புமிகு முதலமைச்சர் இல்லாவிட்டால் இந்த அவை எப்படி நடக்கும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திடீரென்று இன்று காலை 9¼ மணிக்கு வந்து இந்தப் பிரச்சினையிலே பேச வேண்டுமென்று சொல்கின்றீர்கள். சில காலங்களில் முதலமைச்சரே அவைக்கு வராத காலங்களும் உண்டு. அது யார் என்பதை நான் சொல்லத் தயாராக இல்லை. அது இப்போது விவாதத்திற்குத் தேவை இல்லை. அவைக்கு வருவதோடு மட்டுமல்லாமல் கேட்கின்ற கேள்விகளுக்கு உடனடியாக பதில் சொல்லக்கூடிய ஒரு ஆற்றல் படைத்தவர். ஒருவேளை நீங்கள் எழுப்புகின்ற கேள்விகளுக்கு என்னிடம் போதிய தகவல் இல்லை, நான் ஒன்றும் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டால் நான் வேறொன்றும் செய்ய முடியாது ஆகவே, நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வது,



கோயம்புத்தூரில் ஊர்வலம் நடக்கப் போகிறது, நாளைக்கு நடக்கப் போகிறது என்பது எத்தனையோ நாட்களுக்கு முன்பாகவே தெரியும். ஆகவே முதலிலேயே என்னுடைய அறைக்கு வந்து இதைப்பற்றி விவாதித்திருக்க வேண்டும், முதலமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கலாம். அதைவிட்டுவிட்டு இன்று காலை கேட்கிறீர்கள். நேற்றையதினம் டாக்டர் குமாரதாஸ் சொன்னதுபோல இன்று கன்னியாகுமரியில் பந்த் நடக்கப் போகிறது, ஆகவே எல்லா கட்சிகளும் சேர்ந்து அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அதனால் கண்டிப்பாக நான் சொல்கிறேன். இனிமேல் என்னுடைய அறையில் வந்து அனுமதி பெறாமல் எந்தப் பிரச்சினையை எழுப்பினாலும் அது குறிப்பேட்டில் இடம் பெறாது. இந்த முறை உங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றால் நீங்கள் அனைவரும் சேர்ந்து இந்த நாற்காலியிலே நான் உட்காருவதற்குத் தகுதியில்லை என்று சொன்னால் நான் மகிழ்ச்சியோடு வெளியேறுவேன். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய தலைவர் என்ற முறையில் தாங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு எப்படிப்பட்ட ஒத்துழைப்புத் தர வேண்டுமென்ற அடிப்படையில் சில கருத்துக்களைத் தாங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அதேபோல எந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எந்தப் பிரச்சினையைப் பற்றித் தரப்பட்டாலும் அதற்குரிய அமைச்சர் அதற்கான பதிலைப் பெறுவதற்கு இடையிலே காலம் தேவைப்படுகிறது. இன்று காலையிலே கவன ஈர்ப்புப் பிரச்சினை ஒன்று கல்வித் துறை தொடர்புடையதாக வருமானால் அந்தத் துறையிலே கேட்டு பதில் பெற்றுத்தான் அமைச்சர் தெரிவிக்க முடியுமே தவிர, பதில் பெறாமல் தெரிவிக்க முடியாது. ஆகவே, ஏற்கெனவே உள்ள ஒரு மரபின்படி அமைச்சருக்கு அனுப்பி, அவரும் அந்தச் செய்தியை குறித்து என்னால் முடியும் என்று சொன்னதற்குப் பின்னால்தான் இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அவையினுடைய பெருமையைக் காப்பாற்ற அமைச்சர் தகுந்த விளக்கம் சொல்ல துறையினுடைய கருத்து அவைக்குத் தெரியவேண்டும். அந்த வாய்ப்பையும் சேர்த்து வழங்க வேண்டுமென்று நான் நினைவூட்டிக்கொள்கிறேன்.

(திரு. லி. அய்யலுசாமி, திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்றனர்)

[2000 ஏப்ரல் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் 9¼ மணிக்குக் கொடுக்கவில்லை. 8.20 மணிக்கே கொடுத்துவிட்டேன். இன்னொரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9¼ மணிக்குக் கொடுக்கிறீர்கள் என்று உங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** இன்னொரு விஷயம், அங்கு ஊர்வலம் முதலில் அனுமதிக்கப்படவில்லை என்றுதான் சொல்லப்பட்டது. அனுமதிக்கப்பட்டது என்பது நேற்றுதான் எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் என்ன செய்ய முடியும்? நான் என்ன சொல்கிறேன் என்றால் (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், கொஞ்சம் உட்காருங்கள், திரு. சுப்பராயன், நீங்கள் பெரிய பிரச்சினை இருந்தால் அந்த ஊர்வலம் நடத்தப் போகிறார்கள் என்று சொல்லி நீங்கள் ஒரு தீர்மானம் கொடுத்து, இதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்றுகூட கொடுத்திருக்கலாம். அது வேறு. திரு. ஞானசேகரன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இரண்டு வாரங்களுக்கு முன்பே கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள்கூட இன்னும் பல அமைச்சர்களால் பதில் தரப்படாமல் அப்படியே வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் தங்களிடமோ முதலமைச்சரிடமோ கேட்டு அல்லது சில அமைச்சர்களிடமோ கேட்கக்கூடிய நிகழ்ச்சிகள் மட்டும்தான் எங்களுக்கு வருகிறதேயொழிய, மற்ற அமைச்சர்களுக்கு பல துறைகள் சம்பந்தமான பிரச்சினைகள் எல்லாம்கூட கொடுத்திருக்கிறோம். ஆனால் ஒன்றுகூட பதில் ரெடியாகாமல் எங்களுக்கு வராத காரணத்தால் எழுப்ப முடியவில்லை. நாங்கள் உங்களிடம் கொடுத்தபோது அந்த அறிவிப்பைப் பெற்று அந்த அமைச்சர்களே உங்களுடைய அலுவலகத்திற்குச் சொல்லி, தங்களிடமே சொல்லி இந்த நாளில் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னாலும் பரவாயில்லை.

ஆனால் இரண்டு வாரங்கள் ஆன பின்னாலும்கூட, ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு பதிலே வராமல் கிடப்பில் இருக்கின்றன. உடனடியாக தாங்கள் அதற்கும் ஒரு தீர்வு காண வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 12]

முற்பகல் 10-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதன்மூலம் ஏதோ ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு பதில் சொல்ல அமைச்சர்கள் தயாராக இல்லையென்கிற ஒரு பெரிய குற்றச்சாட்டை சுமத்திவிட்டதாக நண்பர் ஞானசேகரன் அவர்கள் கற்பனை செய்துகொள்ள வேண்டாம். ஒத்திவைப்புத் தீர்மானங்களை தினந்தோறும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதையும் மறந்துவிடக் கூடாது. நாள்தோறும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஏதோ ஓரிருநாள் எடுக்காமல் இருந்து இருக்கலாம். ஒத்திவைப்புத் தீர்மானங்களை மாத்திரம்தான் எடுத்துகொள்வது என்றால் அமைச்சர்கள் மானியங்களை படித்துவிட்டு வரவே தேவையில்லை. மானியங்கள் மீதே விவாதம் நடைபெறாது. அவ்வளவு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவையும் எடுத்துக்கொண்டால் மானியத்திலே விவாதம் நடைபெறாது. அதற்கு ஞானசேகரன் போன்றவர்கள் ஒத்துக்கொண்டால் ஒவ்வொரு நாளும் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்; எங்களுக்கும் வேலை சுலபம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பிரச்சினை வேறு இருக்கிறது. ஒரு நாளைக்கு இரண்டு தீர்மானங்களுக்கு மேல் நான் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று விதியே இருக்கிறது. இதில் யாரையும் குற்றஞ்சாட்டிச் சொல்வதுபோல் சொல்லவில்லை. நேற்றையதினம் ஒரு நிகழ்ச்சி நடந்ததிலே, எதிர்பாராதவிதமாக பிரச்சினை கிளப்பப்பட்டதனால் அந்த மானியக் கோரிக்கையிலே பேச வேண்டிய உறுப்பினர்கள் பலபேர் தங்கள் உரிமையை இழந்தார்கள். அது யார் என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது கட்சிப் பிரச்சினையை நான் கொண்டுவருவதாக ஆகிவிடும். ஆகவேதான் நான் சொல்லுகிறேன், என்னுடைய அறையிலே வந்து அனுமதி வாங்காமல் இனிமேல் இங்கே பேசினால் அது அவைக் குறிப்பிலே ஏறாது என்று நான் உத்தரவிடுகிறேன். இது உங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றால் நீங்கள் சொல்லுங்கள் நான் செய்ய வேண்டிய வேலையைச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பிரச்சினையையும் எடுக்க முடியாது. நீங்கள் ஒவ்வொரு நாளும் point of order எழுப்ப முடியாது. இப்போது அனுமதி கிடையாது.

## 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.**

**(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 14,27,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 93, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் புறம்போக்கு நிலத்தில் 2, 3 ஆண்டுகளாகப் பயிர் செய்து கொண்டு வரும் விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 61, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1118, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோவில், பள்ளபாளையம், பெத்தாம்பாளையம் கிராமங்களிலுள்ள நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 817, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் தொட்டிபாளையம் கிராமம் நேரு நகர் க.ச.எண் 301/1ஏ அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 403, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 485, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

*திரு எஸ்.வி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நான்குநேரி தாலுகா, களக்காடு ஒன்றியம், கீழக்கட்டளை ஆதிதிராவிடர் மக்களுக்கு ஆதீனம் நிலத்தைப் பிரித்துக் கொடுத்து அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 224, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 715, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 893, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 323, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்ற தொகுதியில், அரசுக்குச் சொந்தமான நிலங்களை நீண்டகாலமாக அனுபவித்து வருபவர்களுக்குப் பட்டா வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 359, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 426, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவில்பட்டி தொகுதியில் வறட்சியின் காரணமாக நில வரியை இரத்து செய்வது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1070, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 86, திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுமார் 30 வருடங்களாக விவசாயிகள் வசம் உள்ள நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 845, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 671, திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"10 ஆண்டுகளுக்கு மேல் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது போன்று பத்து ஆண்டுகளுக்கு மேல் நிலத்தை பயிர் செய்துவரும் விவசாயிகளுக்கும் பட்டா வழங்க அரசு ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 938, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4236, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2316, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிலங்களை புதிதாக சர்வே செய்து வருவாய்த் துறை மூலம் அவரவர் நிலங்களுக்கு வரைபடம் வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 427, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையை தலைமை இடமாகக் கொண்டு வருவாய் வட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 767, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா களியல் கிராமத்தில் வலிய ஏலா பகுதியில் கடந்த 60 ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 809, திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை வட்டாட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்தி போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2736, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2576, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 941, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 570, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரித்து திருவட்டாறைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய தாலுகா அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1162, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,27,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**(ஆ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 71,73,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 91, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றத்தால் பயிர்கள் நாசமாக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் அவர்களுக்கு அரசு இழப்பீடு கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 35, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1134, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியத்தில் 1999 மார்ச் மாதத்தில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட சேதாரத்திற்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 815, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 408, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"புயல், வெள்ளம், வறட்சி இவைகளால் தமிழகத்தில் தொடர்ந்து பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருவதை ஈடு செய்திட "தனி நிதியம்" ஏற்படுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 234, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 903, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 709, திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 635, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 545, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 285, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் இயற்கைச் சீற்றத்தினால் உயிர் இழந்தோர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 358, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 419, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தூத்துக்குடி மாவட்டத்தில் மழை பொய்த்துவிட்டபடியால் அம்மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1048, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1168, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 441, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த தொண்டியகாடு கடலோரக் கிராமமாக இருப்பதால், புயல் பாதுகாப்பகம் கட்டும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 810, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வெள்ளம், தீ, கடல் அரிப்பால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2584, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்களால் உடல் ஊனமுற்றவர்கள் பாதிக்கபடும்போது, உதவித் தொகை அதிகமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 565, திரு. ஜே. ஹேமசந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996-ல் குமரி மாவட்டத்தில் குழித்துறை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கெனவே அளித்துள்ள நிவாரணத் தொகையைத் திரும்பக் கட்ட நிர்ப்பந்தம் செய்வதைக் கைவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1110, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி, உடையான்குடி காட்டில் வசிக்கும் இருளர்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,73,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

### (இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45-இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 78,78,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"மழை மற்றும் தீயினால் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 24, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1132, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 814, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 410, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடுகள் முழுமையாகவும் விரைவாகவும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 271, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 906, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 277, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் பாம்புக்கடி, இதர விஷ ஜந்துக்களினால் இறக்கின்ற நபர்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையை இரு



மடங்காக உயர்த்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 364, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1051, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1178, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2328, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 811, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வேறு விபத்துக்களினால் இறந்தோரின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 940, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடும்பத் தலைவர் இறந்தால் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2808, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 10-25

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில், நில வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய தலைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதிலே, தமிழில் உள்ள குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவற்றை அவையின் நடவடிக்கைக் குறிப்புகளில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் தெரிவிக்கிற மேலான கருத்துகளையும், யோசனைகளையும் கேட்டு, பின்னர், அரசு சார்பிலே அளிக்க வேண்டிய விளக்கங்களையும், முடிவுகளையும் இறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன் என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, ஏற்கெனவே 105 வருவாய் கிராமங்களைக் கொண்டது. மற்ற தொகுதிகள் எல்லாம் தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. அதேபோன்று, புதிதாக உருவாக்கப்பட்ட ஆலங்குளம் தாலுகா 35 கிராமங்களைக் கொண்டது. வி.கே. புதூர் 24 கிராமங்களைக் கொண்டது. செங்கோட்டை 19 கிராமங்களைக் கொண்டது. இதுபோன்ற குறைவாக எண்ணிக்கையுள்ள வருவாய் கிராமங்களைக் கொண்ட தாலுகாக்கள் எல்லாம் உருவாக்கப்பட்டும், அம்பாசமுத்திரம் தாலுகா, இன்னும் 105 வருவாய்

@ *171 முதல் 206 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.*

[திரு. பா. வேல்துரை] [2000 ஏப்ரல் 12

கிராமங்களைக் கொண்டிருந்தாலும்கூட, சேரன்மகாதேவி தனியாக தாலுகாவாக பிரிக்கப்படாமல் இருப்பது மிகுந்த வேதனையான விஷயம். கடந்த 20 ஆண்டுகளாக, அதைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் எல்லாம் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சேரன்மகாதேவியைத் தனித் தாலுகாவாக உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வீரவநல்லூரிலே 92 ஏழைகளுக்கு, 92 இலவசப் பட்டா வழங்கப்பட்டது. அந்தப் பட்டா, வீடுகள் கட்டுவதற்குப் பொருத்தமில்லாத இடம் என்ற காரணத்தால், அந்த இடங்களுக்குப் பதிலாக மாற்று இடம் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுத்தும், ஆறாண்டுகளாக, இன்னும் அதற்கான பட்டா வழங்கப்படவில்லை. அந்த 92 பட்டாக்களை, ஏழை நெசவாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்திலே, மருதம்புத்தூர் உயர்நிலைப் பள்ளிக்குப் புறம்போக்கு இடம் அரசிடம் கேட்டும், பல ஆண்டுகளாக இடம் ஒதுக்கப்படாமல் இருக்கிற காரணத்தால், புதிய கட்டடங்கள் அந்தப் பள்ளிக்குக் கட்ட முடியவில்லை. அரசுக்கு எத்தனையோ முறை கோரிக்கைகள் வைத்தும், இதுவரை அந்த நிலங்கள் ஒப்படைக்கப்படவில்லை. உடனடியாக, மருதம்புத்தூர் உயர்நிலைப் பள்ளிக்கு அந்த இடத்தை ஒப்படைப்பு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சேரன்மகாதேவி பேரூராட்சியிலே, பொழிக்கரை என்ற ஊரிலே கருத்தபாண்டி என்ற ஒருவர், அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்துவந்தார். அந்த நிலத்திலே இருந்த மரம், மழை நேரத்திலே விழுந்துவிட்டது. அந்த மரத்தை, ரெவின்யூ இலாகாவே வந்து வெட்டி ஏலம் போட்டு, அரசு கஜானாவில் பணத்தைச் செலுத்திய பிறகும்கூட, அந்த விவசாயி 2,500 ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்று இன்றுவரை, ஆறு ஆண்டுகளாக நோட்டீஸ் அனுப்பப்பட்டு வருகிறது. அந்த ஏழை விவசாயி, அரசுக்கு அனுப்பாத கோரிக்கைகள் கிடையாது. முதல்வர் அவர்களுக்கும், ஜனாதிபதி, பிரதமருக்கெல்லாம் அவர் பல மனுக்களை அனுப்பிவிட்டு, 2,500 ரூபாய் கட்ட முடியாமல் இருக்கிறார். அந்த அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**



2000 ஏப்ரல் 12] [திரு. பா. வேல்துரை]

அதேபோன்று, ஏழையெளியவர்களுடைய நிலத்தை, அந்தந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஆதிக்க வர்க்கத்தினர் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அவர்களை வம்புக்கு, வழக்குமன்றத்திற்கு இழுத்துச் செல்லுகிற நிலைமை ஏற்படுகிறது. அந்த ஏழை, 'என்னுடைய நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துவிட்டார்கள்' என்று சொல்லி, காவல் நிலையத்திற்குச் சென்றால், 'இது சிவில் வழக்கு; எங்களிடத்திலே வராதீர்கள்; நீங்கள் சிவிலிலே பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்கிறார்கள். அங்கே ஏழைகள் கோர்ட்டுக்குச் சென்று வழக்குகளைச் சந்திக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, சார் ஆட்சி அலுவலர்கள் மட்டத்திலே அந்த விசாரணையை முடித்து, அந்த ஏழைகளுக்கு உரிய பாதுகாப்பை அரசு வழங்க வேண்டும். அப்படி யார் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களோ, அதற்கான அரசினுடைய செலவுத் தொகையை அவர்களிடத்திலேயிருந்து வாங்கவேண்டுமே தவிர, அந்த ஏழைகள் கோர்ட்டுக்குச் செல்கிற நிலையை இந்த அரசு நிச்சயமாகத் தடுத்து நிறுத்தவேண்டும். ஏழைகள், ஏழை விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் பகுதியிலே, ஆற்றிலேயிருந்து ஏகப்பட்ட மணல் கேரளாவுக்குக் கடத்துகிறார்கள். ஏதோ ஒன்றிரண்டு லாரிகளைப் பிடித்துப் போடுகிறார்கள். மற்றபடி, நிறைய மணல் கேரளாவுக்குக் கடத்தப்படுகிறது. அந்த மணல் கடத்தப்படுவதை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே சுமார் 5,000 ரேஷன் கார்டுகள் இன்னும் வழங்கப்படவில்லை. தாலுகா ஆபிஸிலே சென்று கேட்டால் — ஃபோட்டோ ஒட்டி, அப்ளிகேஷன் எல்லாம் அனுப்பியாகிவிட்டது; — 'உங்களுடைய அப்ளிகேஷன் தொலைந்துவிட்டது; புதிதாக அப்ளிகேஷன் கொண்டு வாருங்கள்' என்று சொல்கிறார்கள். இது எந்த வகையில் நியாயம்? ஏழைகள் எத்தனை தடவை மனுக்கள் போட முடியும்? எனவே, ரேஷன் கார்டுகளை உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

அதுபோன்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா வழங்கப்படுகிறது, அந்தப் பட்டா வழங்கினால், 6 மாதத்திலே அவர்கள் வீடு கட்ட வேண்டுமென்று சொன்னால், அவர்கள் தொகுப்பு வீடுகள் கிடைக்குமா

என்று ஏங்கிக்கொண்டு இருக்கிறார்கள். தொகுப்பு வீடுகள் இரண்டு வருடம், மூன்று வருடம் கிடைக்கவில்லையென்று சொன்னால், அந்தப் பட்டாவை இரத்து செய்கிறார்கள். இது மிகவும் மோசமானது. ஏழைகளுக்கு மிகவும் மோசமான ஒரு நிலை. ஏழைகளுக்கு வழங்கப்படுகின்ற பட்டாக்களை உடனடியாக இரத்து செய்யக்கூடாது. உண்மையான நிலையை அறிந்து, அந்தப் பட்டாக்கள் இரத்து செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, கிராமங்களிலே முறைகேடாக பட்டா வழங்குகிறார்கள். அதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்கு, பட்டா பணத்தைப் பெற்றுக்கொண்டு வழங்குகிற முறை நிறைய நடக்கிறது. பட்டா வழங்குவதிலே, அந்தந்த ஊரிலே கிராம சபையைக் கூப்பிட்டு, அந்தப் பொதுமக்கள் மத்தியிலே வைத்து தான் பட்டா வழங்க வேண்டும். எங்களுக்கெல்லாம் யாருக்குப் பட்டா கொடுக்கிறார்கள் என்பதே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே தெரியாது. நாங்கள் பரிந்துரை செய்கிற ஆட்களுக்கும் கொடுக்கிறது கிடையாது. இதுவெல்லாம் தவறான நடைமுறை. இந்த முறையை மாற்றி, மக்கள் சபைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த அரசு, மக்கள் சபையைக் கூட்டி, கொடுத்தீர்கள் என்று சொன்னால், போலியாக வாங்குவது, இந்த மக்கள் மன்றத்திலே தெரிந்துவிடும். அதனாலே, பட்டா கொடுப்பதை, ஓப்பனாக, பொதுமக்கள் மத்தியிலே கொடுக்க வேண்டும். எங்களுக்கெல்லாம் தெரியாமல், மக்கள் பிரதிநிதிகளுக்குத் தெரியாமல் பட்டா வழங்கக்கூடாது என்பதைக் கண்டிப்பாக நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆறுகள், ஏரிகளில் எல்லாம் நிறைய ஆக்கிரமிப்புக்களை அகற்ற வேண்டுமென்று சொல்லி, சட்டமன்றத்திலே வந்தவுடனே, முதல் கூட்டத் தொடரிலேயே எல்லோரும் சொன்னார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், திருநெல்வேலிக்கு வந்திருந்தபோது கூட, மாவட்ட ஆட்சித்தலைவர் விரைந்து ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுப்பார் என்று அமைச்சர் அவர்கள் உறுதி சொன்னார்கள். ஆனால், ஒரு ஆக்கிரமிப்புகூட இன்னும் எடுக்கவில்லை. உதாரணத்திற்கு ஒன்றை ஆதாரத்தோடு சொல்கிறேன். நாங்குநேரியில் ஒரு கால்வாய், வடக்கு பச்சையாறு திட்டத்திலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே, 300 மீட்டர் தூரத்திற்கு ஒரு வாய்க்காலை வெட்ட முடியாமல், தவசிகனி என்பவர் அங்கே ஒரு



ஸ்டே வாங்கியிருக்கிறார். தன்னுடைய சொந்த நிலம் என்று சொல்லி அதே ஆள், ஆற்றுப் புறம்போக்கிலே ஒன்றரை ஏக்கரை வைத்துகொண்டு, அவருடைய கிணறு புறம்போக்கிலே இருக்கிறது. கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மரமும் இருக்கிறது. ஆனால், அவர் மீது அந்த மாவட்ட நிர்வாகம், இதுவரை, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய knowledge-க்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு மெத்தனமாக மாவட்ட நிர்வாகம், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் நடவடிக்கை எடுக்கவில்லையென்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நிறைய குளங்கள், வாய்க்கால்கள், ஆறுகள் எல்லாம் ஆக்கிரமிப்பு. ஆற்றினுடைய போக்கே மாறுகிறது. ஆறு ஒரு பக்கத்திலே இருக்கிறது. ஒரு ஆள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாலே பல உண்மையான பட்டாதாரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆற்றினுடைய போக்கே மாறுகிறது. ஆக, இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இன்றுவரை, கடந்த காலத்திலும் சரி, இந்த ஆட்சி வந்த பிறகும் சரி, ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை நான் கூறிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, 10, 20 நாட்களுக்கு முன்புகூட, அங்கே, எங்கள் பகுதியிலே பெரிய கலவரம் வருகின்ற சூழ்நிலைகூட ஏற்பட்டது. இந்த நிலத் தகராறிலே. அதாவது, நிலம் யாருக்குச் சொந்தம் என்பதே தெரியாமல், பவர் போட்டு வைத்துக்கொண்டு, இந்தப் பட்டா வழங்குவது. இந்தப் பத்திர ரிஜிஸ்ட்ரேஷன் எல்லாம் முறையானபடி இல்லாததால் நிறைய இடத்திலே, கட்டப் பஞ்சாயத்து. எங்கள் பகுதியில் நெல்லை மாவட்டத்திலே, இன்றைக்கு சண்டை, வெட்டுக்குத்து நடக்கிறது என்று சொன்னால், இந்த நிலப் பிரச்சினை, பட்டாப் பிரச்சினையாலே வருகிற அடிதடி சண்டைதான் அங்கே அதிகம். கட்டப் பஞ்சாயத்து வைத்து, அங்கே பேசி, அங்கே ஒரு தீர்வு காண்பது, அது முடியாமல் போனபிறகு, வெட்டுக்குத்து என்கின்ற அளவிற்கு மிக மோசமாக, அங்கே, எங்களுடைய மாவட்டத்திலே, ஆக்கிரமிப்பின் காரணமாக, ஆதிக்கச் சக்திகளின் காரணமாக, பல தவறுகள் நடப்பதை, இந்த அரசு கண்டும் காணாமலும் இருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, வி.ஏ.ஓ.-க்களுக்கு சின்ன கிராமம், அங்கே குடியிருக்க வீடு கிடையாது. வி.ஏ.ஓ.-க்கள் எல்லாம், அந்த ஊரிலே இருப்பது கிடையாது. வேறு ஊரிலே, எங்கேயோ இருக்கிறார்கள். ஏனென்றால், குடியிருக்க வசதி கிடையாது. வி.ஏ.ஓ.-க்கு எல்லாம் அந்தந்த வருவாய் கிராமங்களிலே வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். ஏதாவது ஒரு சின்ன வீட்டை கட்டிக் கொடுத்தால்தான் அங்கே உட்கார முடியும். அதனால், வீடு கட்டிக் கொடுக்கவில்லையென்று சொன்னால், நிச்சயமாக அவர்களை, அந்தக் கிராமத்திலே இருக்கச் சொல்வதிலே நியாயம் இல்லை. எந்த வீட்டிலே போய் இருப்பார்கள். வாடகைக்கு வீடு இல்லை. அதனாலே, வருவாய் கிராமங்களிலே குடியிருக்க வருவாய் அதிகாரிகளுக்கு வீடு, ரெவின்யூ அதிகாரிகளுக்கு ரெவின்யூ ஃபிர்கா செண்டரிலே அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அதைச் செய்தால்தான், அவர்களை அந்தக் கிராமத்திலே இருங்கள் என்று சொல்ல முடியும்.

அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லையென்று சொல்கிறார்கள். அவர்களும் சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் வருகிறார்கள். அவர்களுக்கு, பதவி உயர்வு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஓய்வூதியம், 10 வருடத்திற்கு குறைவான சர்வீஸ் இருந்தால் ஓய்வூதியம் வழங்க முடியாது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, அவர்கள் சர்வீசில் இருந்து, பணியிலிருந்து நீக்கப்பட்டவர்கள், எம்.ஜி.ஆர். காலத்திலே நீக்கப்பட்டார்கள். அந்தப் பணியையும் அவர்கள் சர்வீசிலே எடுத்து, அவர்களுக்கு அந்த ஓய்வூதியத்தை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பத் தலைவர் இறந்துவிட்டாலோ அல்லது ஊனமுற்றாலோ, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவித் தொகை உடனடியாக கிடைப்பதில்லை. ஏனென்று சொன்னால், வாரிசு சான்றிதழ் வாங்குவதற்கு பல மாதங்கள் ஆகிறது. வாரிசு சான்றிதழ் கிடைப்பதில்லை. இதற்கெல்லாம் ஒரு குறைந்தபட்ச கட்டணத்தை வைத்துகூட, ஒரு மாதத்திலே வாரிசு சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்கின்ற அளவிற்கு, நீங்கள் இதற்கு ஒரு சட்டத்தைப் புதிதாக உருவாக்கினால், இறந்தது உண்மை, அந்த ஊரிலே வி.ஏ.ஓ. இருக்கிறார். Revenue Inspector இருக்கிறார். அவருக்கு தெரியும். யார், யார் வாரிசு என்பது. உடனடியாக விசாரித்து, உடனடியாக அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கலாம். உடனடியாக நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில் பல உண்மைகள் நிறைய இருக்கின்றன. எனவே, அதை நீங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10-35

அதுபோன்று அம்பாசமுத்திரம், தாலுகாவிலே சிவந்திபுரம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே எல்லா வளர்ச்சிப் பணிகளும் நடந்திருக்கின்றன. ஆனால், அந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நடந்த கிராமம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இடம். 1965-லே மானியமாக இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழே அந்தக் கிராமத்தை எடுத்திருக்கிறார்கள். அந்த கிராமத்திலே குடியிருப்புகளுக்கு இன்னும் பட்டா கொடுவில்லை. அந்த விவசாயிகளுக்கு நிலத்துக்குப் பட்டா கொடுக்கவில்லை. ஆனால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நிறைவாக நிறைவேற்றியிருக்கிறார்கள்; நல்லபடியாக நடந்திருக்கிறது என்று அந்த ஊர் மக்கள் சொல்கிறார்கள். ஆனால், இந்தப் பட்டா வழங்காததினால், அரசு கடனோ, வங்கிக் கடன்களோ வாங்கி அவர்கள் எந்தவிதமான முன்னேற்றத்தையும் பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்த ஊருக்கு ஏற்கெனவே நிலத்தை நாம் எடுத்துவிட்டோம். அரசாங்கம் எடுத்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா கொடுப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அதை உடனடியாக அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, என்னுடைய தொகுதியிலே நிறைய பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு-கல்லிடைக்குறிச்சியிலே ஓர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்கு இடமில்லை. ஆனால், புறம்போக்கு நிலம் நிறைய இருக்கிறது. அந்தப் புறம்போக்கிலே ஒரு ஏக்கர் நிலத்தை வேண்டுமென்று சொல்லி அவர்கள் கேட்கிறார்கள். கலெக்டருக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். எல்லா இடத்திற்கும் தகவல் கொடுத்திருக்கிறோம். எனவே, பள்ளிக்காவது உடனடியாக புறம்போக்கு நிலங்களை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டு, இந்த அருமையான வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மீதான மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கை மீதான எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே கூறும்போது, அரசு புறம்போக்கு நிலத்திலோ அல்லது தரிசு நிலங்களிலோ 10 ஆண்டுகள் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதோடு, அங்கே ஐந்து ஆண்டுகள் அல்லது மூன்று அல்லது இரண்டு ஆண்டுகள்கூட அவர்கள் குடியிருந்தால் அவர்களுக்கும் பட்டா வழங்கவேண்டுமென்று அறிவித்திருப்பதை உண்மையிலே வரவேற்கிறேன். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்திலே, அனைத்து மாவட்டங்களும் கணினி மயமாக்கப்பட்டு அது இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது உண்மையிலே தமிழக மக்கள் அனைவராலும் பாராட்டப்பட்டு, வரவேற்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அரசு உத்தரவுகள் எல்லாம் இன்றைக்கு எளிமையாகச் சென்றடைவதற்கு கணினிமயம் ஏதுவாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இதனைத் தொடர்ந்து, அனைத்து வட்டங்களும் கணினிமயமாக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இப்படிப்பட்ட கணினிமயமாக்கும் திட்டம் இன்றைக்கு அனைத்து துறைகளிலும் வழங்கப்படுவதை குறித்து நான் நமது முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்குத் தமிழகத்திலே அண்மையிலே பெய்த மழையின் காரணமாக, திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் மாவட்டங்கள் மழை வெள்ளத்தினால் அதிமாக பாதிக்கப்பட்டதால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதையெல்லாம் கருத்திற்கொண்டு ஏறத்தாழ நாற்பது கோடி ரூபாய் அந்த மாவட்ட மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு வெள்ளத்தால் உயிரிழந்தவர்களுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் பதினைந்தாயிரம் ரூபாய் வழங்குகிறார்கள். அதை இருபதாயிரமாக உயர்த்தித் தந்தால், அந்த மக்களுக்கு நன்றாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.



அதேபோல பாதிக்கப்பட்ட குடிசைக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, பகுதியாக பாதிக்கப்பட்ட அந்த குடிசைக்கு ஏறத்தாழ ஆயிரம் ரூபாயாவது வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இறந்த கால்நடைகளுக்கும் நம்முடைய அரசு உதவி வழங்குகிறது என்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள், ஏறத்தாழ பல கோடி ரூபாய்க்கு பயிர்கள் சேதப்பட்டிருக்கின்றன. அந்தப் பயிர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அண்மையில் பெய்த மழையின் போது மாநில அரசின் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக, இன்றைக்கு அதிக நஷ்டங்கள் எல்லாம், சேதங்கள் எல்லாம் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை பெருமையோடு இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நம்முடைய அரசு பல்வேறு நிலைகளிலே இன்று நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறது என்பதை இங்கே மனதாரப் பராட்டக் கடமைப்பட்டுள்ளேன். குடும்பத் தலைவர் இறந்தால், நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏறத்தாழ ரூ. 5,000-த்தை 7,500 ரூபாயாக ஆக்கினார்கள். அதன் பிறகு இன்றைக்கு 10,000 ரூபாயாக அறிவித்து, அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை ஒரு காலக்கட்டத்திலே நான் 15,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-40

சாலை விபத்திலே இறந்தால் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 10,000 ரூபாய் வழங்குகிறார்கள். அதை 15,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. பா. துரைசாமி] [2000 ஏப்ரல் 12

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழகத்திலே அதிக குடிசைப் பகுதிகள் இருப்பதினாலே, தீ விபத்து அதிகமாக நடைபெறுகின்றது. அண்மையிலேகூட என்னுடைய தொகுதியிலே கொட்டரை என்கிற ஊரிலே ஏறத்தாழ 75 வீடுகள் தீக்கிரையாகி நாசமாகிவிட்டன. அங்கே மக்களை சந்திக்கிறபோது, அவர்கள் எல்லாம் எங்கள் வீட்டிலே வந்து 10,000 ரூபாய் காணாமல் போனது. நகை, நட்டுகள் எல்லாம் போனது, வீடுகளையெல்லாம் இழந்து தவிக்கின்றோம் என்றார்கள். எனவே, நீங்கள் வழங்குகின்ற அந்த நிதி போதுமானதாக இல்லை என்று என்னிடத்திலே முறையிட்டார்கள். எனவே, அவர்களுக்கு இன்றைக்கு வழங்கப்படுகின்ற 500 ரூபாயை 1,000 ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். அந்த நிதி போதாது, குடிசைகள் கட்டுவதற்குக்கூட அந்த நிதி போதாது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவு செய்து அந்த குடிசைவாழ் மக்களுக்கு 5,000 ரூபாயாவது உயர்த்தித் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, முதியோர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்துதான் 100 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். எனவே, அப்படிப்பட்ட நிலையிலே நம்முடைய தமிழக அரசு சிறப்பாக பணியாற்றுவதை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டமானது, ஏறத்தாழ 75 பஞ்சாயத்துக்களையும், சுமார் 200 கிராமங்களையும் உள்ளடக்கியது. இதுதான் இந்த மாவட்டத்திலே பெரிய வட்டமாகும். ஆகவே, இதனை இரண்டாகப் பிரித்து ஆலத்தூரை மையமாகக்கொண்டு ஒரு தனி வட்டமாக அறிவிக்குமாறு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பெரும்பாலான பட்ஜெட் கூட்டத் தொடரிலே பேசும்போதுகூட இதை நான் வலியுறுத்தி வருகிறேன். காரணம் என்னவென்றால், இந்தப் பகுதி மக்கள் மாவட்டத் தலைநகரான பெரம்பலூரைத் தாண்டி ஏறத்தாழ 75 கிலோ மீட்டர் தூரம் குன்னத்திற்கு வரவேண்டியிருக்கிறது. எனவே, செட்டிக்குளம் பகுதியில் முன்பேகூட பல பிரச்சினைகள் இருந்தாலும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட ஒரு வாய்ப்பு உள்ளது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், சென்ற ஆண்டே இதைப்பற்றி தனி தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். எனவே,



2000 ஏப்ரல் 12] [திரு. பா. துரைசாமி]

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக அந்த ஆலத்தூரை தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலத்தூரை தனி வட்டமாக அறிவிக்கிற காலக்கட்டத்திலே எங்களுடைய குன்னம் வட்டத்தை ஒரு கோட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குன்னம் வட்டத் தலைநகராக இருப்பதால், அந்த வட்டத்திற்கு இன்னும் அலுவலகங்கள் வரவில்லை. எனவே, உடனடியாக சார்நிலை கருவூலம், சார்பு பதிவாளர் அலுவலகம், குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள், மத்தியக் கூட்டுறவு நிலவள வங்கிகள், பேருந்து டெப்போ ஆகியவற்றை உடனடியாக அமைத்துத்தர வேண்டுமாய் நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை 60 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவித்தார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, அதை மேலும் 75 இலட்சம் ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்ற முறை பேருந்துகளுக்கு இரண்டு வழித்தடங்கள் ஒதுக்கப்பட்டன. அது மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைத் தந்தது. எனவே, மீண்டும் அதை நடைமுறைப்படுத்தி இந்த முறையும் இரண்டு தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு துறையூர் எங்களுடைய மாவட்டத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை, எனவே, உடனடியாக துறையூர் வட்டத்தை எங்களுடைய பெரம்பலூர் மாவட்டத்தில் இணைத்து எங்கள் ஒட்டுமொத்த மாவட்டத்திற்கு உதவிடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களது தொகுதிக்கு கூடுதலாக சாலைகள், கூடுதலாகப் பாலங்கள் அமைத்துத் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, நல்ல வாய்ப்பு வழங்கியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. இராஜ ரெட்டி.

*THIRU S. RAJA REDDY: Hon'ble Deputy Speaker Sir, I would like to express my thanks for giving me the opportunity to speak on the revenue on behalf of the Communist Party of India. I want to express my views on land administration particularly grant of house sites, assignment of cultivable lands, eviction of unauthorised encroachments, land acquisition and land reforms. It is given in the Policy Note that there are large scale encroachments of poramboke lands mostly by poor people for a long time. A high level committee recommended regularisation of those encroachments which are 10 years old and are located on such poramboke lands which are not required for Government purposes and the Committee is headed by a Collector. There is a confusion. Most of the encroachments are on tanks, mandaveli and grassing grounds. The tanks have no ayacuts and silted up and grassing grounds are not used for grassing grounds. What I want to say as those encroachments which are not for public use should be assigned irrespective of classification and clear guidelines should be given to officials. Otherwise the very purpose of the scheme will be totally defeated. M.L.As. should also be included in that committee.

முற்பகல் 10-45

Encroachments of temple lands should also be considered. An extent of 5 cents in villages, 3 cents each in Municipalities, Corporations and Town Panchayats should be assigned. Even Kolappan Committee recommended assignment of 5 cents in villages.

Assignments of cultivable lands to landless poor is given on poramboke as well as surplus lands acquired from land owners enjoying lands over ceiling limit.

I want to bring to the notice of the Government that cultivable poramboke lands are assigned in Dharmapuri District except Denkanikottai and Hosur Taluks.

I have been raising this issue even earlier on the floor of this house and even Hon'ble Minister for Revenue assured me that the issue will be considered. The ban was imposed by the D.M.K. Government during the period 1989-90.



The ban on assignments of cultivable lands in these two taluks is unjust and we have a feeling that you are either misinformed by High Level Revenue officials or discriminating against thousands of landless poor peasants. Their livelihood is dependent on these lands and there is no other source of living. When, Hon. Minister Mullaiventhan and Hon. Mayor Thiru M.K. Stalin visited Denkanikottai, they assured in the public meeting that the issue will be represented to the Hon. Chief Minister. I appeal to the Hon. Minister to consider the issue on humanitarian grounds and give pattas to the landless poor.

In my constituency 800 acre of land was declared surplus in Nellumaru Agraharam in 1980. Even after 20 years pattas are not given to cultivating tenants. They have paid first instalment of compensation to the Government. The land was surveyed. But, pattas are not given. I request to give pattas as early as possible.

Fertile cultivable surplus land is being given to Social Forestry. There are thousands of acres of degraded waste land are available for forest development. I request the Hon. Minister not to give the above surplus land to social forestry and distribute the land to the landless poor. Patta land is acquired by Adi Dravidar Welfare Department for giving house site pattas to Adi Dravidas. But in sixteen villages land owners went to court and got stay orders.

In one village called Salivaram, Gazette Notification was made in 1957. But even after 43 years the stay is still in force. I request you to appoint a Special Pleader to vacate the stay.

Revenue Courts were established in 1955. According to the Performance Report upto 29th February 2000, 2,372 cases were filed and only 133 cases were disposed of, pending 2,239 cases. In 45 years, only 138 cases were disposed of. These are drain on our State's finance and I request you to abolish the Revenue Courts altogether and withdraw cases filed against tenants.

According to Hon. Member Mr. Palaniswamy, if a farm labourer dies, Central Government gives Rs.50,000. I request the State Government to get this amount from the Central Government and give it to the family of the deceased labourer.

When fire accidents occur no compensation is given to the Commercial Establishments. I request the Government to give compensation to Commercial Establishments and enhance the compensation paid to hut dwellers to 1,000/-.

We have Land Ceiling Act. But Real Estate Companies maintain hundreds of acres of land. Because of them the very meaning of Land Ceiling Act is lost. I request the Government to abolish Real Estates.

We have been requesting in this House to build a bus stand in Denkanikottai and Hon. Minister who came for campaigning for local body elections assured in the campaign that the bus stand will be built in the Chinna Eri where the people requested. The Town Panchayat is ready to pay the land value. I request the Hon. Miniser to transfer the land to local administration.

Ration cards are not given to eligble persons in many villages. So, I request the Hon. Minister to see that ration cards are given to eligible persons. In many areas in our Constituency the lands are registered in benami names and when they are registered in benami names, Poramboke lands are also encroached. So, I request you to evict the real estate companies from poramboke lands and distribute them to poor farmers.

Thank you for giving the opportunity.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் நிதியாண்டில் வருவாய்த் துறை மானியத்தில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைமுறை தலைமுறையாக கிராம முன்சீப்பாக இருந்த குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் வருவாய்த் துறை மானியத்தில் பங்கேற்பதைப் பெருமையாகக் கருதுகிறேன். வருவாய்த் துறை மற்ற துறைகளுக்கு, தாய்த் துறையாக விளங்குவது உண்மை. வருவாய்த் துறைக்கு என்று நீண்ட நெடிய வரலாறு உண்டு. மன்னர்கள் காலத்தில், அதுவும் குறிப்பாக சோழ மன்னர்கள் காலத்தில், நில வரி, மகசூல் வரி, நீர் வரி



வசூலித்துள்ளனர். நில அளவைக்கு அலுவலர்கள் நியமித்துள்ளனர். நிலங்களைத் தானமாக பண்டிதர்களுக்கு, புலவர்களுக்கு, போர்ப் படைத் தளபதிகளுக்கு வழங்கியதற்கு சரித்திரத்திலே ஆதாரம் உண்டு. ஆங்கிலேயர்கள் காலத்தில் வருவாய்த் துறையில் பல மாற்றங்களைச் செய்துள்ளனர். நிலச் சீர்த்திருத்தங்களைச் செய்துள்ளார்கள். முதல்வர் கலைஞர் ஆட்சியில் வருவாய்த் துறை நவீன மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு கல்லணையில் விவசாயிகளுக்கு பாசன நீர் திறந்துவிடும் நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள். கடந்த 20-2-2000 அன்று திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைத்தும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள 8 வட்டாட்சியர் அலுவலகங்களில் இந்தியாவிலேயே முதன்முதலாக கணினி மூலமாக அலுவலகப் பணிகளைத் தொடங்கி வைத்தும் சிறப்பித்தார்கள். அதற்காக திருவையாறு அனைத்து மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் சிட்டா, அடங்கல் நகல், பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள், முதியோர் உதவித் தொகை அனுப்பும் பணி போன்ற பணிகளை பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் இடைத்தரகர்கள் இன்றி மிக விரைவாகக் கிடைக்க இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி மூலம் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். இந்தப் பணிகளை விரைந்து நிறைவேற்ற கலைஞர் அரசுக்கு துணை நின்ற மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளைப் பாராட்ட நான் கடமைப்பட்டுள்ளேன்.

கணினியில் இன்றையதினம் 'இ-மெயில்' மூலமாக துறையினுடைய தபால்களை அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அரசுக்கு T.A., D.A. போன்ற மெசஞ்சர் மூலம் அனுப்புவதற்கு ஆகும் செலவு நிச்சயமாக மிச்சமாகும். இந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய மாவட்டங்களைப் பிரித்து இன்றையதினம் நிர்வாக வசதிக்காகச் செய்துள்ளதால் பொதுமக்கள் அரசின் திட்டங்களினால் விரைவாகப் பயனடைய முடிகிறது. தமிழகத்தின் மக்கட்தொகைக் கணக்கெடுப்புப்பற்றி அறிவேன். எனினும், எதிர்காலத்தில் பெரிய வட்டங்களைப் பிரிக்க

வேண்டும். உதாரணமாக சென்னையில் 5 வட்டங்கள் இருக்கின்றன. அவற்றை 10 வட்டங்களாகவாவது குறைந்தபட்சம் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சாவூர், திருவையாறு வட்டங்கள் இன்றைக்குப் பெரிய அளவில் உள்ளன. ஏராளமான வீடுகள், கிராமங்கள் உருவாகி உள்ளன. மக்கட்தொகையும் அதிகரித்துள்ளது. தஞ்சை, திருவையாறு வட்டங்களில் சில வருவாய் கிராமங்களையும் இணைத்து, பூதலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் பிரிக்க வேண்டுகிறேன்.

நீதிபதி இராமனுஜம் கமிட்டி பரிந்துரையின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த மனுநீதி முகாம், சேவை மையம் தஞ்சை மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுகின்றது. வட்டாட்சியர் அலுவலங்களில் காலை 10½ மணிக்கு தொடங்கி மதியம் 2 மணி வரை துணை வட்டாட்சியர் தலைமையில் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறுவதும், சில மனுக்கள் மீது 3 நாட்களில், 5 நாட்களில், ஒரு வாரத்தில், 30 நாட்களில் என காலதாமதமின்றி மனுக்களுக்கு தீர்வு ஏற்படுத்தி வருகின்றார்கள். ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலேயும் Information Officer என்ற அலுவலரை நியமித்து, மக்கள் சாசனம் பற்றி மக்களுக்கு தகவல் தெரிவிக்கவும், மனுக்களைப் பற்றி தக்க நடவடிக்கை எடுக்கின்ற நிலையை துறை உருவாக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பெரிய மாற்றமாக, வருவாய்த் துறையில் மிகப் பெரிய வரவேற்பாக நம்முடைய தமிழக முதல்வரவர்கள் அரசு தரிசு நிலம் மற்றும் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு 10 ஆண்டுகள் குடியிருந்தால் என்று இருந்ததை அதே நிலத்தில் 2 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 7 ஆண்டுகள் குடியிருந்தால்கூட, பட்டா வழங்க ஆணையிட்டு, இன்றையதினம் செஞ்சட்டை அணியாத உண்மையான கம்யூனிஸ்டு கட்சித் தலைவராக நம்முடைய முதல்வர் அவர்கள் விளங்கி வருகிறார்கள். இன்றையதினம் தமிழ்நாட்டினுடைய அனைத்து ஏழை எளிய மக்களும் இந்தச் செயலைப் பாராட்டி வரவேற்கிறார்கள். காலதாமதத்தைத் தவிர்க்க விரைவாக பட்டா வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் தல ஆய்வு செய்து பட்டா வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கியதை உண்மையிலே வரவேற்கின்றேன்.



முற்பகல் 10-55

அதேபோல, மேய்ச்சல் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, வாரிப் புறம்போக்கு, குளம் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு, களம் புறம்போக்கு என கிராமங்களிலே பலவகை நிலங்கள் உள்ளன. இதில் பட்டா பெறுவதற்கு ஏராளமான நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இதைக் கருத்திற்கொண்டு, வகை மாற்றம் செய்கின்ற இந்த நிலங்களை, ஏழையெளியவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு வகை மாற்றம் செய்வதற்கு C.R.A., C.L.A. போன்ற தலைமை இடத்திற்கு சென்னைக்கு வர காலதாமதம் ஆகி விடுகிறது. எனவேதான், அந்த முயற்சிக்கு பல்வேறு இனங்கள் இருந்தாலும், மேய்ச்சல் புறம்போக்கையாவது, மாவட்ட ஆட்சித் தலைவர்களே தல ஆய்வு செய்து வழங்குவதற்கு உரிய அதிகாரங்களை எதிர்காலத்தில் வழங்கலாம். உதாரணமாக, சமத்துவபுரத்திற்கு நிலம் எடுக்க வேண்டுமென்றால், மேய்ச்சல் புறம்போக்கு என்று அந்த நிலத்தினுடைய பிரிவு இருக்கிறது. அந்த இடத்தை மாவட்ட ஆட்சியர் எடுத்து பணியைத் தொடங்க முடியவில்லை. இங்கே, சென்னைக்கு வந்து C.R.A., C.L.A. இவர்களைப் பார்த்து, அவர்கள் தல ஆய்வு செய்து, அதற்குப் பிறகு அனுமதி வழங்குவதற்குள் நீண்ட காலதாமதம் ஆகி விடுகிறது. எனவே, குறைந்தபட்சம் மேய்ச்சல் புறம்போக்கையாவது மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்ட ஆட்சி எல்லைக்குள் இருக்கின்ற மேய்ச்சல் புறம்போக்கையாவது அரசுத் துறை நிலங்களுக்கு மாற்றுவதற்கு உரிய அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றத்தைப் பொறுத்தவரையில், கடந்த நவம்பர் மாதம் மிகப் பெரிய மழை நமது தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற மாவட்டங்களிலே ஒரே நாளில் 130 மில்லிமீட்டருக்கு மேல் பெய்தது. மிகப் பெரிய அளவில் சேதம் ஏற்படுவதை தவிர்த்த துறை உண்மையிலேயே வருவாய்த் துறை என்ற நிலையில், இன்றையதினம் அந்த வருவாய்த் துறையை நான் பாராட்டுகிறேன். காரணம், 'வரும் முன் காப்போம்' என்பதைப் போல, அந்தத் துறையினுடைய அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் எல்லாம் மழையினுடைய அளவை தெரிந்துகொண்டு மிக விரைவாக பாதுகாப்புப் பணிகளை ஏற்பாடு செய்து, மிகப் பெரிய அளவில் ஏற்பட இருந்த நஷ்டத்தை தவிர்த்திருக்கிறார்கள். என்றாலும், மிகப் பெரிய அளவில் எதிர்பாராத அளவிற்கு 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு பெய்த மழையைப்போல, மிகப்

பெரிய மழை பெய்து, நமது திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் மிகப் பெரிய அளவில் வெள்ளத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. மற்ற முதல்வரைப்போல அறிக்கை விடாமல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு விஜயம் செய்து, நேரில் இடத்தைப் பார்த்து, பொதுமக்களுக்கு ஆதரவு அளித்து, விவசாயிகளுக்கு ஆதரவு அளித்ததை எண்ணி நான் உள்ளபடியே இந்த நேரத்தில் பாராட்டி நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் காலக்கட்டத்தில், வருவாய்த் துறையின் அதிகாரிகள், இரவு பகல் பாராமல் மிகச் சிறப்பான பணியை அவர்கள் ஆற்றியிருக்கின்றார்கள். உள்ளபடியே பாராட்டக்கூடிய ஒன்று. காவல் துறையிலே அதிகாரிகளுக்கு இதுபோன்ற நேரங்களில் சிறப்பினமாக அவர்களுக்கு Incentive Award வழங்கப்படுகிறது. Incentive Award அவர்களுக்கு வழங்குவதைப்போல, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு குறிப்பாக வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், வழங்க துறை அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக திருவையாறு, பூதலூர் ஒன்றியங்களில் கடந்த நவம்பரில் பெய்த மழையால் ஏராளமான விவசாயிகளுக்கு நட்ட நடவு பாதிக்கப்பட்டது. கொள்கை விளக்கக் குறிப்பில், அந்த விவசாயிகளுக்கு பயிர்ப் பாதுகாப்பு வழங்குகின்ற நிலையில், நிவாரணம் வழங்குகின்ற நிலை அரசின் ஆய்வில் உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தாயுள்ளம் கொண்ட நம்முடைய கலைஞர் அவர்களின் அரசு, ஏழை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையை உணர்ந்து, எல்லோருக்கும் பயிர்ப் பாதுகாப்பு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பற்பல ஏரிகள் உடைந்து அந்த ஏரிகள் மூலமாக மண் பல விளைநிலங்களிலே இன்றையதினம் மூடியிருக்கின்றது. ஏழை விவசாயிகள் அந்த நிலத்தை சீர் செய்வது என்பது இயலாத காரியம். எனவே, வருவாய்த் துறை அலுவலர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து, வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக அந்த நிலங்களைச் சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வெள்ளத்தாலோ, இடிதாக்கியோ, பாம்பு கடித்தோ விவசாயிகள் இறந்தால் வழங்கப்படுகின்ற தொகை மிகக் குறைவாக



இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் அந்தத் தொகையினை உயர்த்தித் தர வேண்டும். விமானம் போன்றவற்றிற்கு விபத்து ஏற்பட்டால் இலட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் தருகிறார்கள். அதேபோல, இன்றைக்கு பல்வேறு இடங்களில் ஏழை விவசாயிகள் இறந்து விடுவார்களேயானால், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தத் தொகை, குடும்ப நிவாரண நிதி மிகக் குறைவாக இருக்கிறது. அந்த நிதியை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, D.R.S. தாசில்தார்கள், குடும்பத் தலைவர் இறந்தால், வழங்குகின்ற அந்த நிதியை வழங்க நீண்ட காலதாமதம் எடுத்துக் கொள்கிறார்கள். அதை விரைவாகக் கொடுப்பதற்கு உரிய நடைமுறையை அரசுத் துறை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை பல்வேறு நிலைகளில் மிகச் சிறப்பாக இயங்கி வருவதை, உள்ளபடியே பாராட்டுகிறேன். பல்வேறு இடங்களில் பட்டா வழங்குவதற்கு தடையாணை இருக்கிறது. மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தத் தடையாணையை நீக்கி ஏழையெளியவர்களுக்கு பட்டா வழங்குகின்ற நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டு, உள்ளபடியே இந்த வருவாய்த் துறை செய்கின்ற ஒவ்வொரு பணியிலும், நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய திட்டங்களை, எண்ணங்களை ஈடேற்றுகின்ற வகையில், விரைவாக பணியாற்றுகின்ற அந்தச் செயலை உள்ளபடியே வரவேற்று, வருவாய்த் துறை அதிகாரிகளைப் பாராட்டி, இந்த மானியத்தை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

*முற்பகல் 11-00*

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நில வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக சில கோரிக்கைகளை இங்கே எடுத்து வைக்க முன்வருகின்றேன்.

தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்தத் துறையினுடைய அமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றதற்குப் பிறகு கடந்த 4 ஆண்டுகளாக இந்த வருவாய்த் துறையிலே நிர்வாகம் சிறப்பாக இருக்கிறது. அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் எங்களுடைய கரூர் மாவட்டத்தைச் சொல்லலாம். கரூர் மாவட்டம் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, அந்த மாவட்டத்திற்கு ஆட்சியாளர் நியமிக்கப்பட்டதற்குப் பின்னால் பெரிய அளவிலே கரூர் மாவட்டத்தினுடைய ஆட்சியாளர் அலுவலகம் இன்னும் சில தினங்களிலே தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் கலைஞர் அவர்களுடைய திருக்கரத்தால் திறக்கப்பட இருக்கின்ற செய்தியினை அறிந்து அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்களின் சார்பாக தமிழக அரசுக்கும் வருவாய்த் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் என்னுடைய தொகுதியான அரவக்குறிச்சி தொகுதியிலே வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைத்தபோது இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டு 68½ இலட்சம் ரூபாயிலே வருவாய்த் துறை அலுவலகக் கட்டடத்தைக் கட்டி வைத்து கடந்த 6 மாதங்களுக்கு முன்னால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அரவக்குறிச்சி நகரத்திற்கு வருகை தந்து வட்டாட்சியர் அலுவலகத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரவக்குறிச்சி தொகுதிவாழ் மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை, நல்வாழ்த்துக்களைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பகுதியிலே வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பாமர மக்களுக்கு இதுவரை வீட்டுமனைப் பட்டாக்கள் கழக அரசால் வழங்கப்பட்டு வந்தன. தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கையை எடுத்து வைத்தேன். பிற்படுத்தப்பட்ட நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு



வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் பொறுப்பேற்றதற்குப் பிறகு அரவக்குறிச்சி தொகுதியிலே வாழக்கூடிய, குறிப்பாக பள்ளப்பட்டி, ஈசநத்தம், ஜமீன் ஆத்தூர், சின்னதாராபுரம் போன்ற பகுதிகளில் வாழக்கூடிய இஸ்லாமிய பெருங்குடி மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும் எங்களுடைய தொகுதி வாழ் மக்களின் சார்பாக நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப் பகுதியிலே வாழக்கூடிய ஏழை எளிய மக்கள், பள்ளிக்கூடங்களில் படிக்கக்கூடிய சாதாரண மாணவ, மாணவிகளுடைய வருமான சான்றிதழ்கள், ஜாதி சான்றிதழ்கள் பெறுவதற்கு சிரமங்கள் இருந்த நேரத்திலே கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் கணினிமயமாக்கப்பட்டு இன்றையதினம் விரைவாகக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறார்கள். மக்கள் பாராட்டுகின்றார்கள்; வரவேற்கின்றார்கள். ஆகவே, இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாக நடைபெற எங்களுடைய நல்வாழ்த்துக்களை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப் பகுதியிலே வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் வழங்கி வரக்கூடிய சலுகைகளை இன்னும் நீங்கள் விரைவுபடுத்த வேண்டும் என்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியிலே நங்கஞ்சியாறு, குடகனாறு போன்ற ஆற்றுப் பகுதிகள் அங்கே இருக்கின்றன. கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கனிம வளத்தின் மூலமாக மணல் குத்தகை அல்லது அங்கே இருக்கக்கூடிய கல்குவாரிகள் ஏலம் விடப்படுகின்றன. அப்படி ஏலம் விடப்படுகின்ற நேரத்திலே அரசுக்குத் தெரியாமல் சில தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சிலர் இன்னும் உரிமம் பெறாமலேயே அந்தப் பகுதியில் உள்ள பரமத்தி போன்ற ஏரியாக்களில் இருக்கின்றவர்கள் கல்குவாரிகளை எடுத்து நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 ஏப்ரல் 12

எங்கள் கரூர் மாவட்டத்திலே இதுபோன்ற கனிம வளத்தை ஏலம் விடுவதற்குரிய ஆணையை பிறப்பிக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மாவட்ட அலுவலகங்கள் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. வட்ட அலுவலகங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே பணிபுரியக்கூடிய அலுவலர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால் அங்கே பணிகள் முடக்கப்பட்டு இருக்கின்றன. உதாரணமாக தாசில்தார் அல்லது துணை தாசில்தார் அங்கே இருக்கின்றார்கள். உரிய அலுவலர்கள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. அவர்களுக்கு அமரக்கூடிய நாற்காலிகள், பெஞ்சு போன்றவைகள் குறைவாக இருக்கின்றன. அதையும் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். வெளியே இருந்து வரக்கூடிய பொதுமக்கள் அங்கே தங்களுடைய கோரிக்கை மனுக்களைக் கொடுப்பதற்கு காத்திருக்க வேண்டிய நேரத்திலே அங்கே அமர்வதற்கு போதிய இடவசதி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தளவாட சாமான்கள் வாங்க அதற்காக நிதியை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே பணிவன்போடு கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். 20 ஆண்டுகளாக குடியிருந்தவர்களுக்கு வீட்டுமனை இடங்களைச் சொந்தமாக்க வேண்டும் என்று சொல்லி இருந்தது 10 ஆண்டுகள் என்று குறைக்கப்பட்டு, 10 ஆண்டுகளாக குடியிருந்தவர்களுக்கு அந்த இடத்திற்கான, வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். பொதுமக்கள் பாராட்டுகின்றார்கள்; வாழ்த்துகின்றார்கள்; அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆகவே, குடியிருப்பவர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்கு அந்தப் பட்டாக்களை வழங்குவதற்கு நீங்கள் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

இப்போது வெள்ள நிவாரண நிதியை நீங்கள் வழங்கி வருகின்றீர்கள். அந்தத் தொகையை கூடுதல் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



2000 ஏப்ரல் 12] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

முற்பகல் 11-05

என்னுடைய பரமத்தி ஒன்றியம், கார்வதி கிராமம், அத்தப்பக்கவுண்டன் வலசு என்ற கிராமத்திலே கடந்த 5 மாதங்களுக்கு முன்னால் ஆதிதிராவிட மக்கள் குடியிருந்த பகுதியிலே வெள்ளம் ஏற்பட்டு அத்தனை வீடுகளும் சேதமடைந்து விட்டன. அந்தப் பகுதியினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நானும் அந்தப் பஞ்சாயத்தினுடைய தலைவர் அவர்களும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று, அந்த ஆதிதிராவிட மக்களைச் சந்தித்து அவர்களிடத்திலே கோரிக்கையைக் கேட்டோம். 24 வீடுகள் தரைமட்டம் ஆகிவிட்டன; 24 வீடுகளையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினை, பட்டாவைப் பெற்று அவர்களிடத்திலே வைத்தோம். ஆனால், இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக 10 வீடுகள் மட்டும் அங்கே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. மீதம் இன்னும் 14 வீடுகள் அவர்களுக்குக் கொடுக்கப்படாததால் அங்கே ஒருவருக்கொருவர் சண்டை ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கின்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி நீங்கள் அந்த ஆதிதிராவிட மக்களுக்கான— அந்தப் பகுதியிலே வாழுகின்ற மக்கள் கூலி வேலை செய்யக்கூடியவர்கள்; நிலம் இல்லாமல் கூரைவேய்ந்த நிலையிலே இருந்த நேரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். தொகுப்பு வீடுகளை நீங்கள் வழங்குகின்றீர்கள், உள்ளாட்சித் துறை மூலமாக. அப்படி வழங்கப்படுகின்ற வீடுகளை அங்கே அவர்கள் குடியிருந்த பகுதியிலே வீடுகள் கட்டக்கூடிய இடம் இருக்கின்றது. இன்னும் 14 வீடுகளை நீங்கள் சேர்த்து வழங்கி அந்தப் பகுதியினுடைய மக்களினுடைய துயரைத் துடைத்துக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே உங்களிடத்திலே பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, அரவக்குறிச்சி பகுதியிலே வாழக்கூடிய பின்தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள், சாதாரண மக்களெல்லாம் வீட்டுமனைப் பட்டாக்கள் கிடைக்க வேண்டும் என்று ஏராளமான மனுக்களை வட்டாட்சியரிடத்திலேயும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடத்திலேயும் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு போதிய இடத்தைப் பெற்று நீங்கள் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 ஏப்ரல் 12

தாலுகா அலுவலகங்கள் மூலமாகக் கடைபிடிக்கப்படுகின்ற மனுநீதிநாள், இப்போது மக்களிடத்திலே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. அதிகாரிகளைத் தேடிச் சென்ற காலம்போய் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் மக்களை நாடி, மக்களைத் தேடி இப்போது அதிகாரிகள் கிராமங்களிலே முகாமிட்டுச் செல்கின்ற காரணத்தினால் எல்லா மக்களுடைய கோரிக்கைகளும் தீர்க்கப்படுகின்றன. 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்ற சொல்லுக்குச் சொந்தக்காரராக இருக்கின்ற தமிழக முதல்வர் அவர்கள் இப்போது மக்களுடைய குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொடுக்கின்ற காரணத்தினால் மக்கள் இதை உற்சாகத்தோடு வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுடைய துயர் துடைக்கின்ற இந்த அரசின் இந்த நல்ல திட்டங்களை மக்கள் வரவேற்கக் காத்திருக்கின்ற நேரத்திலே நீங்கள் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பள்ளபட்டிப் பகுதியில் இருக்கக்கூடிய நத்தம் புறம்போக்குப் பகுதியில் ஒரு கட்சிக்காரரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற ஒரு இடம் இருக்கிறது. இப்போது அந்த இடத்திலே கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; அதற்குப் பஞ்சாயத்து அனுமதியும் வழங்கியிருக்கின்றார்கள்; பஞ்சாயத்து வரியும் விதித்திருக்கின்றார்கள். தண்ணீர் இணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மின் இணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த இடத்தில் கட்டடங்கள் இருக்கின்றன. அதுபோக இன்னும் பாதி நிலம், நத்தம் புறம்போக்கு அடி நிலத்திற்கு B-Memo போடப்படாமல், அடி நிலத்திற்கு வருவாய் எதுவும் செய்யப்படாமல் உள்ள, கட்டடங்கள் கட்டப்பட்டது போக மீதியிடம் இருக்கின்றது. அந்த இடத்திலே அரசினுடைய துறையைச் சேர்ந்த Typewriting Institute அல்லது Tailoring Institute, தையல் பயிற்சிப் பள்ளி அல்லது தட்டச்சுப் பள்ளி தொடங்குவதற்காக, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக, சமூக நலத் துறையின் மூலமாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி, கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், இடத்தை வைத்துக்கொண்டு கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற இடங்களில் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்களை அகற்ற துறையினுடைய அதிகாரிகள் உடனடியாகத் தனிக் கவனம் செலுத்தி இதைச் செய்து கொடுத்தார்களேயானால் நல்லது. அந்தப் பகுதியிலே வேறு காலியிடங்கள் இல்லை. கோஷா பெண்கள், முஸ்லீம் பெண்கள்



2000 ஏப்ரல் 12] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

வாழுகின்ற பகுதியிலே, இஸ்லாமியப் பெண்கள் வெளியிலே சென்று எந்தவிதமான தொழில் பயிற்சியும் செய்ய முடியாது. தமிழக அரசு இன்றையதினம், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் இஸ்லாமிய மக்களுக்கு நல்ல சலுகைகளைச் செய்து வருகின்ற இந்த நேரத்திலே, அந்த இடத்தைக் கையகப்படுத்தி அந்த இடத்திலே கட்டுப்பாட்டோடு இருக்கக்கூடிய ஊரின் மத்தியிலே இருக்கக்கூடிய இடத்தை நீங்கள் கொடுத்து உதவுவதற்கு உதவி செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதற்கு அடுத்தாற்போல் இருக்கக்கூடிய காலியிடங்களை Housing Society வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்திற்கும் கால்நடை மருத்துவமனை Veterinary Hospital தாய் சேய் நல விடுதி Maternity Ward ஆகியவைகளுக்கும் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கேட்டிருக்கிறார்கள். வட்டாட்சியர் அவர்களும், சர்வேயர் அவர்களும் இடத்தை அளந்திருக்கின்றார்கள். இடம் அளக்கப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் உரிய இடம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்த இடங்களை விரைவில் கொடுப்பதற்கு நீங்கள் வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில பகுதிகளிலே விவசாயிகள், விவசாயத் துறையைச் சேர்ந்தவர்கள் 10 ஆண்டுகளாக, 15 ஆண்டுகளாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற இடத்திற்கு B-Memo போடப்படவில்லை. அதற்கு B-Memo போட்டுக் கொடுங்கள், வரி செலுத்திவிடுகிறோம், தண்ட தீர்வையும் செலுத்தி விடுகிறோம் என்று கேட்கின்ற நேரத்திலே உரிய V.A.O., R.I. ஆகியவர்கள் அதை மறுத்து காலதாமதம் செய்து வருகின்றார்கள். வட்டாட்சியர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை ஆய்வு செய்து அதை உடனடியாகக் கொடுப்பதற்கான முயற்சிகளைச் சிறப்பாகச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

அதேபோன்று அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வாய்க்கால் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு எனறு இருக்கக்கூடிய நிலங்களில் குறிப்பாக பள்ளப்பட்டி பகுதியிலே, ஆற்றுப் பகுதியிலே புறம்போக்கு நிலம் இருக்கக்கூடிய இடத்திலே ஏறத்தாழ 700 பேர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள்.

அப்படிக் குடியிருந்து வரக்கூடியவர்களுக்கு அந்தப் பஞ்சாயத்திலே, பேரூராட்சியிலே வீட்டு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அடிநிலம் அவர்களிடத்திலே இருக்கிறது. ஆற்றுப் புறம்போக்கு என்று இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு உரிய பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. இப்படி அந்தப் பட்டா வழிவகை மாற்றம் செய்து கொடுப்பதற்காக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அனுப்பப்பட்டிருக்கிறது. கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், சட்டமன்ற உறுப்பினராக நான் பதவி ஏற்றதற்குப் பிறகு, அதனுடைய சம்பந்தப்பட்ட கோப்புகள் இங்கே அரசுத் துறைக்கு அனுப்பப்பட்டு கடந்த 1996 முதல் இப்போது 4 ஆண்டுகள் ஆகிறது. அவற்றை நீங்கள் பார்த்து பள்ளப்பட்டி நகரத்திலே வாழக்கூடிய இஸ்லாமிய மக்களுக்காகவும், அதைச் சுற்றி வாழக்கூடிய ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்காகவும் அதைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமாய், விரைவுபடுத்தி செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, துறையினுடைய அமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருப்பதற்காக தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பிலே வாழ்த்தி, வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்து விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற 2000-2001 ஆம் ஆண்டிற்கான வருவாய்த் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். அனைத்துத் துறைகளுக்கும் தாய் துறையாக விளங்குகின்ற வருவாய்த் துறையிலே நில எடுப்பு, நில ஒப்படைப்பு, நிலவரி, நில வருவாய், நிலப் பட்டா வழங்குதல், நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு ஆகிய அனைத்து நிலம் தொடர்புடைய பொறுப்புகளையும் இந்தத் துறை பொறுப்பேற்று சிறப்பாகச் செயல்படுவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நில நிர்வாகத்தை நடத்துகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களை கணினிமயமாக்கிய தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும் வட்டாட்சியர் அலுவலகங்கள்கூட கணினிமயமாக்கப்படும் என்று அறிவித்துள்ளதை நான் பாராட்டிப் போற்றுகிறேன். ஏழைகளுக்கு



வீட்டுமனைப் பட்டா வழங்குவதிலே தனிச் சிறப்பாக செயல்படுகிற இந்த அரசு தனி உத்தரவினை வழங்கியிருக்கிறது. 10 ஆண்டுகள் அனுபவத்திலே இருக்கின்ற ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அவை அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மூலமாகவும், தாலுகா அலுவலர்கள் மூலமாகவும் அனைத்து மக்களுக்கும் தெரிகின்ற வகையிலே விளம்பரத்தைச் செய்து துரிதமாக பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்பதை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று ஆண்டு ஒன்றுக்கு 60,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று இலக்கு வைத்திருந்தாலும்கூட 1998-99 ஆம் ஆண்டிற்கு 2 இலட்சத்து 27 ஆயிரத்து 414 பட்டாக்களும், 1999-2000 ஆண்டுக்கு 60,000 பட்டாக்கள் இலக்காக இருந்தாலும்கூட 1 இலட்சத்து 58 ஆயிரத்து 12 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி துரிதமாக நடவடிக்கை எடுத்த இந்தத் துறையை சிறப்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா வழங்குவதைப்போல, ஏழை விவசாயிகளுக்கும் நிலப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. புஞ்சை நிலமாக இருந்தால் 3 ஏக்கருக்கும், நஞ்சை நிலமாக இருந்தால் 1.5 ஏக்கருக்கும் வழங்குவதை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். அவை 3 ஆண்டு காலத்தில் பயிர் செய்யப்பட வேண்டும் என்றும், 10 மரங்களையாவது வளர்க்க வேண்டும் என்றும் கூறுவதை மக்கள் பெரிதும் போற்றுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நிலமாற்றம் செய்வதிலே வருவாய்த் துறை பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனை, சுகாதார நிலையம், சமத்துவபுரம், உழவர் சந்தை போன்றவற்றிற்கு எல்லாம் விலக்களிப்பதைப்போல கூட்டுறவுத் துறையிலே சேர்க்கப்படுகின்ற நிலங்களுக்கும் விலக்களித்து அவைகளை உடனடியாக நிலமாற்றம் செய்யவேண்டும். கூட்டுறவுத் துறை கட்டடங்களுக்கும் நிலமாற்றம் செய்து தரவேண்டுமென்று நான் இங்கே வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று இங்கே நில அளவை செய்து உரிமைப் பட்டா வழங்குகின்ற முறையை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக்க இருக்கின்ற கால நீட்டிப்பைத் தவிர்ப்பதற்காக துரித நடவடிக்கை எடுத்து அதிகாரிகள் மூலமாக அந்தக் கூட்டுப் பட்டாக்களைப் பிரித்துத் தருகிற நிலையை

உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மழைக் காலங்களில் ஏற்படுகின்ற முழுமையான பயிர்ச் சேதங்களுக்கு நெற்பயிருக்கு 1,000 ரூபாய் என்றும் மற்ற பயிர்களுக்கு 400 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரை ஏக்கருக்குத் தரப்படுவதைத் துரிதப்படுத்தி விவசாயிகளுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

நலத் திட்டங்களிலே குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் அவர்களுக்கு 7,500 ரூபாய் என்பதை 10,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அதிகாரிகள் தரப்பில் அப்படி தரப்படுகின்ற நலத் திட்ட உதவிகள் எல்லாம் விரைவாக மக்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, அதிகாரிகளை முடுக்கிவிட்டு குறிப்பிட்ட காலங்களில் அந்த நிவாரண நிதிகளை, குடும்ப நல நிதிகளை எல்லாம் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, என்னுடைய மாவட்டத்திலே தண்டராம்பட்டு, பெரணமல்லூர், சேத்துப்பட்டு, ஜவ்வாது மலை ஆகிய தனித் தாலுகாக்களை உருவாக்க வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஆரணியை தலைநகராகக் கொண்டு வருவாய்க் கோட்டம் அமைக்கவும், சேத்துப்பட்டை தாலுகாவாக அறிவித்து வருவாய்க் கோட்டம் அமைத்துத் தரவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே மழை இந்த ஆண்டு குறைவாக இருக்கின்ற காரணத்தாலே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதனைப் போக்குவதற்காக ஆழ்துளைக் கிணறுகளை அதிகப்படியாகக் கொடுத்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நிலவள வங்கிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்காக நில மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அரசு நிலத்தைக் கேட்டிருக்கிறேன். அதை நீண்டகாலமாக தாமதப்படுத்தி வருகிறார்கள். எனவே, அதனை உடனடியாகத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு, தாலுகாவிலே உள்ள அனைத்து R.I. களுக்கும் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும் குடியிருப்புக்களைக் கட்டித்



தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது மாநில அரசு இயந்திரத்தின் அச்சாணியாக திகழக்கூடியது வருவாய்த் துறை. வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தொடர்புடைய துறையாக, இந்தத் துறை சமுதாய முன்னேற்றத்திற்கு பல வகையில் உதவிகரமாக உள்ளது. நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் இத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி, இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இன்னல்களைத் துடைப்பதில் முன்நிற்பது வருவாய்த் துறையே ஆகும். மாவட்ட ஆட்சியரின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் என பிரிக்கப்பட்டு இத்துறை செம்மையாகப் பணியாற்றி வருகிறது.

ஒரு காலத்தில் மணியக்காரர் அல்லது வி.எச்.எம். போன்றவர்கள் அக்கிராமத்தில் வரி வசூலுக்காக மட்டுமின்றி, ஒட்டுமொத்தமாக அக்கிராமத்தின் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கக்கூடியவர்களாகக்கூட பணியாற்றினார்கள். மிகப் பெரிய நிலச்சுவான்தார்கள், பெரும் நில தனக்காரர்கள் இப்பதவியை விரும்பி ஏற்று மக்களுக்குப் பணியாற்றிய காலம் ஒன்று இருந்தது. ஆனால், கடந்த கால ஆட்சியில் அப்படிப்பட்ட கர்ணம், மணியக்காரர்களை ஒரே நாளில் வீட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டு தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் கிராம நிர்வாக அலுவலர்களைத் தேர்வு செய்து நியமித்தார்கள். இப்போது அதனால் ஏற்பட்டிருக்கின்ற பலதரப்பட்ட மாற்றங்களை அனுபவரீதியாக நம்மால் காண முடிகிறது. அன்று சிறப்பாகப் பணியாற்றிய முன்னாள் கர்ணம், வி.எச்.எம். போன்றவர்களுக்கெல்லாம் இப்போது தாயுள்ளத்தோடு அவர்களுக்கு ஓய்வூதியமும், தகுதி உள்ளவர்களுக்கு மீண்டும் பணி நியமனமும் வழங்கியவர் நமது ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிலவரி வசூலைப் பொறுத்தவரையில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்கள் கிராம உதவியாளர்கள். இவர்கள் மிகக் குறைந்த ஊதியத்தில், தொகுப்பு ஊதியத்தில் முன்பு பணியாற்றி வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஊதிய

விகிதத்தை நிர்ணயித்து பல சலுகைகளை அள்ளித் தந்தவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, அலுவலக உதவியாளர் ஊதிய விகிதத்தில் தங்களைப் பணியமர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பரிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பல கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர்களுடைய பணியிடங்கள் காலியாக உள்ளன. அக்காலியிடங்களில் தற்போது மக்கள் நலப் பணியாளர்களாகப் பணியாற்றுபவர்களை, சர்வே பயிற்சி அளித்து, அவர்களைக்கூட அந்தக் காலியிடங்களில் நியமிக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் என்னுடைய கருத்தாக இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20

அண்மையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பதில் அளித்துப் பேசுகின்றபோது, நிலப் பதிவு சீராய்வு இயக்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நிலப்பதிவு மாற்றம், கூட்டுப் பட்டாக்களை தனிப்பட்டாக்களாக மாற்றுவது ஆகியவற்றில் ஏற்படும் காலதாமதங்களால் உண்மையான நிலச் சொந்தக்காரர்களின் விவரங்களும், அரசுப் பதிவேடுகளில் இருக்கின்ற விவரங்களும், அரசுப் பதிவேடுகளில் வெகுவாக மாறுபடுகின்றன. ஆகவே, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உடனுக்குடன் நிலப் பதிவு மாற்றம் செய்தல், மற்றும் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டாக்களாக வழங்குவதற்கு விரைவு நடவடிக்கை எடுப்பது என்பது மிகவும் அவசியமானதாகும். இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறும்போது, வருவாய்த் துறையை முடுக்கிவிட்டு, நிலப்பதிவு சீராய்வு முனைப்பு முன்னோடித் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். இத்திட்டம் மிகச் சிறந்த பலன்களைப் பொதுமக்களுக்கு அளிக்கும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. ஜமாபந்தியின்போது மட்டுமே பதிவு மாற்றத்திற்காக வட்டாட்சியர் அலுவலகத்தை அணுகுகிற பொதுமக்கள், கிராமத்து ஏழைகள்கூட, இந்த அறிவிப்பின் மூலம் நிலப் பதிவுகளைச் சீர் செய்யவும், நிவாரணம் பெறவும் இந்த அறிவிப்பு மிகச்சிறந்த பலனை அளிக்கும் என்பதால், அரசின் இந்த நடவடிக்கைகளை நான் மனதார வரவேற்கிறேன்.



தற்போது நிலவரி வசூலுக்காகும் செலவினை ஒப்பிட்டுப் பார்த்தால் மிகக் குறைந்த தொகையே அரசுக்கு வருவாயாகக் கிடைக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1-7-1971 முதல் புஞ்சை நிலங்களுக்கு நில வரியை அடியோடு இரத்துச் செய்திருக்கிறார்கள். அதேபோன்று தற்போது நஞ்சை நிலங்களுக்கும் நிலவரியை இரத்துச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் பல ஆண்டுகாலமாக நிலவரி செலுத்தாத மிட்டா மிராசுகள் ஏராளமானவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அரசு இயந்திரம் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏழை எளிய மக்கள் கிஸ்தி செலுத்த இயலாவிட்டால் அவர்களுடைய நிலத்தில் கொடி போட்டு, ஜப்தி செய்து வசூலித்த காலமெல்லாம் இருந்தது. ஆனால், நம்முடைய அரசு எக்காரணத்தைக் கொண்டும் ஜப்தி செய்யக்கூடாது என்று உறுதியான உத்தரவு பிறப்பித்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

வருவாய்த் துறையின் மூலம் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் விவரம் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வந்தாலும், ஏரி, குளம், கால்வாய், ஓடை, நீர்வழிப் புறம்போக்கு மந்தைவெளி, மேய்ச்சல் தரை போன்ற புறம்போக்கு நிலங்களில் ஆட்சேபணையில்லாத நிலங்களை ஏழை எளியவர்களுக்குக் குத்தகைக்கு அரசே வழங்கலாம் என்ற நல்ல முடிவை நான் வரவேற்கிறேன். ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை ஏழை எளிய மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

நமது தமிழக முதல்வர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு, அதாவது 19-6-1971 அன்று தமிழ்நாடு சட்டம் 40/71-ன்படி புரட்சிகரமான சட்டத்தை, தமிழகம் முழுவதும் ஒரே நாளில் பல இலட்சம் பேர் குடியிருக்கக்கூடிய வீட்டு மனைப் பட்டாக்களைப் பெறுகின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பொதுவுடைமைக் கட்சியின் பெருந் தலைவராகத் திகழ்ந்த மறைந்த பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், 'பல பேர் இரத்தம் சிந்தி சாதிக்கமுடியாத ஒன்றை, ஒரு துளி மையினால் சாதித்தார் நம் தலைவர்' என அன்றையதினம் வாழ்த்திப் பாராட்டினார்கள். இன்று மீண்டும் கருணை உள்ளத்தோடு, வீட்டுமனை இல்லாத ஏழை எளியவர்களுக்காக புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே விவசாயிகளுக்கும், கிராமியக் கைவினைஞர்களுக்கும் மட்டும்

பட்டா பெற தகுதி உண்டு என்று இருப்பதை, நெசவாளர்களுக்கும் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும், கிராமப்புறங்களில் பட்டா வழங்கிட வழிவகை காணவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி நிறுவனங்களுக்கு அருகில் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை அந்தக் கல்வி நிறுவனங்களுக்கே ஒப்படை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல கிராமங்களில் களம் புறம்போக்கு போன்ற நிலங்கள் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யப்படவில்லை. அவற்றை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலஆட்சியில் U.D.R. Survey என்கிற பெயரில் பல முறைகேடுகள் நடைபெற்று இருக்கின்றன. பல கிராமங்களில் தவறான இட மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. சில பெரிய நிலச்சுவான்தார்கள், கிராம சமுதாய நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு, அந்தச் சமுதாய நிலங்களைப் பொது உபயோகத்திற்குக் கூட விட்டுக்கொடுக்க மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட சமுதாய நிலங்களைக் கண்டறிந்து, அரசு கையகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று அரசுக்கு நிலங்கள் தேவைப்படுகின்ற நேரத்தில் ஆர்ஜிதம் செய்வதற்கு, ஏற்கெனவே மூன்றாண்டுகளாக இருந்தது தற்போது அவசரப் பிரிவின் கீழ் 6 மாத காலமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதுகூட மிக அதிகமான காலம் என்று கூறலாம். இதை இன்னும் குறைத்து 3 மாத காலமாக குறைப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தத்தை கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

என்னுடைய தொகுதியிலே சமத்துவபுரம் திட்டத்தை அமல்படுத்துவதற்காக நில ஆர்ஜிதம் செய்ய தஞ்சை மாவட்ட ஆட்சியர் அரசுக்கு கருத்துரு அனுப்பியிருக்கிறார். அதற்குத் தேவையான இடம் தருமபுரம் மற்றும் திருப்பனந்தாள் மடாலயத்திற்குச் சொந்தமான 11 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. மடாதிபதிகள் அந்த நிலத்திற்கு உரிய உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்தும், இந்து சமய அறநிலையத் துறைக்கு சம்மதம் கோரி அதற்கான கருத்துரு வரப்பெற்றும் இரண்டு மாத காலமாக அதற்கான அனுமதி கிடைக்கப் பெறவில்லை. எனவே, இந்தத் திட்டத்தை தொடங்குவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாவட்டங்களில் இல்லாத ஒரு பிரச்சினை குத்தகைதாரர் பிரச்சினை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குத்தகை சாகுபடி விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதற்காகத்தான் கடந்த காலத்தில் பல புரட்சிகரமான திட்டங்களையெல்லாம் செயல்படுத்தினார்கள். 1972 ஆம் ஆண்டு அந்தப் பசலிக்குரிய குத்தகையை மட்டும் செலுத்தினால் அதற்கு முந்தைய குத்தகை இரத்து செய்யப்படும் என்று அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் காரணமாக புயல், வெள்ளத்தால், மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எல்லாம் தங்களுடைய சாகுபடி நிலைமை வாழ்வா, சாவா என்று ஏங்கிக் கிடந்தவர்கள் அந்தத் திட்டத்தினால் பெரிதும் பயன்பெற்றார்கள். நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய நிலை மாறி இப்போது அவர்கள் ஆனந்தக் கண்ணீரோடு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கடந்த காலத்தில் 1997 ஆம் ஆண்டு இயற்கைச் சீற்றத்தால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட நேரத்தில் தமிழ்நாடு சட்டம் எண் 20/97-ன்கீழ் பழைய பாக்கிகளை மூன்றாண்டு தவணைகளில் பிரித்துக் கட்டலாம் என்கிற மற்றொரு சலுகையையும் இதே பேரவையில் அறிவித்தார்கள். இப்படி குத்தகை சாகுபடியாளர்களுக்கு பல வகைகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். இந்தக் குத்தகைப் பிரச்சினை தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் மட்டும் மிக அதிகமாக உள்ளது. வருவாய் நீதிமன்றத்தால் பல ஏழை விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடிய ஒரு அவல நிலைமை இப்போது இருக்கிறது. இதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் மட்டும் தற்போது நிலவுடைமையாளர்களும், குத்தகை சாகுபடியாளர்களும் தனிப்பட்ட முறையில் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) சாகுபடி செய்யும் நிலத்தின் மொத்த மதிப்பில் 50 சதவிகிதத்தை நில உடைமையாளர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் 50 சதவிகிதத்தை இப்போது கிரயமாக்கி, என ஒத்துக்கொண்டு விருப்பம்போல் இதையே நாம் நிலவள வங்கி சொந்தமாக்கிக் கொண்டு வருகிறார்கள். இதையே நாம் நிலவள வங்கி அல்லது கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒரே தவணையில் அந்த பாதித் தொகையை நில உடைமையாளர்களுக்கு வழங்கி 10 ஆண்டுக்காலத்தில் குத்தகைதாரர்களிடம் வசூலிக்கலாம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குத்தகை நிர்ணயிப்பதற்காக ஏற்கெனவே தமிழக அரசு சட்டம் 24/56-ன்படி மொத்த விளைச்சலில் 25 சதவிகிதத்தை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சட்டமாக்கப்பட்டு இருக்கிறது. இது நெல் சாகுபடியைப் பொறுத்தவரையில் சரியாக இருக்கலாம். ஆனால் கரும்பு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும்போது உற்பத்திச் செலவு மிகவும் அதிகமானதால் நெல்லுக்கு உரிய தொகைக்கு ஈடாக மட்டுமே குத்தகை செலுத்தலாம் என்கிற ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தால், அது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், தஞ்சை வருவாய் நீதிமன்றத்தில் ஏராளமான விண்ணப்பங்கள் குடியிருப்பு மனைப் பட்டா கோரி தேங்கியுள்ளன. அதற்குக் காரணம் ஏற்கெனவே கும்பகோணத்தில் வருவாய் நீதிமன்றம் இருந்தது. அந்த வருவாய் நீதிமன்றம் அந்தப் பணியிடம் இரத்து செய்யப்பட்டு தஞ்சை வருவாய் நீதிமன்றத்தோடு இணைக்கப்பட்டதால் கும்பகோணம் வருவாய் நீதிமன்றத்தில் இருந்த விண்ணப்பங்கள் கடந்த 3 ஆண்டுகாலமாக பரிசீலனைக்கே எடுத்துக்கொள்ளப்படாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, குறிப்பாக, கும்பகோணம் வட்டம், நாச்சியார்கோவில், முருக்கங்குடி, திருவிடைமருதூர், ஆடுதுறை, கதிராமங்கலம், பந்தநல்லூர், திருப்பனந்தாள் ஆகிய பிர்காக்களில் தேங்கிக் கிடக்கிற அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து குடியிருப்பு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நாகை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய கோட்டம் மயிலாடுதுறை கோட்டம். மயிலாடுதுறை வட்டத்தைப் பொறுத்தவரையில் குத்தாலம், மயிலாடுதுறை, பூம்புகார் ஆகிய 3 தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. எனவே, மயிலாடுதுறை வட்டத்திலிருந்து குத்தாலத்தை தனி வட்டமாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை பல தடவை அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் குத்தாலம் கல்யாணம் அவர்கள் இப்பேரவையில் வலியுறுத்தி இருக்கிறார். எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் பரிவோடு ஏற்று, இன்றே அதை தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ம. அப்துல் லத்தீப்.



**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறைகளுக்கெல்லாம் தலையாய துறையான வருவாய்த் துறை நம்முடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த மானியக் கோரிக்கைகளில் என்னுடைய சில கருத்துகளைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, தமிழக அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் நிலம் இல்லாதோருக்கு, நிலம் அளிக்கக்கூடிய கால அளவைக் குறைத்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். 20 ஆண்டுகள் தொடர்ந்து சுவாதீனத்தில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்ற காலக்கெடுவைக் குறைத்து, 10 ஆண்டுகள் இருந்தாலே போதும், பட்டா வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது மனநிறைவை அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. இந்த பட்டா வழங்குவதில் ஒரு சமூக நீதி வேண்டுமென்று நாம் கருதுகிறோம். அதனை ஏற்று அரசு இந்தப் புதிய நிலையை மேற்கொண்டதற்கு நாம் அரசுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனால், இந்தக் குறிப்புகளைப் பார்க்கும்போது, பட்டா வழங்குவதில் மாவட்டங்களுக்கிடையே ஒரு சரிசமமான நிலையை துறையினர் கடைபிடிக்கவில்லை என்பது எங்களுக்குக் குறையாகத் தெரிகிறது. சில மாவட்டங்களில் அதிகமானப் பட்டாக்களை நாம் கொடுத்திருக்கிறோம்; சில மாவட்டங்களில் மிக மிகக் குறைவான பட்டாக்களை நாம் கொடுத்திருக்கிறோம். இந்த நிலை ஏன் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். "My request that he should ensure equities not only equality but also equities. My complaint is that so far as my district is concerned— compared to the other districts, so far as the Vellore district is concerned— as per data made that is available for the House, I find there is perceptibly awarding of the patta is low இதிலே வேலூர் மாவட்டத்திலே கொடுத்திருப்பதைப் பார்க்கும் போது, மற்ற மாவட்டங்களைவிட மிகக் குறைவாகக் கொடுத்திருக்கிறீர்கள். புதுக்கோட்டையில் 530 ஏக்கர் பட்டா கொடுத்திருக்கிறீர்கள். சிவகங்கையில் 720 ஏக்கர் கொடுத்திருக்கிறீர்கள். இப்படி 500 ஏக்கருக்கு மேற்பட்டு மற்ற மாவட்டங்களில் இருக்க, எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு 188 ஏக்கர்தான் இதுவரையில் பட்டாக்களாக வழங்கப்பட்டுள்ளன. பட்டா வேண்டி பலபேர் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். குறிப்பாக, ஏலகிரி, ஜவ்வாது மலை மற்றும் மலைப்பாங்கான எங்களுடைய பகுதியில் இன்று வரையில் பட்டா இல்லாமல் நிலத்திற்கு உரிமை கொண்டாட முடியாத இழிநிலையில் பலர் இருந்து கொண்டிருக்க, ஏன் அவர்களுக்கு துரிதமாகப் பட்டா

வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் விளக்கவேண்டும். இருந்தாலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு சமத்துவம் வழங்கி பட்டா வழங்குவதில் எல்லோருக்கும் சம உரிமை, சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-35

அமைச்சர் அவர்கள் சொல்கிறார், சிவகங்கை மாவட்டத்திற்கு நான் போட்டியாக வரவில்லை. அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. எங்கு பட்டா வழங்கினாலும் மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் நாங்கள். அவர்களுக்கும் பட்டா வழங்கவேண்டும்; எல்லோருக்கும் வழங்கவேண்டும் என்றுதான் நான் கேட்கிறேனே தவிர, சிவகங்கை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டதை நான் எந்தவகையிலும் ஆட்சேபிக்கவில்லை. அவர்களுக்கும் கொடுத்தீர்கள், நன்றி; எங்களுக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேனே தவிர, மாண்புமிகு அமைச்சர் அவர்களை . . . .

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் waste land என்று சொல்லக்கூடிய அந்தக் காலியிடம் ஏராளமாக அரசு புறம்போக்கு இருக்கிறது. வேலூர் மாவட்டம் செழிப்பான மாவட்டம். அங்கே அப்படிப்பட்ட காலியிடம் இல்லையென்று நினைக்கின்றேன். ஆகையால்தான் அதிக இடம் பட்டா வழங்க முடியாத சூழ்நிலை இருக்கலாம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தரிசு நிலம்... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய வேலூர் மாவட்டம் செழிப்பான மாவட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே அது வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. வேலூர் மாவட்டத்தில் நிறைய புறம்போக்கு நிலங்கள் இருந்தும் பட்டா கேட்டு மனுக்கள் கொடுத்தும் இன்னும் நிறைய நிலுவையில் இருக்கின்றன. ஆகவேதான் எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கோரிக்கையாக வைத்திருக்கிறார். நிறைய எங்களிடம்



புறம்போக்கு இருக்கிறது. ஆனால், இன்னும் பட்டா வழங்காமல் காலதாமதம் செய்துகொண்டிருக்கிறது அந்தத் துறை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** உங்களுடைய தரிசு நிலங்கள் சிவகங்கை மாவட்டத்தில் குறிப்பிலே வந்திருக்கிறது போலும். ஆனால் நாங்கள் அளித்த மனுக்களும் குறிப்பிலே வரவில்லை; ஆய்வுக்கும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. நீண்டகாலமாக வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆய்விலேயே இருந்து கொண்டிருக்கிறதே தவிர, இதுவரை பட்டா வழங்கவில்லையே, ஏன்? அதற்கு நியாயமான காரணம் இருந்தால், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களிலே, மற்ற மாவட்டங்களிலே வழங்கியதைப் போல வழங்கப்படாததற்கு காரணம் என்ன என்பதைத்தான் அமைச்சரிடம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேனே தவிர, வேறல்ல. எனவே, நான் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து அந்த மாவட்டங்களிலும் துரிதமாகப் பட்டாக்களை வழங்குவதற்கு, மற்ற மாவட்டங்களுக்குச் சமமாகக் கொண்டுவருவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். அது ஏதோ பெரிய நஞ்சை நிலங்கள் நிறைந்த ஒரு மாவட்டமாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. முழுக்க முழுக்க 25 சதவீதம் மலைப்பாங்கான முல்லை நிலம். அங்கே செழுமை இருக்கிறது என்று சொன்னார்கள். மக்களுடைய உள்ளங்களில், எண்ணங்களில் செழுமை இருக்கக்கூடும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் நிலத்தில் வேண்டிய செழுமை இல்லை. அங்கே மலைப்பாங்கான, பெரும்பாலும் முல்லை நிலங்கள்தான். எனவே, அது பயனற்று பல இடங்களிலே இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனவே வித்தியாசம் வேண்டாம். There should not be any inequities என்பதுதான் என்னுடைய வேண்டுகோளே தவிர, வேறு அல்ல. There should be equities not only equalities so far as this patta is given to the people.

இதிலே அனாவசியமான தாமதங்களும் ஏற்படுகின்றன. உதாரணமாக, பொதுக் காரியத்திற்குக்கூட பட்டா வழங்குவதில் தேவையற்ற தாமதங்கள். என்னுடைய தொகுதியில் நிம்மியம்பட்டு என்ற ஒரு பெரிய கிராமம். அந்தக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, ஆரம்ப சுகாதார நிலையமும் தொடங்கப்பட்டுவிட்டது. ஆனால், அதற்குத் தேவையான நிலம், அதற்குப்

பட்டா வழங்கினால்தான் நாங்கள் அதற்கு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வோம். மேற்கொண்டு கட்டடங்களைக் கட்டுவோம் என்று மருத்துவத் துறை சொல்கிறது. மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நிம்மியம்பட்டில் இதுவரையில் அதற்குப் பட்டா வழங்காத காரணத்தினால், அந்த வேலை நின்றிருக்கிறது.

இன்னொன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக்கூட கவனத்தில் வைத்திருப்பார்கள். ஜவ்வாது மலைப் பகுதியிலே, மருத்துவமனையே இல்லை. எனவே, ஒரு மருத்துவமனை வேண்டுமென்று நம்முடைய காவலூர் சத்திரப் பகுதியில், எல்லா கிராமங்களுக்கும் பொதுவாக இருக்கிற ஒரு சத்திரப் பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்பது எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது அதற்குத் தங்களுடைய கனிவுப் பார்வையைச் செலுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன்.

முற்பகல் 11-40

காவலூர் சத்திரம், அங்கே ஒரு மருத்துவமனை வேண்டும். அந்த இடத்திற்கு பட்டா வேண்டுமென்று கேட்கிறோம். பட்டா என்று கேட்கும்போது நம்முடைய அருமை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இந்தத் தாமதங்களை தவிர்ப்பதற்கு உரிய முறையில் அறிவுரைகளை அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று என்னுடைய தொகுதியில் வெள்ளக்குட்டை என்று ஒரு கிராமம். அந்த வெள்ளக்குட்டை கிராமத்தில் தேவையற்ற நிலையிலே 10 ஆண்டுகள்— இன்று நேற்றல்ல 25, 30, 50 ஆண்டுகளாக வீடு கட்டிக்கொண்டிருக்கக்கூடிய அந்த ஏழை விவசாயிகளை அங்கேயிருந்து விரட்ட வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான்கூட அதற்கு ஒத்துழைப்பு தந்தேன். போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கின்ற இடங்களிலேயெல்லாம் அந்தக் கட்டடங்களை, குடிசைகளை அகற்றுவதற்கு நான் ஒத்துழைப்பு தந்தேன். இப்போது பள்ளிக்கூடக் கட்டடத்திற்குப் பின்னாலே இருக்கின்ற குடிசைகள்— அந்த இடம் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்க வேண்டுமானால், பள்ளிக்கூடக் கட்டடத்தை உடைத்தால்தான் அது நமக்கு பயனுடையதாக இருக்கலாம். பள்ளிக்கூடக் கட்டடத்தை அப்படியே விட்டுவிட்டார்கள். அதற்குப்



பின்னாலே இருக்கின்ற குடிசைகளையெல்லாம் உடைக்க வேண்டுமென்று நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகத், தினந்தோறும் எனக்கு தொலைபேசியிலே செய்தி வந்து கொண்டிருக்கிறது. இங்கே நேரடியாக வருகிறார்கள். நான் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாத அந்த குடிசைகளை அகற்றுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். 10 ஆண்டுகள் இருந்தால் போதும் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அது போதும் என்று நீங்கள் சொன்னதற்கு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தயவுசெய்து இந்த மகிழ்ச்சிக்கிடையே அந்தக குடிசைகளை அகற்றி, அங்கு ஒரு கொந்தளிப்பையும், கசப்பையும் உருவாக்க வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன் Sir. எங்களுடைய பொது நிறுவனங்கள் இருக்கின்றன. இடுகாடுகள் இருக்கின்றன. மசூதிகள் இருக்கின்றன. ஈத்காக்கள் இருக்கின்றன. இதிலே பெரும்பாலும் நிலம் அந்தக் காலத்திலேயிருந்து மசூதி இருக்கின்ற இடத்தை மசூதிப் புறம்போக்கு. இடுகாடு இருக்கின்ற இடத்தை மயானப் புறம்போக்கு என்று இதுவரையிலே நீங்கள் அதை உங்களுடைய சிட்டா, அடங்கல் குறிப்புகளிலே கூறுகிறீர்கள். தயவுசெய்து, ஒரு பொது உத்தரவு போட்டு மசூதிகள், மய்யவாடிகள் மற்றும் ஈத்காக்கள் இருக்கின்ற இடங்களை, ஆண்டாண்டு, 100 ஆண்டுகள், 200 ஆண்டுகளாக இருப்பதை இன்றைக்குவரையிலே நீங்கள் அதை புறம்போக்கு என்றே சொல்கிறீர்கள். தயவுசெய்து, அதை உங்களுடைய குறிப்புகளிலே மாற்றி அதை அந்தந்த நிறுவனத்திற்குச் சொந்தமாக ஆக்கித்தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்கள், இன்றைக்கு உண்மையைச் சொல்லப்போனால், குடிப்பதற்குக்கூட நீர் இல்லாத மாவட்டங்களாக மாறிவிட்டன. விவசாயம் நடப்பது ஒரு புறம் இருக்கட்டும். ஏனோ தெரியவில்லை. இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பருவ மழை பொய்த்த காரணத்தினால், எங்கு சென்றாலும் வறட்சியாக இருக்கிறது. நாங்கள் அங்கே உருவாக்கிய ஆழ்துளைக் கிணறுகள், பெரிய கிணறுகள் எதிலேயும் தண்ணீர் இல்லை; குடிப்பதற்கு இல்லை, விவசாயத்திற்கும் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) இந்த நிலையிலே அங்கே ஜப்தி நடவடிக்கையைத் துரிதப்படுத்தி இருப்பது எந்த வகையிலேயும் நியாயமில்லை. இந்த இரண்டு மாவட்டங்களையும்— நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே கேட்டுக்கொள்கிறேன், வறட்சி

மாவட்டங்களாக அறிவித்து ஜப்தி நடவடிக்கைகளை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டும். இது இன்றியமையாதது என்பதை நான் மிகவும் வற்புறுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, எங்களுடைய ஆம்பூர் பெரு நகரம் வாணியம்பாடியைப்போல், அதைவிட அதிகமாக வளர்ந்து விட்ட ஒரு நகரம்; ஜனத்தொகையும் அதிகமாகிவிட்டது. வாணியம்பாடி வட்டம் என்பது இப்போது ஆம்பூரையும் உள்ளடக்கிய வட்டமாக இருக்கிறது. 'Unwieldy' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு அந்த Administrative section அங்கேயிருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகம் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்லாண்டுகளாக எங்களுடைய கோரிக்கை, தயவுசெய்து உங்களுடைய பொது விதியை எங்களுக்கு விதியாக சுமத்தாமல், ஆம்பூருக்கு ஒரு விலக்கு அளித்து, ஆம்பூரை ஒரு தனி வட்டமாக நீங்கள் ஆக்கித்தர வேண்டுமென்று நான் உங்களை மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த V.A.O. (கிராம அதிகாரிகள்) அவர்கள்தான் முக்கியமானவர்கள். அவர்கள்தான் எதைச் செய்தாலும் செய்ய வேண்டும். அவர்களால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். ஏனென்றால், சிட்டா அடங்கல், வருவாய்த் துறையின் எல்லாக் குறிப்புகளும் அவர்களிடம்தான் இருக்கின்றன. அவர்கள்தான் மிக முக்கியமானவர்கள். அவர்கள் ஒரு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு வேண்டும் என்று கேட்கிறார்கள். மற்ற வாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அவர்களை ஏதோ ஒரு உத்தரவிற்கு உட்படுத்த முற்பட்டு, இந்த பழைய நிலையே அவர்களிடத்தில்— இல்லாவிட்டால் அவர்களால் நிச்சயமாக புதிய நிலையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. மேலும் அந்தந்த ஊர்க்காரர்கள், அந்தந்த ஊரிலேயே இருக்கவேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படி இருப்பது மிகப்பெரிய ஆபத்து. ஏனென்றால், ஊருக்குள்ளே என்ன நிலைமை என்பது எங்களுக்குத் தான் தெரியும். அந்த ஊருக்குள்ளே சாதி உணர்வுகள் இருக்கும், மற்ற உணர்வுகள் எல்லாம் இருக்கும். கோஷ்டிகள் எல்லாம் இருக்கும். அதன் காரணமாக அந்த ஊர்க்காரன் அந்த ஊரிலே இருந்தால் பல சிக்கல்கள் உருவாகும். எனவே, இதை நீங்கள் வற்புறுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊரிலே அந்த ஊர்க்காரன் இருக்க வேண்டும் என்று சொல்வதைவிட நிர்வாக சௌகரியத்திற்கு ஏற்ப,



தகுதியானவர்களை வேறு ஊருக்கும் மாற்றலாம், உரியவர்களை இன்னொரு ஊருக்கும் கொண்டு வரலாம் என்று இருப்பதுதான் முறையாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-45

இந்த V.A.O. நியமனத்தில் இப்போது தேர்வாணையம் மூலம் நியமனம் நடப்பதாக நான் அறிகிறேன். தயவுசெய்து இந்த நிலையை மாற்றாமல் அந்தப் பழைய நிலையையே நீங்கள் தொடர் நிலையாக வைத்து அவர்களுக்குரிய அந்த கோரிக்கையை ஏற்று— அவர்களிடத்தில் பெரிய அதிருப்தி இருக்கிறது, V.A.O.-க்கள் எல்லாம் அதிருப்தியாக இருப்பது நல்லதல்ல, எந்த ஆட்சிக்கும் நல்லதல்ல, எந்தக் கட்சிக்கும் நல்லதல்ல. எனவே, இதையெல்லாம் புரிந்து, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று— அவர்களுக்கு ஒரு நிம்மதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசு புறம்போக்கு நிலங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு 10 ஆண்டுகளுக்குக் குறைவாக 2 ஆண்டுகள் இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்லி அவர்களுக்கும் வீட்டு மனைப்பட்டா வழங்குவது குறித்து அறிவித்திருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல அரசு நிலங்களிலே கடந்த பல்லாண்டு காலமாக விவசாயம் செய்து விவசாயத் தொழில் செய்து அதன்மூலம் வருமானத்தை ஈட்டி வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் வைத்திருக்கின்ற நிலத்திற்கு அரசே பட்டா அளிக்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களிலே கடந்த 4,5 ஆண்டு காலமாகப் பருவ மழை பெய்யாத காரணத்தினால் முழுமையாக இரண்டு மாவட்டங்களும் வறண்டு கிடக்கின்றன. குறிப்பாக குடிநீருக்கே பிரச்சினையாக இருப்பதால் இந்த இரண்டு மாவட்டங்களையும், வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும். இந்த மாவட்டங்களில் இருக்கின்ற மக்களின் விவசாயம் பாதிக்கப்பட்டு, கூலி வேலை தேடி வெளி

மாநிலங்களுக்கு ஓடுகின்ற நிலையில் இருக்கின்ற அந்த மக்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த இரண்டு மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, வறட்சிப் பணிகளை மேற்கொள்வதோடு, இந்த மாவட்டங்களிலே நில வரி முழுவதையும் இரத்து செய்யவேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)**

நிலமற்ற விவசாயிகளுக்கு, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, முதியோர் உதவித் தொகை வழங்குவதில், அவர்கள்—யாராக இருந்தாலும் முழுமையாக 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க வேண்டும். அவர்களுக்கு ஆண் வாரிசு இருந்தால் வழங்குவதில்லை என்ற நிலையை அரசு எடுத்திருக்கிறது. ஆண் வாரிசு இருந்தும், பெற்றோர்களுக்கு உணவு கொடுக்காத பிள்ளைகள் எத்தனையோ பிள்ளைகள் இருக்கின்றார்கள். நிலமற்ற விவசாயிகள், நிலமற்ற கூலித் தொழிலாளிகள், முதியோர்கள் யாராக இருந்தாலும், யார் மனு செய்திருந்தாலும், அனைவருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, அந்த நிலமற்ற விவசாயிகள் அனைவரும் மாதா மாதம் உதவித்தொகை பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 4, 5 மாதங்கள் கழித்துத்தான் எங்கள் மாவட்டத்தில் அந்த உதவித் தொகை கொடுக்கின்றார்கள். மாதா மாதம் உதவித்தொகை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல இலவச வேட்டி, சேலை பொங்கலுக்கு வழங்குகிறார்கள். பொங்கலுக்கு என்று சொல்லிவிட்டு ஆடி மாதம் வரையிலே அந்த இலவச வேட்டி சேலைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள். குறிப்பாக ஒரு கிராமத்திலே எடுத்துக்கொண்டால்— நிலம் உள்ளவர்களுக்கு வேட்டி, சேலை கொடுத்திருக்கின்றார்கள். ஒரு கிராமத்திலே நிலம் இல்லாதவர்களுக்கு வேட்டி, சேலை கொடுத்திருக்கின்றார்கள். இந்த விதிமுறை எந்த அளவிற்கு செயல்படுகிறது என்பதே தெரியாத அளவிற்கு இன்றைக்கு அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போதெல்லாம் ஏதாவது பிரச்சினை சொல்கின்றபோது வேட்டி கொடுத்தீர்களா, புடவை கொடுத்தீர்களா என்றுதான் மக்கள் கேட்கின்றார்கள். ஒரே போராட்டமாக ஒரே கலவரம் ஏற்படுகிற சூழ்நிலை ஒரு சில கிராமங்களிலே இருக்கிறது.



ஆகவே, இதற்கு ஓர் அடிப்படையான தீர்வு ஏற்படுகிற வகையிலே ரேஷன் பொருட்களை வாங்குகிற அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலவச வேட்டி சேலைகள் ஒவ்வோர் ஆண்டும் வழங்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோல ஆதிதிராவிட நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆகியவற்றிற்கெல்லாம் பணம் ஒதுக்கப்படுகிறது. இலவச வீட்டுமனைப் பட்டா கொடுப்பதற்காக பணம் ஒதுக்கப்படுகிறது. அரசு நிர்ணயித்து இருக்கின்ற 300, 400 ரூபாய் ரேட்டை வைத்து, பத்திரப் பதிவு அலுவலகத்தில் இருக்கிற அந்த கையேடு குறிப்பை வைத்து நிலம் கையகப்படுத்தும்போது, நிச்சயமாக அந்த நில உரிமையாளர்கள் கொடுக்க மறுக்கின்றார்கள். அதன் காரணமாக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதிதிராவிட நலத் துறையிலே இருக்கின்ற பணம் முழுவதும் செலவு செய்யப்படாமல் அப்படியே தேங்கிக் கிடக்கின்றது. குறிப்பாக நிலம் கையகப்படுத்துவதற்கு ஒரு ரேட்டை நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு சென்டுக்கு குறைந்தபட்சம் 1,500 ரூபாய் கொடுத்து, நிலத்தைக் கையகப்படுத்தி, ஆதிதிராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பட்டாக்களை வழங்குவதன் மூலம்தான் அந்தப் பணியை நிறைவேற்ற முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு சென்டுக்கு குறைந்தபட்சம் 1,500 ரூபாய் என்றால், எல்லா நில உரிமையாளர்களும் நிலத்தைக் கொடுப்பதற்குத் தயாராக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல ஆதிதிராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் தனி வட்டாட்சியர்கள் இருக்கின்றார்கள். 2 தாலுகாகளுக்கு ஒரு வட்டாட்சியர் இருக்கின்றார். தலைமையிடமாக இருக்கின்ற திருவண்ணாமலை மாவட்டத்திலே, திருவண்ணாமலையிலேயே ஆதிதிராவிட மக்களுக்கு தனி வட்டாட்சியர் இல்லை. ஒவ்வொரு தாலுகாவுக்கும் தனி வட்டாட்சியரை ஆதிதிராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தேவையான பணிகளை நிறைவேற்றுவதற்கு நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிராமப்புறங்களிலே தீ விபத்தால் குடிசைகள், வீடுகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடுகின்றன. அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாமெல்லாம் ஆறுதல் சொல்கின்றபோது, அவர்களுக்கு 500 ரூபாயும்,

5 கிலோ அரிசியும் மட்டும் இந்த அரசு வழங்குகிறது; இது இரண்டொரு நாட்களுக்குத்தான் போதுமானதாக இருக்கின்றது. எல்லா பொருட்களையும் இழந்து, சேதமடைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு குறைந்தபட்சம் 2 ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும்; ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தையும் அரசு நிவாரணமாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அதற்குமேல், இயற்கைச் சீற்றங்களால், வெள்ளத்தால் சேதாரம் ஏற்படுகின்றபோது, ஒரு ஏக்கர் நிலம் பயிர் நிலம் நாசமடைந்தால் 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். ஆனால் தீ விபத்துக்களால் கரும்புத் தோட்டங்கள் எல்லாம் அழிந்து விடுகின்றன; சூறாவளிக் காற்றினால் வாழைத் தோட்டங்கள் எல்லாம் அழிந்து விடுகின்றன. அவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்தவிதமான நிவாரணத் தொகையும் கொடுப்பதில்லை. கரும்புத் தோட்டங்கள் எரிந்தால் 20 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகின்றது; அதேபோல வாழைத் தோட்டங்கள் எரிந்தால் 20 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகின்றது. அவ்வாறு நஷ்டமடைந்தால், விவசாயக் குடும்பங்கள் என்னாவது என்ற நிலையை அரசு எண்ணி, அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வாரிசுச் சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்கள் போன்றவற்றிற்கெல்லாம் பொது மக்கள் மனுச் செய்கின்றபோது, அவற்றைக் கொடுக்க முடியும் அல்லது முடியாது என்ற நிலையை அன்றே சொல்ல வேண்டும். அது ஒரு பெரிய வேலையே அல்ல; அரசு அதிகாரிகள் ஒரு வாரத்திற்குள் வாரிசுச் சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்களை எல்லாம் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராம நிர்வாக அலுவலர்கள். வருவாய்த் துறைக்கு அடிப்படையான அதிகாரிகளே இன்றைக்கு கிராம நிர்வாக அலுவலர்கள்தான். அவர்கள், அவர்களுடைய பகுதியிலே உள்ள தலைமையிடத்திலே, கிராமத்திலே இருந்து பணியாற்றுவதற்குத் தகுந்தாற்போல, அலுவலகம், குடியிருப்பு ஆகியவற்றை அமைத்துத் தந்தால்தான் அவர்கள் முழுமையான பணிகளை மக்களுக்குச் செய்ய முடியும். மக்களும் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு



அந்த கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும். மற்ற அதிகாரிகள், மற்ற ஊழியர்களுக்குச் செய்கின்ற சலுகைகளை எல்லாம் அவர்களுக்கும் நீங்கள் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, விபத்து மற்றும் பாம்பு கடித்தல், குறிப்பாக வனத் துறையில் பாம்பைப் பிடிக்கக் கூடாது என்று ஒரு சட்டம் இருப்பதால், பாம்பு எல்லா விவசாயப் பயிர்களிலேயும் ஊடுருவி விவசாயிகளைக் கடிக்கிறது; இப்போது விவசாயிகள் பாம்பு கடித்துத்தான் அதிக அளவிலே இறந்து கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனைகளிலேகூட பாம்பு கடித்தவர்களுக்குத்தான் அதிகமாக வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை அரசு பெரிய மருத்துவனையிலே நாள் ஒன்றுக்கு 10, 15 பேர் பாம்பு கடித்து சிகிச்சைக்காக அங்கே வந்து சேருகிறார்கள். அவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் நிதி உதவி தருவது போதுமானதாக இல்லை. அதை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும். மேலும் அந்த 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கும்போது, அதற்கு ஒருசில பகுதிகளிலே ஓர் ஆண்டு ஆகிறது. அதைப் பெறுவதற்குக் கால நிர்ணயம் செய்து, ஒரு மாதத்திற்குள்ளாக அவர்கள் அதைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோல, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் கஞ்சம ரெட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் B.C. பட்டியலிலே இருக்கின்றார்கள். அவர்களை O.C. என்று சொல்லி அதிகாரிகள் தட்டிக் கழித்து விடுகிறார்கள். குறிப்பாக, குப்பன்தாங்கல் கிராமத்திலே இருக்கக்கூடிய கஞ்சம ரெட்டியார்களுக்கு B.C. என்றும், தண்டராம்பட்டு நகரத்திலே இருக்கின்ற கஞ்சம ரெட்டியார்களுக்கு O.C. என்றும் அவர்களைத் தட்டிக் கழித்துக் கொண்டு இருக்கின்றார்கள். குப்பன்தாங்கலிலே இருப்பவர்களும், தண்டராம்பட்டு நகரத்திலே இருக்கின்றவர்களும் ஒருவருக்கொருவர் உறவினர்களாக இருந்தும், இந்த நிலைமை இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அனைத்து வட்டாட்சியர்களுக்கும், கஞ்சம ரெட்டி B.C. பட்டியலிலே இருப்பதை நீங்கள் உத்தரவு மூலம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மலைக் குறவர் என்பதில் பெரும் பிரச்சினை உள்ளது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட இதற்கு நடவடிக்கை

எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மலைக்குறவர் இனத்தைச் சார்ந்தவர்கள், மலைச்சாதி வகுப்பிலே இருக்கின்றார்கள். ஒரே குடும்பத்திலே உள்ள பெரியவருக்கு மலைக்குறவர் இனத்திற்கு உண்டான மலைச் சாதி வகுப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கிறது. அவருக்கு அடுத்தவருக்கு இதுவரை வழங்கப்படவில்லை. கடந்த 4, 5 ஆண்டுகளாக இங்கே பேசிக் கொண்டு இருந்தும் இந்த நிலைமைகளை சரி செய்ய முடியாமல் இருப்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி.கே.மணி. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி..

**திரு. க. மணிவர்மா:** ஒரே ஒரு நிமிடம், எனது தொகுதியைப் பற்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.சி.டி. தண்டபாணி):** திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே.. (குறுக்கீடு)

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி. கே. மணி, உட்காருங்கள், திரு. க. மணிவர்மா, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியிலே இருக்கின்ற மக்கள்— நான் பலமுறை எடுத்துச் சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது ஜனத்தொகை கணக்கெடுப்பு எடுப்பதால் சிறிது காலம் தள்ளிப் போகும் என்று சொல்லியிருக்கிறார்கள். —60,70 கி.மீ. சென்றுதான் தாலுகா தலைமையிடம் செல்லுகின்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஜனத்தொகை கணக்கெடுப்பு வரையிலும் அது தள்ளிப்போனாலும், அறிவிப்பையாவது இந்த அவையிலே அறிவித்து, இந்த ஜனத்தொகைக் கணக்கெடுத்த பிறகாவது, தாலுகா தொடங்கப்படும்



என்ற அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அதுவரையிலே எங்களது பகுதிக்குத் தேவையான அந்த Zonal D.T. (துணை வட்டாட்சியர்) அலுவலகத்தை தண்டராம்பட்டிலே தொடங்கி, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துகளை இங்கே நான் சுருக்கமாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய நிலையிலே மக்களுக்கு மிக நெருக்கமாக, கிராமப்புற மக்கள் நலனில் அக்கறை கொண்ட, மக்களோடு பின்னிப் பிணைந்து இருக்கக்கூடிய துறையும், அதே நேரத்திலே சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கக் கூடிய துறையும் இந்த அரசுக்கு வருவாயை ஈட்டித்தரக்கூடிய துறையும் வருவாய்த் துறைதான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அப்படிப்பட்ட இந்த வருவாய்த் துறைக்கு நல்ல பொருத்தமான, அனுபவமிக்க ஓர் அமைச்சர் பொறுப்பேற்று சிறப்பித்துக் கொண்டிருப்பதை இந்த நேரத்திலே நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

'சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம்' என்பதைப் போல 'அனுபவமும், நிர்வாகப் பழக்கம்' என்று சொல்லக்கூடிய வகையிலே பழுத்த, பண்பட்ட ஒரு மூத்த அரசியல்வாதி, இந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருப்பது சாலப் பொருத்தமானது என்பதை மீண்டும் இங்கே ஒரு முறை பாராட்டி, இந்தத் துறையிலே ஒரு சில கருத்துகளை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் ஓர் அற்புதமான உத்தரவை இங்கே வழங்கியிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே தெருச்சண்டை என்று சொல்வார்கள். பெண்கள் இருவருக்கு சண்டை வந்து விட்டது என்று சொன்னால் 'வீட்டுக்குக் கூட பட்டா இல்லாத ஒருத்தி, அவ்வளவு அகங்காரம் வந்து விட்டதா' என்று சொல்லி கேவலமாக பேசக்கூடிய நிலை கிராமப்புறத்திலே இருந்து

கொண்டிருக்கிறது. அப்படி கிராமப்புறத்திலே தான் வாழக்கூடிய வீட்டுக்குக் கூட பட்டா இல்லாமல் இருக்கக்கூடிய இந்த நிலை நாட்டிலே, தமிழகத்திலே வந்து விடக்கூடாது என்று தமிழகத்திலே முதலாவது திட்டமாக, முன்னோடித் திட்டமாக வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களே இருக்கக்கூடாது என்ற நிலையை எய்த வேண்டுமென்ற அந்த எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய வகையிலே 10 ஆண்டுகள் இருந்தாலும் சரி, அல்லது 10 ஆண்டுகளுக்குக் குறைவாக இருந்தாலும்கூட அல்லது வீட்டுமனைப் பட்டா அந்தப் பகுதியிலே இல்லாதவர்களுக்கும், அந்த கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், வீடு இல்லாமல் இருந்தாலும்கூட, அந்தக் கிராமத்தை சேர்ந்திருந்தால் அவர்களுக்கு 2 சென்ட் வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என்ற மகத்தான உத்தரவைப் பிறப்பித்து இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். அதை வரவேற்கிறோம். இப்படி 2 சென்ட், 3 சென்ட், என்று நினைக்கிறேன். ஏழையெளிய மக்களுக்கு வாரி வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே பாராட்டுகிறேன்.

நண்பகல் 12-00

வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. 'கிராம ராஜ்யமே இராம ராஜ்யம்' என்று சொல்வார்கள். அண்ணல் காந்தியடிகளிலிருந்து, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் வழியில் நின்று இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராம நிருவாகப் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் கிராமத்தை எட்டிப் பார்க்க வேண்டும்; அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் அதிகாரிகள் அவ்வப்போது நிறைவேற்ற வேண்டுமென்று ஆணை வழங்கிகொண்டிருக்கிறார்கள். அதனை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். இருந்தாலும், சில அதிகாரிகள் மெத்தனப் போக்கிலே, கிராமங்களுக்குச் செல்லாமல், கிராமப்புற மக்களை எட்டிப் பார்க்காமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களிலே நல்ல அதிகாரிகளாக இருப்பவர்களைப் பாராட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே மனம்திறந்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து நீங்கள் உத்தரவைப் பிறப்பித்து இருந்தாலும், ஓராண்டு, இரண்டாண்டு காலமானாலும்கூட அந்த ஏழையெளிய மக்களுக்கு அதிகாரிகள் பட்டா நிச்சயமாக வழங்க



மாட்டார்கள். ஆகவே நம்முடைய அரசு ஒரு காலக்கெடுவை நிர்ணயம் செய்து, இந்த மாதத்திற்குள்ளாக, இவ்வளவு நாட்களுக்குள்ளாக, நிச்சயமாக எல்லோருக்கும் பட்டா வழங்க வேண்டுமென்ற ஓர் உத்தரவை பிறப்பித்தாலொழிய அதிகாரிகள் நிச்சயமாக மெத்தனப் போக்கிலேயிருந்து மாற மாட்டார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வட்டாட்சியர் அலுவலகங்களிலே கணினியைப் புகுத்தியிருப்பதை உண்மையிலேயே பெரிதும் வரவேற்கிறோம். அதே நேரத்திலே வருவாய்த் துறையிலே பணியாற்றக்கூடிய அனைத்து அதிகாரிகளுக்கும் கணினி பயிற்சி அளிக்க வேண்டும். அந்தப் பயிற்சியையும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே, இவ்வளவு நாட்களுக்குள்ளே பயிற்சி பெற வேண்டுமென்று ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து, எல்லோருக்கும் பயிற்சி அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது அதிகாரிகளிடத்தில் போதிய விவரங்கள் இல்லை. உதாரணத்திற்குச் சொன்னால் ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதை எடுத்துக்கொண்டோமேயானால், அரசு கணக்கெடுப்புப்படி, இலட்சக்கணக்கான குடும்ப அட்டைகள் அதிகமாக வழங்கப் பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்கள் நிறைய பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடையவிடாமல் அதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்கள். ஒரு சாதாரண சின்ன கிராமம். அந்தக் கிராமத்திலே எத்தனை வீடுகள் இருக்கின்றன, ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை பேர் இருக்கிறார்கள், யார் யார் முதியோர் உதவித் தொகை பெறுகிறார்கள், விதவை உதவித் தொகை எத்தனை பேர்களுக்கு வழங்கப்படுகிறது, குடும்ப அட்டை இல்லாதவர்கள் எத்தனை பேர், இப்படிப்பட்ட எந்தப் புள்ளிவிவரங்களையும் எந்த நேரத்திலே கேட்டாலும் கூட கிராம நிருவாக அதிகாரிகள் கொடுக்கக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். ஆனால், இன்று அப்படிப்பட்ட நிலையில்லை. ஆகவே, கிராமத்திலுள்ள ஏழையெளிய மக்களுடைய முழு வளர்ச்சியிலே அக்கறை கொண்டிருக்கக்கூடிய வகையில் அந்த கிராம நிருவாக அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைப் பெறுகின்ற வகையில் ஒரு பயிற்சியினை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் மழை பொய்த்துவிட்டது, வறட்சி நிலவுகிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தற்போது நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும் எல்லோருக்கும் நில வரியை இரத்து செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அற்புதமான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். எங்கும் ஜப்தி நடவடிக்கை கூடாது என்று அரசு உத்தரவிட்டிருந்தாலும்கூட, இன்றைக்கும் ஜப்தி நடவடிக்கை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, இப்படி ஜப்தி நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இதற்கு முன்னாலே கிராம அதிகாரிகள் இருந்தார்கள். கிராம முன்சீப், கர்ணம் என்று சொல்வார்கள். அவர்களுக்கெல்லாம் இன்றைக்கு வயதாகி ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும்கூட, நீதிமன்றம் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டு கடந்த ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஓய்வூதியம் மிகக் குறைவாக இருக்கிறது. வயதான காலத்திலே மருத்துவச்செலவு என்று இப்படியெல்லாம் இருக்கக்கூடிய நிலையில் அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று ஓய்வூதியத்தைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, அவர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய மனைவிக்கு வழங்கப்படக்கூடிய பென்ஷன் 150 ரூபாய்தான். முதியோர் உதவித் தொகைக்கூட கூடுதலாக இருக்கிறது. ஆனால், அவர்களுடைய ஓய்வூதியம் 150 ரூபாய்தான். அதையும் கூடுதலாக்கித் தர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மழைக் காலங்களில் சிலர் வீடு இழந்து விடுகிறார்கள். தீயினால் வீடிழப்பு ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் வழங்கக்கூடிய நிவாரணத் தொகை என்பது மிகக் குறைவாக இருக்கிறது. நம்முடைய



மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, அவர்களுக்கு வழங்கக்கூடிய அரிசி, பாத்திரம், வேட்டி, சேலை என்பது-ஒரு வேட்டி, சேலை, பாத்திரம் 5 என்று இருந்தாலும் பற்றாக்குறையாக இருக்கிறது. அதை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு வைத்து சாப்பிடக்கூடிய வகையில் அந்த நிலையை ஈடு செய்யக்கூடிய வகையிலே அதைக் கூடுதலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சென்னை மிகப் பெரிய நகரம். மக்கள் தொகை பெருகிவிட்ட நகரம். இந்த சென்னை மாநகரத்திலே மொத்தம் 5 வட்டங்கள்தான் இருக்கின்றன. 5 தாலுகாக்கள் இருக்கின்றன. ஆகவே நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு 5 வட்டங்கள் என்பதை 10 வட்டங்களாகவாவது பிரித்து அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய பெண்ணாகரம் என்பது மேடு பள்ளங்கள், காடு மலைகள் நிறைந்த பகுதி. பரந்துபட்ட பகுதி. பெண்ணாகரம் ஒன்றியம் பரந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் நிர்வாக வசதிக்காக அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதுபோல, இப்போது சாதி சான்றிதழ்கள் கிராமங்களில் மாணவர்கள் பெறக்கூடிய நிலையில் காலதாமதம் ஏற்படுகிறது. விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சிறப்பு அடிப்படையில் பள்ளிகளில் வழங்க வேண்டுமென்ற ஒரு நல்ல உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். அதற்கு நன்றியை சொல்லிக்கொள்கிறேன். மாணவர்கள் பெறக்கூடிய சான்றிதழ்களைக் கொடுப்பதற்கு ஏற்படுகின்ற காலதாமதத்தைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல OBC certificates. இந்த OBC சான்றிதழ் வேண்டுமென்று வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்றால் மாதக் கணக்கில் ஆகிவிடுகிறது. விண்ணப்பிக்கக்கூடியவர்கள், அல்லது நேர்முகத் தேர்வுகளுக்கு செல்லக்கூடியவர்களுக்கு காலம் கடந்துவிட்டு அவர்கள் நேர்முகத் தேர்வில் பங்கு பெற முடியாத நிலை ஏற்படுகிற காரணத்தால் அந்த OBC சான்று விரைந்து கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதி. குறும்பர் இனம், குறிச்சான் இனம் என்ற மலை வாழ் மக்கள் வாழக்கூடிய பகுதி. அங்கே படித்துவிட்டு வேலைக்கு சென்றவர்கள் அல்லது நேர்முகத் தேர்வுக்குச் சென்றவர்கள்கூட நீங்கள் உண்மையிலே குறும்பர் இனத்தைச் சேர்ந்தவர்களா அல்லது குறிச்சான் இனத்தைச் சேர்ந்தவர்களா, இந்த பட்டியலில் இருக்கிறது. இருந்தாலும்கூட அதற்கு ஆதாரங்கள் தேவை என்று சொல்லி விரட்டியடித்துவிடுகிறார்கள்.

அதுபோல சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் பகுதியிலே கொண்டா ரெட்டி என்ற ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும், இந்த குறும்பர், மற்றும் குறிச்சான் போன்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் Scheduled Tribe என்ற சான்றிதழ் பெற்று 15 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக்காலம் பணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்களை உங்கள் சான்று உண்மைதானா இதற்கு ஆதாரங்கள் வேண்டுமென்று சொல்லி அங்கே சோதனையிடுகிறார்கள். அப்படி verification செய்கின்ற நேரத்திலே 1947-க்கு முன்பு ஏதாவது verification இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அவருடைய தந்தையாருக்கு சான்று இருக்கிறது. நிலங்கள் அல்லது வீடு மாற்றங்கள் செய்கின்ற நேரத்திலே அந்த ரெக்கார்டுகளில் எல்லாம் SC/ST என்று இருந்தாலும்கூட 1947-க்கு முன்பே இல்லை என்ற நிலையிலே சிலரையெல்லாம் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இப்போது வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். 15 ஆண்டுக்காலம், 20 ஆண்டுக்காலம் வேலை செய்தவர்கள், அவர்கள் குழந்தைகள் எல்லாம் படித்து திருமண நிலைக்கு வளர்ந்துவிட்ட நேரத்திலே அவர்களை வேலையிழக்கச் செய்வது எந்தவகையிலும் பொருத்தமாக இருக்காது. மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அப்படி தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் வேலைக்குச் செல்வதற்கும், வேலை பெற்றவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கும் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய வகையிலே நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே இழப்பீடுகள் என்று சொல்கிற நேரத்திலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, ஞாயிற்றுக்கிழமை 9 ஆம் தேதி என்னுடைய தொகுதியிலே மூன்று மாணவிகள் 7 ஆம் வகுப்பு, 5 ஆம் வகுப்பு, 6 ஆம் வகுப்பு, படிக்கக்கூடிய பெண் குழந்தைகள் அன்று விடுமுறை என்ற காரணத்தால் பள்ளிக்கு அருகிலே ஒரு கிணறு ஓரம் விளையாடிக்



கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு சூறாவளிக் காற்று வந்து ஒரு பெண் குழந்தையை அந்தக் காற்று கிணற்றில் தள்ளிவிடுகிறது. அந்தப் பெண் குழந்தை கிணற்றிலே விழுந்த நேரத்திலே 7 ஆம் வகுப்பு படிக்கும் மாணவியை மற்ற இரண்டு குழந்தைகள் எட்டிப்பிடிக்கச் சென்றனர். அதனால் மூன்று குழந்தைகளும் சேர்ந்து அந்தக் கிணற்றிலே விழுந்து இறந்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகளினுடைய குடும்பத்தினர்கள் வறுமையான குடும்பம். ஒரே பெண் குழந்தை உள்ள குடும்பமும் இருக்கிறது. ஆகவே குழந்தைகளை இழந்த அந்தக் குடும்பங்களுக்கு இழப்புத் தொகையாக, நிவாரணத் தொகையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று சொல்லி, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான்கூட அந்தக் குடும்பத்தை நேரில் சென்று பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு வந்தேன். அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேச வேண்டும்.

இயற்கைச் சீற்றங்கள் என்று சொல்கிற நேரத்திலே என்னுடைய பெண்ணாகரத்தைப் பொறுத்தவரையில் காடு, மலைகள் நிறைந்த பகுதி. மழைக்காலங்களில், மழை வந்து ஓடைகளில் நீர் ஓடுகின்ற நேரத்திலே இரண்டு, மூன்று நாட்களுக்குக்கூட கடந்து செல்ல முடியாத நிலையிலே தீவைப்போல காட்சியளிக்கக்கூடிய ஒரு சில பகுதிகள் இருக்கின்றன. சாணாரப்பட்டி என்ற பகுதியில் மழை அதிகமாக வந்துவிட்டால், 4 நாட்கள், 5 நாட்கள்கூட அந்த ஓடையைக் கடந்து பள்ளிக்கூடத்திற்கோ அல்லது மற்ற வேலைகளுக்கோ செல்ல முடியாது. தொடர்ந்து இதுவரையில் பாலம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தாலும்கூட நடைபெறவில்லை. கடந்த ஆண்டுகூட இரண்டு ஆண்கள் அந்த மழை நீரிலே அடித்துச் செல்லப்பட்டு, மிகவும் பரிதாபமான சூழ்நிலையிலே அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். ஆடு, மாடுகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகின்றன. ஆகவே, அப்படி தீவைப்போல காட்சியளிக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு, அரகாசநல்லி என்ற கிராமத்திற்கு அதைத் தொடர்ந்து பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன, அதிலே ஒரு பாலமும், சாணாரப்பட்டிக்கு ஒரு பாலமும், செம்மனூருக்கு ஒரு பாலமும், இந்த 3 ஊர்களும் தீவைப்போலவே காட்சியளிக்கக்கூடிய பகுதிகள் என்பதால் அவற்றுக்குப் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இயற்கைச் சீற்றத்திலிருந்து மீளமுடியும் என்று உங்களை இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-10

ஒரே ஒரு நிமிடம். அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழைகளின் வயிற்றிலே பால் வார்ப்பதைப்போல மக்கள் நலப் பணியாளர்கள் பலரை நியமித்தார்கள். நியமித்து நீண்ட காலம் ஆகிவிட்ட காரணத்தாலே, அவர்களுக்கு ஊதிய உயர்வும், பணி நிரந்தரமும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கிராம நிர்வாக அலுவலர்கள் பதவி உயர்வு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, என்னுடைய தொகுதியில் நிறைய கிராமங்களில் 30 ஆண்டுக்காலம், 40 ஆண்டுக்காலம் விளை நிலங்களாகப் பயிர் செய்யப்பட்டு வருகின்ற நிலங்களுக்குப் பட்டா இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொன்னால், கோடியஅள்ளி, வட்டுவநல்லி, அஜ்ஜநல்லி, ஏலகிரி, பிக்கிளி போன்ற பல்வேறு வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் 400 ஏக்கர், 500 ஏக்கர் விவசாய நிலம் பட்டா இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலங்களுக்கு நடப்பு ஆண்டிலே பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இப்போது நலத் திட்ட உதவிகளைப் பெறுவதற்கு வருமான வரம்பு 7,200 ரூபாய் என்று இருக்கிறது. அதைத் தயவுசெய்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று சொல்லி, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலும் ஒரு கோரிக்கையாக வைத்து வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்தில் பேசுவதற்கான வாய்ப்பைத் தந்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய நிலச்சீர்திருத்தம் சம்பந்தமான ஒரு சட்டத்தை ஏற்கெனவே இந்த அரசு இதற்கு முன்னால் ஏற்படுத்தி பல நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் தந்திருந்தாலும், இன்னும் நிலப்பிரபுக்கள் கையிலே இருந்து பினாமியாக வைத்திருக்கும் நிலங்கள் முழுமையாக எடுத்துக்கொள்ளப்படாத ஒரு நிலை இருக்கிறது; அந்த நிலங்கள் முழுவதையும் கண்டறிந்து நம்முடைய நாட்டில்



இருக்கின்ற, ஏழை எளிய, நிலமற்ற விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் முதல் இரண்டு ஏக்கர் வரை தருவதன் மூலமாக அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அந்த வகையில் நிலப்பிரபுத்துவ சம்பிரதாயத்தை அடியோடு ஒழிக்கக்கூடிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமாக, நமது நாட்டில் பெருகி வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வாய்ப்பை நாம் பெற முடியும். அந்த வகையிலே, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, 10 ஆண்டுகாலம், விவசாயிகளின் கைவசம் இருக்கின்ற புறம்போக்கு நிலத்தை அவர்களுக்குத் தருவதற்காக இப்போது ஒரு குழுமத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக பரிந்துரைகள் எல்லாம் வந்திருக்கின்றன. ஏற்கெனவே, நான் இதற்கு முன்னால் சொன்னேன். 3½ சென்ட் என்ற நிலத்தை நகரப் பகுதிகளிலே நாம் 5 சென்ட்-ஆகவும், கிராமங்கள் என்று சொல்லுகின்றபோது 10 சென்ட்-ஆகவும், அதைத் தருவதன் மூலமாக சின்ன குடிசை வைத்துக் கொண்டிருப்பவர்கள்கூட, அந்தக் குடிசைக்கு முன்னால், இரண்டு வாழை மரங்களையோ, அல்லது ஒரு தென்னை மரத்தையோ, ஒரு மாமரத்தையோ வைத்து அதனுடைய வருவாயைக்கூட அவர்கள் அனுபவித்துக் கொள்வதற்கும இயல்பாக முடியும். இது ஏற்கெனவே, கேரளாவிலே 1957 ஆம் வருடம் E.M.S.னுடைய தலைமையிலே ஏற்பட்ட அரசு முதல் முறையாக கடைப்பிடித்த ஒரு நிலைதான். நகரப் பகுதியில் 5 சென்ட் நிலமும், கிராமப் பகுதியிலே 10 சென்ட் நிலமும், அது பட்டா நிலமாக இருந்தாலும் சரி, அரசு புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, அதை வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே சிறிய ஒரு மாற்றத்தை அதிலே ஏற்படுத்த வேண்டுமென்று பணிவாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த நிலம் சம்பந்தமாக, அதைக் கண்டறிவதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஏற்கெனவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்த நிலங்கள் என்பது பல்வேறு இனமாற்றம் செய்கின்றபோது — ஏனென்றால், இப்போது குறிப்பாக கடம்மூடு என்ற இடத்திலே காந்தி நகர் என்ற ஊர் இருக்கிறது — ஒரு தனியாரிடம் அந்த நிலம் சம்பந்தமாக ஒரு கடுதாசி மட்டும்தான் இருக்கிறது. 1975 ஆம் ஆண்டு முதல் 100-க்கும் அதிகமான விவசாயிகள் அந்த நிலத்தைக் கைவசப்படுத்தி பயிர் செய்து, வீடுகளை எல்லாம் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால், அங்கே ஒரு பிரச்சினை

உருவாக்கப்பட்டு. அந்தப் பிரச்சினைக்குப் பின்னால், அந்த விவசாயிகளை வெளியேற்றுகின்ற ஒரு நிலைக்கு அங்கே செல்கின்றார்கள். எனவே, சரியாகக் கண்டறிவதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுக்களிலே, எல்லா மாவட்டங்களிலும்சரி, அந்த நிலப்பிரச்சினை சம்பந்தமாக அதை சரிவரக் கண்டறிவதற்கான வாய்ப்பைப் பெறுவது. அந்த மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்ந்த, விவசாய சங்கத்தினுடைய பிரதிநிதிகளையும் சேர்ந்த, ஒரு குழு அமைப்பதன் மூலமாக, பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வை நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அந்த வகையிலே ஒரு மாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

இதன் அடிப்படையிலேதான், இந்தக் கடம்பூர்மூடிலே இருக்கின்ற அந்த காந்தி நகர் விவசாயிகளுடைய பிரச்சினைக்கு நல்ல தீர்வை நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதுபோன்றுதான், பழைய திருவிதாங்கூர் சமஸ்தான காலத்திலேயிருந்து, 1944 ஆம் வருடத்திலே திருவிதாங்கூரின் பகுதியாக இருந்த குமரி மாவட்டத்தில் நம்முடைய வலியஎலா என்று சொல்கின்ற பகுதியிலே உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்கான காலகட்டத்திலே அரசினுடைய ஒரு அறிக்கை வந்தது. எனவே, விவசாயிகள் இந்தப் புறம்போக்கு நிலத்திற்கு வருகிறார்கள். அந்த வலியஎலா விவசாயிகள், 200-க்கு மேற்பட்டவர்கள் குடியிருக்கின்றார்கள். ஐந்து சென்ட்டிலிருந்து ஒரு ஏக்கருக்கு மேலே அவர்களிடம் கைவசம் இருக்கின்றது. நெல் சாகுபடி செய்கின்றார்கள். வாழை, கமுகு (பாக்குமரம்), தென்னை, இரப்பர் எல்லாம் போட்டிருக்கின்றார்கள். அரசிற்குச் சொந்தமான ஏதாவது மரம் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை. சட்டத்திலே என்ன சொல்லியிருக்கின்றது என்றால், 1980 ஆம் ஆண்டிற்குப் பின்னால், வந்திருக்கின்ற நம்முடைய வனத்துறைச் சட்டம், இதற்குள்ளே பாய்ந்ததன் விளைவாக, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்குப் பட்டா கொடுக்க முடியாதது மட்டுமல்ல, குடிப்பதற்குப் பாதுகாக்கப்பட்ட தண்ணீரைத் தருவதற்கோ, சாலை வசதியோ, மின்சார வசதியோ ஏற்படுத்த இயலாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இதை இனமாற்றம் செய்து, அவர்களுக்கு பட்டா தருவதற்கான ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



அதுபோன்று, இந்த நீலகிரி மாவட்டத்திலே கூடலூர் தாலுகாவிலே இருக்கின்ற நிலப்பிரபுகளுக்கும், அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கும் ஒரு பிரச்சினை ஏற்பட்டு, விவசாயிகள் தங்களுடைய கையில் இருக்கின்ற நிலத்தை விட்டுக்கொடுக்காததன் விளைவாக, அது சுப்ரீம் கோர்ட்டிற்குப்போய், சுப்ரீம்கோர்ட்டிலே விவசாயிகளுக்குச் சாதகமான ஒரு தீர்ப்பு வந்ததற்குப் பின்னாலும், அந்த விவசாயிகளுக்குப் பட்டா கொடுப்பதிலே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய கவனம் செலுத்தாமல் இருப்பது மட்டுமல்ல, அவர்களுடைய மனுக்களைப் பெற்றுக் கொள்வதிலேகூட காலதாமதப்படுத்துகின்றார்கள். பெற்றுக்கொள்ளாத நிலை இருக்கின்றது. எனவே, இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, சக்கரபாணி என்று சொல்வது, நம்முடைய சிற்றாறின் கரை-1-னுடைய அணைக்கட்டுப் பகுதியிலே வரக்கூடியது. இந்த அணை கட்டப்படுவதற்கு முன்னாலே, இரண்டு கிலோமீட்டருக்குப் பக்கத்திலே விவசாயிகள் குடியிருக்கின்றார்கள். 5 சென்ட் முதல், அரை ஏக்கரா வரை இருக்கிறது. கேட்டால், அதை அணைப் புறம்போக்கு என்று சொல்லிவிடுகின்றார்கள். எனவே, இன்று வரையிலும் அவர்களுக்குக் குடியிருப்புப் பட்டாவும் இல்லை; கையிலே வைத்திருக்கக்கூடிய நிலத்திற்கும் பட்டா கிடையாது. எனவேதான், இதிலே இனமாற்றம் செய்கின்றபோது, அந்த நீர்த்தேக்கம் வருவதற்கு முன்னாலேயே உள்ளே வந்திருக்கிற விவசாயிகளுக்கு — இதனாலே அணைக்குப் பாதிப்பு வரப்போவதில்லை. இன்னும் அணையை விஸ்தரித்தால்கூட, எந்தக் காலகட்டத்திலேயும் சரி, அந்த இரண்டு கிலோமீட்டரிலேயும் அந்த அணையை விரிவாக்க முடியாது — பட்டா தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்றுதான் இன்னொரு பிரச்சினை, நம்முடைய சிற்றாறு அணையிலே இரண்டு பகுதி - செம்பகத் தரிசு - அது அணையினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதியிலேயிருந்து 50 அடிக்கு மேலே இருக்கக்கூடிய மலைப்பாங்கான பகுதி. ஏற்கெனவே அங்கே சாராயம் காய்ச்சக்கூடிய தொழில் இருந்தது. அதை நிறுத்தினார்கள். நம்முடைய அரசு அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் உட்படச் சென்று, நிறுத்தி, அவர்களுக்குப் பட்டா தருகிறோம் என்று சொன்னார்கள். ஓராண்டு காலம் பூர்த்தியாகின்றது. இதுவரை பட்டா கொடுக்கப்படவில்லை, கேட்டால் என்ன சொல்கிறார்கள் என்றால், இது அணைப் புறம்போக்கு என்று. இந்த அணைக்கும் இதற்கும் சம்பந்தமே

கிடையாது, அணையினுடைய மட்டம் இருக்கின்றதே, நீர்ப்பிடிப்புப் பகுதியிலேயிருந்து 50, 60 அடிக்கு மேல் மேட்டுப் பாங்கான பகுதி. எனவே, இதையும் அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்து, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இன்னும் ஒன்று. கன்னியாகுமரி மாவட்டத்திலே நிலத்தினுடைய பஞ்சம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, எல்லோருக்கும் தெரியக்கூடிய பிரச்சினைதான். ஆனால், ஒன்று நடைபெற்று வருகின்றது. பெரிய தோட்ட முதலாளிகள், இரப்பர் எஸ்டேட் முதலாளிகள், அவர்களுக்கு இருக்கிற 100 ஏக்கர் புறம்போக்கானாலும் சரி, 50 ஏக்கர் புறம்போக்கானாலும் சரி, அவர்களுக்குக் குத்தகைப் பாட்டத்திற்கோ அல்லது பட்டாகூட மறைமுகமாகத் தருகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், 1980-க்குப் பின்னால், அவர்களுக்கு பட்டா வழங்கியிருந்தால், குத்தகைப் பாட்டம் வழங்கியிருந்தால், அந்த நடவடிக்கையை இரத்து செய்து, அந்த நிலத்தை அரசு கையகப்படுத்துவதன் மூலமாகத்தான், நம்முடைய ஏழையெளிய விவசாயிகளுக்கு, சாலையோரங்களிலே குடியிருக்கின்றார்களே, வாய்க்கால் ஓரங்களிலே குடியிருக்கின்றார்களே, இவர்களுக்கு வீட்டுமனை வைத்துக்கொள்வதற்காகவாவது ஒரு வாய்ப்பைப் பெறமுடியும்.

பிற்பகல் 12-20

குறிப்பாக நான் சொல்லவேண்டுமானால், நம்முடைய கால்நடைத் துறையினுடைய அமைச்சர் அவர்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், களியல் கிராமத்திலே ஒரு மருந்தகத்தைத் தருவதாகச் சொல்லி, அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் நிலம் கிடைக்கவில்லை. ஒரு முதலாளியினுடைய கையிலே இருந்த புறம்போக்கு நிலத்தை, சில பிரச்சினைகளை உருவாக்கி, ஒன்றரை ஏக்கர் எடுத்து நம்முடைய அரசினுடைய கையிலே கொடுத்து, 3 ஆண்டுகள் ஆகியும் அந்த நிலத்தை இன்னும் கையகப்படுத்தி, அந்தத் துறைக்கு ஒப்படைக்க அந்த மாவட்டத்தினுடைய நிர்வாகம் தயாராகாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைகளைப் போக்க வேண்டுமென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே இருக்கின்ற அந்தக் குழுவிலே, நான் ஏற்கெனவே சொன்னதுமாதிரி, சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாய சங்கத்தினுடைய பிரதிநிதிகள் இருந்து, எந்தப் பகுதியிலே, எந்தப்



223304

பிரச்சினைக்கு, எப்படித் தீர்வு ஏற்படுத்துவது என்று [illegible] ஆலோசனை நடத்துவதன் மூலமாக இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்திக்கொள்ள முடியும். அந்த வகையிலே, நம்முடைய விவசாயப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய கிராம ஊழியர்களைக் கடைநிலை ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நீண்டகாலமாக வைத்துக்கொண்டு, பல இயக்கங்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையிலே அரசினுடைய கவனத்தைச் செலுத்தி, தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோன்று, இதுவரையிலே, நம்முடைய தாலுகாக்களிலே இருக்கிற டெபுடி தாசில்தார்கள்; இவர்களுடைய புரமோஷன் வருகிறபோது, அந்த மாவட்டத்திலே இருக்கிற ஆட்சித் தலைவர்தான் செய்து வந்தார். சமீபத்திலே, இதிலே இன்னொருவிதமான, வித்தியாசமான ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அது மாநிலத்தினுடைய மையத்திலே வந்துதான் அதற்குத் தீர்வு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறது. இது காலதாமதத்தை ஏற்படுத்துவது மட்டுமல்ல; முன்பு இருந்த நிலையிலே வருவதுதான் உசிதமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே, டெபுடி தாசில்தார் என்ற புரமோஷன், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்திற்குள்ளே வருவதுதான் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன்.

அதேபோன்று, இயற்கைச் சீற்றங்கள் என்று சொல்கிற அந்தப் பிரச்சினை வருகிறபோது, வாழை மரத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் — என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், குறிப்பாக நேந்திரன் வாழை என்று சொல்வதை, அந்த ஊரிலே ஏத்தன் வாழை என்று சொல்வார்கள்; அதை நூற்றுக்கணக்காகப் பயிரிடுவார்கள். சில நேரங்களிலே, காற்று வேகமாக அடிப்பதன் மூலமாக, அதுபோன்ற இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, அவர்கள் பயிரிடும் வாழை அழிந்து விடுகிறது. ஆனால், அதற்கு அரசு தருகிற சலுகை என்பது, உதவி என்பது, மிகக் கொஞ்சமானது. அதை உயர்த்துவதன் மூலமாகத்தான் மீண்டும் அவர்கள் பயிரை வைத்துக் கொள்வதற்கும், வாங்கிய கடனை, கூட்டுறவுச் சங்கத்திலே கடன் வாங்கினாலும் சரி; அந்தக் கடனைக் கட்டுவதற்கு இயலாத நிலையிலே இருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாலே இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை ஒரு

கிராமத்திலே ஏற்பட்டு, அருமனை கிராமத்திலே, கடையாலுமூடு கிராமத்திலே அந்த வாழை விவசாயிகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள். உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. எனவேதான், அந்த நிவாரணத் தொகையை, இயற்கைச் சீற்றங்கள் வருகிறபோது, அந்தத தொகையைச் சற்று உயர்த்தி, காலாகாலத்திலே அவர்களுக்கு வழங்குவதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய இந்த சுருக்கமான விவரங்களை நான் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நான் தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிலப் பிரச்சினையிலே, நம்முடைய அரசாங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய அரசாங்கம், ஒரு நபருக்கு 15 ஏக்கர் என்று நிர்ணயம் செய்தது. ஆனால், அதற்கு முன்பே, சுதந்திரம் அடைந்தவுடனேயே — அப்போது பெரிய மிராசுதார்கள், ஜமீன்தார்கள் இருந்தார்கள் — அந்த ஜமீன்தார்களுக்குக்கூட பயப்படாமல், அந்த 600-க்கு மேற்பட்ட ஜமீன்தார்களை ஒரே கையெழுத்தில் ஒழித்தது இந்தக் காங்கிரஸ் மகாசபை என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதன் பிறகு, 30 ஏக்கர் — இங்கேயெல்லாம் ஆயிரம் ஏக்கர், 1,500 ஏக்கர் என்றெல்லாம் வைத்திருந்த நிலப் பிரபுக்கள் சட்டமன்றத்திலே இருந்தார்கள். 1957-லே நாங்கள் எல்லாம் இருந்த சமயம். அப்போது ஒரு சட்டம் கொண்டு வந்து, நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்து, 5 பேர் இருக்கிற ஒரு குடும்பத்திற்கு — 30 ஏக்கர் என்று வைத்திருந்தார்கள். பிறகு, மேற்கொண்டு ஒரு நபர் வந்தால், அவருக்கு 5 ஏக்கர்; மொத்தம் 60 ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டம், காங்கிரஸ் மகாசபை தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது. அதையும் நீங்கள் ஏதோ — அதற்குப் பிறகு செய்தீர்கள், 15 ஏக்கர் என்று. நீங்கள் இப்போது நீண்டகாலமாக இருக்கிறீர்கள். ஆகையினால், நீண்டகாலமாக ஆளுகின்ற நீங்கள், ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியிலே எவ்வளவு நிலங்கள் எடுக்கப்பட்டன;



உங்களுடைய ஆட்சியிலே எவ்வளவு நிலங்கள் எடுக்கப்பட்டன என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அந்த நிலத்தை எல்லாம் எடுத்து, ஏழைகளுக்கு — இப்போது பேசினாரே, ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று விநியோகம் செய்ய வேண்டுமென்று.... (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்பிலே, காங்கிரஸ் ஆட்சியிலே எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டது; தி.மு.க. ஆட்சியிலே எவ்வளவு எடுக்கப்பட்டது என்ற விவரங்கள் இருந்தால், அம்மையார் அவர்களே சொல்லலாம்.

பிற்பகல் 12-25

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதல் மந்திரியாக இருந்தால் உடனடியாகச் சொல்லியிருப்பேன். நான் சாதாரண எதிர்க்கட்சியிலே இருக்கிறேன். எப்படிச் சொல்ல முடியும்? அது உங்களிடம்தான் இருக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த அவையிலே பலமுறை சொல்லி இருக்கிறேன். முதலமைச்சராகச் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது கேட்காமல் இருந்துவிட்டீர்களா? சொன்னால் சொல்லிவிட்டுப் போ என்று இருந்துவிட்டீர்களா? 10,000 அல்லது 12,000 ஏக்கர் நிலம்தான் அப்பொழுது எடுக்கப்பட்டது; 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா கொண்டு வந்தபிறகு. 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்டபோது, இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டு, விவசாயிகளுக்குத் தரப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** நான்தான் நன்றி சொன்னேனே. நீங்கள்தான் நீண்டகாலம் இருந்தீர்கள், ஏன் செய்யக்கூடாதா, நீண்டநாள் இருக்கின்றீர்களே, எங்களைப் பார்த்து 20 ஆண்டு என்று சொன்னீர்கள். இப்பொழுது, 30-35 ஆண்டுகளாக இருக்கின்றீர்கள், நீங்கள் ஏன் செய்யக்கூடாது? நீங்கள் செய்கின்றீர்கள், நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன், அது வேறு. ஆனால், இன்றைக்கு ஏழை மக்களுக்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இந்த நிலத்திலும் பல விஷயங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகையினாலே, இந்த நிலத்திற்கு, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கினால்தான் நன்றாக இருக்கும். புறம்போக்கு நிலத்தை நாம் எடுக்கின்றோம். இந்தப் புறம்போக்கு இடத்தை எடுத்து, அதை நாம் பட்டா போட்டுக் கொடுப்பதற்கு ஏற்பாடு

செய்கின்றோம். அதோடு, இந்தச் சட்ட மன்றத்திலே, 1989-90-இலேயே பேசினேன். அதாவது பட்டா வழங்குவதிலே ஹரிஜனங்களுக்கு மட்டும்தான் வீட்டடி மனைப்பட்டா கொடுக்கின்றோம். ஆனால், இதர ஜாதி, அத்தனைப் பேருக்கும் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லும்போது, இதே மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொல்வதைப் பார்த்து நான் உள்ளம் எல்லாம் பூரிப்பு அடைந்தேன் என்று சொன்னார்கள். அது இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று நான் அறிகின்றேன். ஆகையினாலே, இப்பொழுது, அவர்களுக்கு எல்லாம் வீட்டடி மனை கொடுக்கும்போது, இனிமேல் நிலம் நமக்கு வந்து, பாரதியார் பாடினார் 30 கோடி ஜனங்கள் என்று. இன்றைக்கு 100 கோடியை எட்டிவிட்டோம். நிலம் அப்படியே இல்லை. அந்த நிலத்தைக்கூட, ரோட்டுக்கு எடுத்துக்கொள்கிறோம், விவசாயம் செய்த நிலத்திலே எல்லாம் வீடு கட்டி விடுகிறோம், கண்மாய் வெட்டி விடுகிறோம், கட்டடங்கள் கட்டுகிறோம். நிலம் குறைகிறது. ஆகையினாலே, எங்கேயெல்லாம் வீட்டடி மனை எடுத்துக் கொடுக்கின்றோமோ, அவர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்கின்ற ஒரு திட்டத்தை நாம் உருவாக்கினால்தான் இந்த நிலத்தை, விவசாயம் செய்த நிலத்திற்கு கொஞ்சம் பாதுகாப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுக்குமாடி கட்டுவதற்கு எங்களுக்கு ஏது பணம் என்று நீங்கள் நினைக்கலாம். அதற்குச் சொல்கிறேன். உலக வங்கி உங்களை நம்பிக் கடன் கொடுக்கிறது. ஹட்கோவிலிருந்து உங்களை நம்பி கடன் கொடுக்கிறார்கள். யார் யாருக்கு, நிலங்களை, எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, அய்யராக இருந்தாலும் சரி, அய்யங்காராக இருந்தாலும் சரி, பிள்ளைமாராக இருந்தாலும் சரி, நாயக்கமாராக இருந்தாலும் சரி, கோனாராக இருந்தாலும் சரி, எல்லா ஜாதியினருக்கும், எத்தனை ஏழைகளுக்கு, வீட்டடி மனை கொடுக்கின்றோமோ, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு, கடன் மூலமாகவாவது, அங்கே வீடு கட்டிக் கொடுப்பதற்கு, அடுக்குமாடி கட்டுவதற்கான ஒரு வழிவகையைச் செய்ய வேண்டுமென்று, இந்த நேரத்திலே நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இதுமாத்திரமல்ல, நாம் பட்டா கொடுக்கிறோம். நாம் ஒரு சட்டம் பண்ணியிருக்கிறோம். யாராவது, இப்போது எனக்குக் கொடுக்கிற பட்டாவை, நான் என்னுடைய தலைவருக்குக் கொடுத்துவிட்டால், விற்றுவிட்டால் ஜெயில் தண்டனை என்று சட்டத்திலே திருத்தம் வைத்திருக்கிறோம். ஆனால், இப்பொழுது எங்கே நிலம் வாங்கிக்



கொடுத்தாலும், எல்லாம் எழுதி கொடுக்கிறான். நாம் எப்படியோ, கஷ்டப்பட்டு நிலத்தை வாங்கிக் கொடுத்து விடுகிறோம். அந்த நிலத்தை ஒரு வருடம், இரண்டு வருடத்தில் விற்றுவிடுகிறார்கள். அதனாலே, யார் விற்கின்றார்களோ, அவர்களுக்கும் ஜெயில் தண்டனை கிடைக்கவேண்டும். யார் வாங்குகின்றார்களோ, அவர்களுக்கும் ஜெயில் தண்டனை கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கினால்தான், யாருக்கு நிலம் வாங்கிக் கொடுத்தோமோ, அதை அவர்களே அனுபவிக்க முடியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதன்பிறகு, நான் பலமுறை சொல்லிவிட்டேன். அதை ஏனோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த அம்மையார் சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும், எப்படியோ இருக்கட்டும் என்று நினைக்கின்றார்கள். இந்த இயற்கைச் சீற்றங்கள், அதைத்தான் நான் சொன்னேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சென்று கேட்டேன். நான் இறுதியாகப் பேசுகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன், கொஞ்சம் அனுமதி கொடுங்கள்.

அந்த ஏழை மக்களை, அந்த பாதிக்கப்பட்ட மக்களை நீங்கள் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டேன். ஏனென்றால், வருசநாட்டுப் பகுதியிலே மழை பெய்கிறது, கம்பம் பள்ளத்தாக்கிலே மழை பெய்கிறது. அங்கேயிருந்து வெள்ளம் கரைபுரண்டு வருகின்றது. நான் பாதிக்கப்படுகின்றேன், என்னுடைய மக்கள் பலர் இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய நிலத்திலே, விவசாயம் செய்துள்ளதை, அந்த விவசாயப் பயிர்களை எல்லாம், மணல் மூடிவிடுகிறது. அவர்களுடைய வீடு, அதாவது சித்தர்கள் நத்தத்திலே 262 வீடு, மல்லையம்பட்டியிலே 239 வீடு, பனையப்பட்டி, சக்கிலியப்பட்டியிலே 200 வீடு, குன்னுவாரன் கோட்டையிலே 100 வீடு, இப்படி மொத்தம் 998 வீடுகள் முழுமையாகப் போய்விட்டன. நான் உங்களைக் கேட்டேன். தயவுசெய்து, இதற்கெல்லாம் ஒரு நிவாரணம் செய்யுங்கள். அவர்களுக்கு, கடனையாவது கொடுங்கள். 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, 25 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், 25 ஆயிரம் ரூபாய் கடனாகவும் கொடுங்கள் என்று நான் கேட்கிறேன். ஏனோ உங்களுடைய மனதிலே, இரக்கச் சிந்தனை வரவில்லை என்று நான் கருதுகின்றேன். அதுமாத்திரமல்ல, குன்னுவாரன்கோட்டையிலிருந்து பேரணை வரைக்கும் ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று நான் சொன்னேன். அதையும் நீங்கள் செய்ய மறுக்கின்றீர்கள். இதற்கு என்ன காரணம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இல்லை, இந்த பொன்னம்மாள் இருக்கிற வரைக்கும் செய்யக்கூடாது என்ற ஒரு

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [2000 ஏப்ரல் 12

நினைப்பு உங்களுக்கு இருக்குமேயானால், தயவுசெய்து சொல்லுங்கள். எனக்குத் தேவையில்லை ஐயா, இந்தச் சட்டமன்ற உறுப்பினர் பதவி. நான் பல ஆண்டுகாலம் இருந்துவிட்டேன். என்னுடைய தலைவர் மூப்பனார், எனக்கு இந்தச் சீட்டு கொடுத்து என்னை ஜெயிக்க வைத்தார் அவரிடத்திலே சொல்லிவிட்டு நான் வேண்டுமானால், இதைக்கூட ராஜினாமா செய்வேன்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. ஒரு நேரம், உங்களை மாதிரிச் செய்கிறவர்கள் யாரும் இல்லை, நீங்கள் எல்லாம் செய்து கொடுக்கிறீர்கள் என்று சொன்னீர்கள். அப்புறம் இரக்கம் இல்லை என்கிறீர்கள்; இரக்கச் சிந்தனை இல்லை என்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, அதெல்லாம் இருக்கட்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரமாகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இந்த வேலை முடியவில்லை. இது மக்களுடைய பிரச்சினை. கல்லூரி கொடுத்தீர்கள், அணைகள் கொடுத்தீர்கள், பாலத்தைக் கொடுத்தீர்கள், அதையெல்லாம் நான் இல்லை என்று சொல்லவில்லை, அதையெல்லாம் சொல்லிக்கொண்டே வரலாம். ஆனால், இது மக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினை என்று நான் சொல்லியிருக்கின்றேன். இவ்வளவு தண்ணீரிலே முதல்வர் போவாரா? நான் ஒரு பெண், 64 வயது கிழவி. நான் அந்தத் தண்ணீரிலே போகிறேன். அந்த இரக்கச் சிந்தனை வேண்டாமா? ஏன் இரக்கம் இல்லை? ஆகையினாலே, தடுப்புச்சுவர் கட்டுவதற்கு தயவுசெய்து ஏதாவது செய்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், முதல்வர் அவர்களுடைய மனதை மாற்றி, அதற்கான பணத்தை ஒதுக்கி, தடுப்புச்சுவர் கட்ட வேண்டுமென்று (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள் Please Sir. (Interruption) No, Sir. No, Sir.

**திரு. ஜி. பழனிசாமி:** அம்மையாருக்கு 84 வயது; 64 வயது என்கிறார்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அவருக்குத் தெரியும் என்னுடைய வயது. 1957-ல் இங்கு வரும்போது நான் எப்படி இருந்தேன் என்று இந்த மன்றத்திலே உள்ள அத்தனை பேருக்கும் தெரியும். (சிரிப்பு) ஏனென்றால், உங்களை மாதிரி 50 வயதிலே எம்.எல்.ஏ. ஆக வரவில்லை. நான் எப்படி வந்தேன், எத்தனை வயதிலே வந்தேன் என்று எனக்குத் தெரியும். தொகுதி மக்களுக்குத் தெரியும். நீங்கள் 90 வயது என்றுகூட வைத்துக்கொள்ளுங்கள், நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆகையினால், தயவுசெய்து.....



2000 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்காவது உண்மையான வயதைச் சொன்னீர்கள், ரொம்ப மகிழ்ச்சி. (சிரிப்பு)

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அதை நடத்திக் கொடுப்பதற்குப் பணம் ஒதுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, என் உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் முதற்கண் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். Well in advance. (சிரிப்பு) காவியத் தலைவனாக, கவிதையின் நாயகனாக, விமர்சனங்களின் வித்தகனாக, அரசியல் துறையின் ஆசானாக, ராஜதந்திரத்தின் முதல்வனாக, மனிதாபிமானத்தின் முன்னோடியாக, (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கையின் கொற்றமாக மிளிர்ந்து பல முகங்கள் ஒருசேரப்பெற்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் வருவாய்த் துறை அமைச்சராக 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்று, 5 ஆம் ஆண்டு, முறையாக வருவாய்த் துறை மானியக் கோரிக்கைகளை இந்தப் பேரவைமுன் உங்கள் ஒப்புதலுக்கு வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இத்துறையின் பணிகள் விரிவாக கொள்கை விளக்கக் குறிப்பிலும், சாதனை அறிக்கையிலும் எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. எனவே, குறிப்பாக சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முதல்வர் கலைஞர் அவர்கள் கோட்டையில் முதல்வராக மீண்டும் காலடி பதித்தவுடன் முதன்முதலாக அவர் கையொப்பம் இட்ட ஆணை மனைவரி இரத்து. இது, அவர் வருவாய்த் துறை மூலம் மக்களுக்கு அளித்த முதல் சலுகை மற்றும் பரிசு.

அறிஞர் அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார். அந்த அண்ணலின் அடியொற்றி நடக்கும் கலைஞரும் அவரது அரசும் நலிந்த மக்களின் மேம்பாட்டுக்காக நாள்தோறும் செயல்பட்டு வருகிறது. இது தொடர்பாக அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தவாறு வருவாய்த் துறை அண்மையில் பிறப்பித்த ஓர் ஆணையை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [2000 ஏப்ரல் 12

சென்னை புறநகர்ப் பகுதி, கோவை, மதுரை, திருச்சி ஆகிய மாநகராட்சிப் பகுதிகள் உள்ளிட்ட அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஏழை எளிய மக்கள் பன்னெடுங்காலமாக ஆக்கிரமிப்புச் செய்து குடியிருந்து வருகிறார்கள். ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில், நீண்டகாலமாகக் குடியிருந்து வரும் நிலங்களை அவர்களுக்கே ஒப்படை செய்ய எண்ணி, எங்களை எல்லாம் கலந்து, ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்து, அவர்களின் பரிந்துரையைக் கண்டறிந்தார். அரசுக்குத் தேவை இல்லாத நிலங்களில் 20 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கலாம் என முதலில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், நிதிநிலை அறிக்கையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருவோருக்கும் பட்டா வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் இச்சலுகைகளை மேலும் விரிவுபடுத்தியுள்ளார்கள். உதாரணமாக, ஒரு சர்வே நம்பரின் மொத்தப் பரப்பளவு 2 ஏக்கர் என்று இருந்து, அதில் ஒன்றேகால் ஏக்கரில் 30 குடும்பங்கள் வீடு கட்டியும் குடிசை போட்டும் வாழ்ந்து வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். மேற்படி 30 குடும்பங்களில் 15 குடும்பங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலும், 10 குடும்பங்கள் 7 ஆண்டுகளுக்கு மேலும், 5 குடும்பங்கள் 2 ஆண்டுகளுக்கு மேலும் குடியிருந்து வந்தால், இந்த 2 ஏக்கரும் அரசுக்குத் தேவையில்லை என்ற நிலை இருக்குமானால், அந்த 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 15 குடும்பங்களுக்கு மட்டுமல்லாமல், 7 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 10 குடும்பங்களுக்கும், 2 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் 5 குடும்பங்களுக்கும்கூட பட்டா வழங்கப்படும் என்றும்; அதுமட்டுமல்லாமல், அதே சர்வே நம்பரில் காலியாக உள்ள 75 சென்ட் இடத்தையும்கூட, அதே ஊரில் வீட்டுமனை இல்லாத தகுதியுள்ள ஏழை எளியோருக்குப் பிரித்துப் பட்டா வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய மனித நேய வெளிப்பாடு அவர் ஒருவருக்கே உரித்தானது. மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பின் அடிப்படையில், ஏற்கெனவே வெளியிடப்பட்ட ஆணைக்கு உரிய திருத்தங்கள் வெளியிடப்படும்.

பிற்பகல் 12-35

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசும்போது கவிப் பேரரசு ஷெல்லியை உங்களுடன் அழைத்து வந்தேன். இம்முறை லெபனான் நாட்டுக் கவிஞன் 'கலீல் கிப்ரான்' என்பவரது சில உணர்வுகளைப்



2000 ஏப்ரல் 12] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். அவர் எழுதியதை அப்படியே படித்துக் காட்டுகிறேன்.

'My Countrymen' என்ற தொகுப்பில் அவன் கூறுகிறான்—

``What do you seek, My Countrymen?
Do you desire that I build for
You gorgeous palaces, decorated
With words of empty meaning, or
Temples roofed with dreams? or
Do you command me to destroy what
The liars and tyrants have built?
Shall I uproot with my fingers
What the hypocrites and the wicked
have implanted? Speak your insane
Wish:
Let us climb
To the Mountain top and view the
Beauty of the world. And you
Answered me, saying, `In the depths
Of this valley our fathers lived,
And in its shadows they died, and in
Its caves they were buried. How can
We depart this place for one which
They failed to honour?'
Hypocrisy is your religion, and
Falsehood is your life, and
Nothingness is your ending; why,
Then, are you living? Is not
Death the sole comfort of the
Miserables?"

"எனது நாட்டோரே... நீங்கள் வேண்டுவது என்ன?
பொருளற்ற வார்த்தைகளில் அலங்கரிக்கப்பட்ட
கம்பீரமான அரண்மனைகளையும்
கனவுக் கூரை வேய்ந்த கோவில்களையும் நான்
கட்டித் தர வேண்டுமா? அல்லது
பொய்யர்களும் கொடுங்கோலர்களும் கட்டிய
மாளிகைகளை நான் மாய்த்துவிட வேண்டும் என
ஆணையிடுகிறீர்களா? வீணர்களும்
வேடதாரிகளும் நட்டுவித்தவற்றை
வேரோடு களைய வேண்டுமா? கூறுங்கள்.....
மலையின் முகட்டிற்குச் செல்வோம்; அங்கிருந்து
இவ்வுலகின் அழகினைக் காண்போம் என்றேன்.
நீங்கள் பதில் அளித்தீர்கள்....
இந்தச் சமவெளியின் அடித்தளத்தில் நமது
முன்னோர்கள் வாழ்ந்தார்கள்....
அதன் நிழல்களில் அவர்கள் இறந்தார்கள்;
அதன் குகைகளில் அவர்கள் புதையுண்டார்கள்.
அவற்றை மதிக்க மறந்தவர்களுக்காக
நாம் ஏன் இதைவிட்டு விலக வேண்டும்?
நான் கூறுவேன்....
கயமை உங்கள் மதம்;
பொய்மை உங்கள் வாழ்க்கை
வெறுமை உங்கள் முடிவு. ஆகவே
வாழ்க்கை உங்களுக்கு எதற்காக?
துன்பமே வாழ்வாய் உடையோருக்கு
மரணம் நிம்மதி அல்லவா"

காலங்காலமாய்த் துயரத்தில் வாழ்ந்துவரும் இத்தகைய ஏழைகளின், நலிந்த பிரிவினரின் நம்பிக்கைகளை நனவாக்க உயிரூட்டத் தேவையானது அவர்கள்பால் அன்பு, இரக்கம் மற்றும் மனித நேயம்; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இவை அனைத்தும் உள்ளதால்தான், நலிந்தோர் நலம் காக்கும் முதல்வராய் அவர் பரிமளிக்கிறார். வருவாய்த் துறை அவரது எண்ணங்களுக்குச் செயல்வடிவம் தரும்; ஆணைகளை நிறைவேற்றி வரும்.



பல திட்டங்களுக்குத் தமிழகம் முன்னோடியாக இருந்து வந்திருக்கிறது. அதிலும் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னோடியிலும் முன்னோடி என்றே நான் கூறினேன். 1969 ஆம் ஆண்டில் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தபோது, அப்போதுதான் சோழப் பேரரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த மனு நீதித் திட்டத்தினை இந்தப் புதிய யுகத்தில் அவர் அறிமுகம் செய்துவைத்தார்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் கிராமங்களுக்கே நேரில் சென்று மக்களின் குறைகளைக் கண்டறிந்து, அந்த இடத்திலேயே இயன்றவரை முடிவு காண்பதால் இலட்சக்கணக்கான கோரிக்கைகளுக்குத் தீர்வு ஏற்படுகிறது. அரசாங்கத்தை, மக்களை நோக்கி அவர்களது வீட்டு வாயிலுக்கே கொண்டுசெல்ல வேண்டும் என்ற தற்போதைய நிர்வாகக் கோட்பாடுகளை எதிரொலிக்கும் வண்ணம் இத்திட்டம் அமைந்துள்ளது. இதுகுறித்த விவரங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்த உள்ள மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கையில் விரிவாகக் குறிப்பிடப்படும் என்பதால், அதுகுறித்து நான் அதிகம் இங்கே குறிப்பிட வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இத்தகைய பயனுள்ள திட்டத்தை (குறுக்கீடு) என்ன சிரிக்கிறீர்கள்? - ஒருங்கிணைத்து ஆற்றும் பொறுப்பு வருவாய்த் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நான் பலமுறை இந்த மாமன்றத்திலே கூறியபடி வருவாய்த் துறை பல்வேறு துறைகளுக்கும் தாய்த் துறையாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இதைத் தெரிவித்தார்கள். நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கி கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரும் துணையாக இருப்பது வருவாய்த் துறையாகும். பொதுமக்களின் வாழ்வில் பிறப்பிலிருந்து இறுதி நிகழ்ச்சியாம் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் வருவாய்த் துறையின் பங்களிப்பு இன்றியமையாததாக அமைகிறது.

பிற்பகல் 12-40

சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், சமூக நீதி காப்பதிலும் வருவாய்த் துறை தொடர்ந்து பெரும் தொண்டாற்றி வருகிறது. மக்கள் சொத்தாக இருக்க வேண்டிய விளைநிலங்கள் ஒரு சிலர் கைவசம் மட்டும் இருந்தது. உண்மையான நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலம் தனி நபர்

மற்றும் அவர்களது குடும்பக் கைப்பற்றில் இருந்த நிலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பைக் குறைத்து, அதிக நிலங்களைக் கையகப்படுத்தவும், அவற்றை நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கவும் வகை செய்தது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசுதான். இதன் மூலமும், பல குடிவாரச் சட்டங்கள் மூலமும் கிராமப்புற ஏழைகளின் நிலை உயரவும், ஏற்றத்தாழ்வுகள் குறையவும் தக்க முயற்சிகளை மேற்கொண்டு சமூகநீதி பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

நலிவுற்றோர் குடும்ப நல நிவாரணத் திட்டம், தீ விபத்து நிவாரணத் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம் போன்றவைகள் மூலம் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகைகளை அதிகரித்து, நலிந்தோர் நலம் காக்கும் துறையாக வருவாய்த் துறை விளங்கி வருகிறது. நலிந்தோர் என்றால் மனிதர்கள் மட்டுமல்ல, இந்த அரசைப் பொறுத்தவரை கால்நடைகளும்கூட அடங்கும். இயற்கைச் சீற்றங்களின்போது கால்நடைகள் இறந்தால் அதற்காக ஒரு இழப்பீட்டுத் தொகையை இந்த அரசு 1996 முதல் வழங்கி வருகிறது.

மக்களின் உடைமைகளுக்கு உத்தரவாதம் அளித்து, அவர்களது உரிமைகளைக் காக்கின்ற துறை வருவாய்த் துறை ஆகும். விவசாய நில உடைமைதாரர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்க ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முழு செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ள வேலூர் மாவட்டம் நீங்கலாக மற்ற 8 மாவட்டங்களில் ஏற்கெனவே வழங்கப்பட்ட பதிவேடுகளில் நாளது வரையிலான மாற்றங்களைக் கொண்டுவந்து, இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இத்திட்டம் முழு செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்றும், இதர மாவட்டங்களில் வரும் நிதி ஆண்டில் நில உரிமைப் பதிவேடு வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். அவரது ஆணையை ஏற்று, இப்பணியை வருவாய்த் துறை எவ்விதத் தொய்வும் இன்றி முடித்துக் கொடுக்கும் என்பதைக் கூற வேண்டியது எனது கடமை என்று நான் கருதுகிறேன்.

நில அளவைத் துறையில் பின்பற்றப்படும் வழிமுறைகள் பன்னெடுங்காலமாக பழமையானதாகவே இருந்து வந்திருக்கிறது. ஆயினும், விண்வெளி சமிக்ஞையைக் கொண்டு அளவிடும் சிறப்பு அம்சம் பொருந்திய Global Positioning System என்ற தொழில்நுட்பத்தைக் கண்டறிவதற்காக இந்த அரசு நில அளவை ஆணையர், வருவாய்த் துறைச்



செயலாளர் ஆகிய அலுவலர் குழுவினை ஜெர்மனி நாட்டிற்கு அனுப்பி கண்டறியச் செய்து, இத்தகைய நவீன தொழில்நுட்பங்களை நிலஅளவை செய்வதற்குப் பயன்படுத்தும் ஒரு சோதனைத் திட்டத்தினை நடப்பு ஆண்டில் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. ஏனெனில், 'கலீல் கிப்ரான்' கூறியதைப்போல்—

> "Knowledge is a light, enriching
> the warmth of life, and all may
> partake who seek it out".

அறிவு என்பது ஒரு ஒளி. வாழ்க்கையின் சுகத்தை அது கூட்டுகின்றது. யார் அதைத் தேடிச் செல்கிறார்களோ அவர்கள் அதில் பங்கு பெறுகிறார்கள் என்பதுதான் இதன் சாராம்சம். அத்தகைய ஒரு அறிவினைப் பெறுவதற்கு, அதை மக்களுக்குப் பயன்படுத்துவதில் இந்த அரசு என்றும் உறுதி பூண்டுள்ளது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. கணினிகள் காலத்தின் கட்டாயமாக ஆகிவிட்டன. ஆகவே, வருவாய்த் துறை, இந்த கணினி மயமாக்குவதிலிருந்து ஒதுங்கி இருக்க இயலாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டவாறு தமிழ்நாட்டில் 206 வட்டங்களில் 50 வட்டங்கள் முதல்கட்ட கணினி மூலமான செயலாக்கத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. படிப்படியாக எஞ்சிய வட்டங்களில் நடப்பு நிதி ஆண்டிலேயே இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக, அக்டோபர் முதல் டிசம்பர் வரையான வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் தமிழகம் பெருமழை, வெள்ளம் ஆகியவற்றைச் சந்தித்து வருகிறது. 1999 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இப்பருவமழை இயல்பானதாக இருந்திருப்பினும், 19-11-1999 முதல் 25-11-1999 வரை திருச்சி, கரூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்கள் அதிகபட்ச மழையினைப் பெற்றன. இதில் திருச்சி மாநகரம் இதுவரை கண்டறியாத மழையினைப் பெற்றது. இயற்கை இன்னல்களால் துயர் உறும் மக்களின் துயர் துடைக்கும் துறையாக வருவாய்த் துறை என்றும், எப்பொழுதும் விளங்கி வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி நானும், மாண்புமிகு உணவு அமைச்சர், அவர்களும் உடனடியாக திருச்சி சென்று வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டோம்.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [2000 ஏப்ரல் 12

இயற்கைச் சீற்றங்களை எதிர்கொள்ள, உண்மையான துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எங்களை அனுப்பியதோடு மனம் நிறைவுறாத மாண்புமிகு முதல்வர் தாமே நேரடியாக மறுநாளே துயர் நிறைந்த, வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்க்க விரைந்து வந்தார்கள். இராணுவத்தின் உதவி கோரப்பட்டது. பாதுகாப்பான பகுதிகளுக்கு மக்கள் கொண்டு செல்லப்பட்டனர். அனைத்து நிவாரண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. வெள்ளத்தால் இறந்தவர்களது குடும்பங்களுக்கு 15.45 இலட்சம் ரூபாயும், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்காக 1.83 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது. சாலைகள், பாசன ஆதாரங்கள் முதலியவற்றின் சீரமைப்புக்கு 32.25 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது. கரூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலை சீரமைப்புக்கு 75 இலட்சம் ரூபாய் வழங்கவும், கரூர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக 28.93 இலட்சம் ரூபாய் வழங்கவும் ஆணை இன்று வெளியிடப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மக்கள் பணியில் இரவும் பகலும் ஈடுபட்டு, 'உடுக்கை இழந்தவன் கைபோல' - உதவிக்கரம் நீட்டும் வருவாய்த் துறை அலுவலர்களது பணி பாராட்டுக்குரியது.

'கலீல் கிப்ராவின்' பின்வரும் வரிகள் மீண்டும் என் நினைவுக்கு வருகின்றன:

"March on. Do not tarry. To go forward
is to move toward perfection.
March on, and fear not the thorns
or the sharp stones on Life's path".

முன்னேறிச் செல்; தயக்கம் காட்டாதே.
முன்னேறிச் செல்வது, முழுமையை நோக்கிப் போவதாகும்.
ஆகவே, முன்னேறு; வாழ்க்கைப் பாதையில் காணப்பெறும்
முட்களையோ, கூரிய கற்களையோ கண்டு அஞ்சாதே;
முன்னேறு.

"Devotion, dedication, determination and direction"



2000 ஏப்ரல் 12] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

அதாவது, தீர்க்கமான குறிக்கோள் - கொள்கையில் முழுமையான ஈடுபாடு, இலட்சியத்திற்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொள்ளுதல், தடம் மாறா, மக்களை வழி நடத்தும் உறுதி என்ற குண நலன்களைக் கொண்டுள்ள தமிழக முதல்வரின் ஒப்பற்ற வழிகாட்டுதலோடு வருவாய்த் துறை தன் பணிகளைத் தொடர்கிறது; இனியும் தொடரும்.

சென்ற ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், நிறைவினைத் தருகின்ற நேரத்தில் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள சில பணிகள் குறித்து சில அறிவிப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்களது அனுமதியுடன் வெளியிட நான் விரும்புகிறேன். (குறுக்கீடு) அறிவிப்புகள்தான்.

**அறிவிப்பு-1**

தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு திட்டத்தை முதல்கட்டமாக 9 மாவட்டங்களில் செயல்படுத்தியபோது, நில உரிமைப் பதிவேடுகள் அச்சடிக்கப்பட்டு, கைகளால் எழுதப்பட்டு வழங்கப்பட்டன. தற்போது, வருவாய்த் துறையில் அனைத்துப் பணிகளும் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றது. இதைக் கருத்தில் கொண்டு, வருங்காலத்தில் நில உரிமைப் பதிவேடுகள் கணினி மூலமாகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், நில உரிமைப் பதிவேட்டில் உள்ள பதிவுகள் நேர்த்தியாகவும், தெளிவாகவும், எளிதாகப் படிக்கும் வகையிலும் அமையும். மேலும், இந்த விவரங்கள் கணினியில் எப்பொழுதும் பாதுகாக்கப்படுவதால், திருத்தங்கள், மாறுதல்கள் எளிதாகவும், விரைவாகவும் மேற்கொள்ளலாம்.

**அறிவிப்பு-2**

நில அளவை நடைமுறையில் புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்கள் எல்லைகளை அடையாளம் காண, புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களின் எல்லைகளில் நில அளவைக் கற்கள் நட்டுப் பராமரிக்கும் முறை வழக்கில் இருந்து வந்தது. ஆனால், இந்த நடைமுறை 1982 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது. இக்காரணத்தினால் நில அளவைக் களப் பணியாளர்கள் புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமிப்புகளையும் அடையாளம் காண்பதில் பல இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசு நிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் புறம்போக்கு நிலங்களுக்கும், பட்டா நிலங்களுக்கும் இடையில் உள்ள எல்லைகளில் இனி நில அளவைக்

கற்கள் நட்டுப் பராமரிக்கும் முறை மீள செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்பு-3**

நில அளவைத் துறை, நில அளவைத் தொடர்பான களப் பணி செய்வதுடன் மட்டுமல்லாது, கிராம, வட்ட, மாவட்ட வரைபடங்களும் தயாரித்துப் பராமரித்து வருகிறது. இந்த வரைபடங்களையே அரசின் பிற துறைகளும் பயன்படுத்தி வருகின்றன. இது பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இப்படங்கள் மரபு வழியாக, பழைய நடைமுறைகளின்படி, கையால் வரையப்பட்டு வருகின்றன. அறிவியல் வளர்ச்சி காரணமாக அனைத்துத் துறைகளிலும் கணினி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி நில அளவைத் துறையிலும் கணினி சார்ந்த புதிய தொழிற் நுட்பங்களை அரசு அறிமுகப்படுத்தி வருகிறது. அதன் ஒரு கட்டமாக, சென்னை நில அளவை மத்திய அலுவலகத்தில் ஒரு கணினி வரைபட மையம் Computerised Cartographic Centre தொடங்கப்பட்டு அங்கு தயாரிக்கப்படும். அனைத்து வரைபடங்களும் இனி கணினி மயமாக்கப்படும்.

சென்னை மாவட்டத்தில், நில அளவைப் பணிகள் 1903 மற்றும் 1915 ஆம் ஆண்டு காலகட்டத்தில் முடிக்கப்பட்டுள்ளன. அந்நில அளவையின்போது தயாரிக்கப்பட்ட நிலப்படங்களே இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1900 ஆம் ஆண்டு இருந்த சென்னை மாவட்டம் தற்போது மிகவும் விரிந்து, பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஏற்கும் நிலையில் இந்நிலப் பதிவுருக்களும், நிலப்படங்களும் இல்லை. நிலப்படங்களும், நிலப் பதிவுருக்களும் மிகவும் சீரழிந்த நிலையிலும், அதிகமான பதிவுகள் நெருக்கமாகப் பதியப்பட்டும், மேற்கொண்டு பராமரிக்க இயலாத நிலையிலும் உள்ளன. எனவே, நாளதுவரை உள்ள அனைத்து விவரங்களையும் பிரதிபலிக்கும் வகையில், சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து நிலப்படங்களையும் மைய அரசு நிதி உதவியுடன் கணினி மயமாக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) என்ன, புரியவில்லையா? சுந்தரத்திற்குப் புரியவில்லை என்று சொல்கிறார். தனியாக ஒரு டியூஷன் எடுத்தால் நல்லது. (சிரிப்பு) உரியவரிடம் அதை எடுத்துச் சொல்வது இன்னும் நன்றாக இருக்கும். உரியவர் யார் என்பது அவருக்குப் புரியும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நேரிலும் பல உறுப்பினர்கள் தங்கள்



எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதுடன்....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம்....

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** ஒரு நிமிஷம்தான், அதுதான் நானும் நிற்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே சில அறிவிப்புகளையெல்லாம் வெளியிட்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சபாநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து, அவர்கள் மிக அருமையான பல ஆலோசனைகளை எல்லாம் இந்த அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதிலிருந்து நல்ல திட்டங்களையெல்லாம் எடுத்து நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் அந்தக் கமிட்டியின் அறிக்கையை ஏன் இங்கே வைக்கவில்லை என்பதை நான் இங்கே அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்தக் கமிஷனில், அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கும்போதே அதைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போதே பல இடங்களில் எதிர்ப்பு ஏற்பட்டது. ஏதோ கிராம நல ஊழியர்கள் அவர்களுக்குப் பாதகமான பல விஷயங்களை அவர் எழுதப் போகிறார் என்று யூகம் செய்து கொண்டு சில இடங்களில் அவரைத் தாக்குகின்ற அளவுக்குக்கூட நிலைமை ஏற்பட்டது. எனவே, அவருடைய சிபாரிசுகள், அவர்களுக்கு அந்தப் பதவிகள் இருக்க வேண்டுமா என்ற கேள்விக்குப் பதில் காணுகின்ற வகையிலே அந்த சிபாரிசுகள் இருந்தன. எனவே அந்த சிபாரிசுகளை வைத்து சிக்கலை உண்டாக்க வேண்டாம் என்பதற்காகத்தான் அது தவிர்க்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் நேரிலேயும் பல உறுப்பினர்கள் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவிப்பதுடன் அந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்பதையும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். பல உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப்

பெற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு நான் அன்புடன் கேட்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம் என்பது கணினி மாவட்டங்களாக இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக ரெவின்யூ துறையைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் கணினிகள் மூலம் அந்தப் பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் மாண்புமிகு அமைச்சர், அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன். இந்த நிலப்பெயர் மாற்றம் என்பது இருக்கிற அமைப்புகளிலே கணினி செய்யப்படுகிறது. அதனால் நிலம் ஒருவருடைய பெயரிலும், பட்டா ஒருவருடைய பெயரிலும், அந்தச் சிட்டா அடங்கலினுடைய வாரிசுதாரர்கள் பெயர்கள் ஆக மூன்று இடங்களில் இடம்பெறுகிறது. அவை அப்படியேதான் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. பெயர் மாற்றம் செய்யாமல் கணினியில் பதிவு செய்யப்படுவதன் மூலமாக எந்தச் சீர்திருத்தத்தையும் நிலப்பதிவேட்டிலே கொண்டு வர முடியாது. அதை அரசு விரைந்து செய்வதற்கு முயற்சி எடுக்குமா என்பதைத்தான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து நிற்கிறீர்களே, இது endless ஆகப் போய்க் கொண்டிருக்கிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேசுங்கள்.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்படுகின்றன. அரசு விழாக்கள் மூலமாகக் கூட அவை கொடுக்கப்பட்டு விடுகின்றன. ஆனால், நடைமுறையில் அந்த நிலங்களை ஏழையெளிய மக்களுக்கு எடுத்துக் கொடுப்பது கிடையாது. பல கிராமங்களில் அந்த நில உடைமையாளர்கள் வழக்குத் தொடர்ந்து, அந்தப் பட்டா கொடுக்கப்பட்ட பிறகும்கூட உடைமையாளர்களிடமே அந்த நிலங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பட்டாக்கள் கொடுத்தும்கூட உபயோகமில்லாமல் போய்விடுகின்றன. ஆகையால் பல வழக்குகள் இன்றும் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான வழக்குகள்



கோர்ட்டிலே இருக்கிற காரணத்தினாலே பட்டா கொடுத்தும்கூட ஆயிரக்கணக்கான பேர் நிலமற்றிருக்கிறார்கள். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** டாக்டர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப்படும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 1—நில வருவாய்த் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1- நில வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி, அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்:

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்ளுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நில வருவாய்த் துறை பற்றி 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 14,27,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 40—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40- இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என்.பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர்.சுந்தரம்.

பிற்பகல் 12-55

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.71,73,37,000-க்கு மேற்படாத தொகை



அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர் சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.78,78,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 7. பொது விவாதத்தின்போது பொதுப் பணித் துறை கட்டடங்களின் பராமரிப்புக்கு டெண்டர் விட்டது பற்றி எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மீது குற்றஞ்சாட்டியதற்கு அவர் ஆதாரம் என்று கொடுத்ததைப்பற்றி தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் அறிவித்தபடி இப்போது, மூன்று பிரச்சினைகளில் என்னுடைய தீர்ப்பை வழங்க இருக்கின்றேன். நேரம் ஒரு மணி ஆகப்போகிறது. நான் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் 12-00-க்குள் முடிந்துவிடும், அதற்குப் பிறகு மூன்று தீர்ப்புகளையும் வழங்கலாம் என்று இருந்தேன். இருந்தாலும், மணி 1-00-ஐ நெருங்கிவிட்டது. ஆகவே, அவை நேரத்தை நீட்டித்து என்னுடைய தீர்ப்பை வழங்கினால், மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய முதல் தீர்ப்பை வழங்குகின்றேன்.

4-4-2000 அன்று நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்குப் பதில் சொல்கின்ற இறுதி நாளில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பேசுகின்ற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்மீது சுமத்தினார்கள். நான் அப்போது குறுக்கிட்டு, "நீங்கள் மூத்த உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், என்னுடைய மரியாதைக்குரியவர், முதலமைச்சருடைய மரியாதைக்குரியவர். ஆகவே நீங்கள் மற்ற உறுப்பினர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்ற நேரத்திலே ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டுதான் அவையிலே பேச வேண்டும் என்ற ஒரு விதி இருப்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அதை மீறிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்" என்று எடுத்துச் சொன்னேன்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "ஆதாரம் என்னிடம் இருக்கிறது. உங்களிடம் இப்போதே கொடுத்துவிடுகிறேன்" என்று சொன்னார்கள். நீங்கள் ஆதாரம் கொடுப்பீர்களா, இல்லையா என்று எனக்குத் தெரியாத நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே ஓர் ஐயப்பாடு ஏற்பட்டு, இப்போதே நீங்கள் கொடுத்துவிட வேண்டும் என்று அவர்களே குறிப்பிட்டார்கள். இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதோ கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லி உங்கள் பேச்சை முடித்தீர்கள். அதிலே ஏராளமான குற்றச்சாட்டுகள் மாண்புமிகு அமைச்சர்மீது சொல்லி, அந்தக் குற்றச்சாட்டுகளின் சாராம்சம் பத்திரிகையிலே வரக் கூடாது. 'எதிர்க்கட்சித் தலைவர் ஒரு புகார் சொன்னார். அதற்கு உண்டான ஆதாரத்தைப் பேரவைத் தலைவரிடம் காண்பிப்பதாகச் சொல்லி இருக்கிறார். அவர் கொடுக்கும் ஆதாரத்தைப் பார்த்தபிறகு 2 நாட்களில் பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொல்வதாக இருக்கின்றார் என்று மாத்திரம் பத்திரிகையில் வரவேண்டும்' என்று சொன்னேன். இதோ கொடுத்துவிடுகிறேன் என்று நீங்கள் சொன்னதால், சட்டமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு என்னுடைய அறையிலே ஒரு மணி நேரம் உங்களுக்காகக் காத்திருந்தேன். நீங்கள் வரவும் இல்லை. தொலைபேசியிலே என்னிடம் தொடர்புகொண்டு நான் இன்று வரமுடியாது என்றுகூட நீங்கள் —மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்— சொல்லவில்லை.

பிற்பகல் 1-00

அதைப்போலவே 5 ஆம் தேதியும் எனக்கு எந்தத் தகவலும் கிடையாது. 6 ஆம் தேதி நீங்கள் சட்டமன்றத்திற்குள்ளே நுழையும்போது, நான்



உரிமையோடு உங்களை அழைத்து 4 ஆம் தேதியே உங்களுக்காகக் காத்திருந்தேன். என்னிடம் உங்களுடைய குற்றச்சாட்டுப் பட்டியலைக் கொடுக்காமல் சென்றுவிட்டீர்கள், இன்று கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டேன். இதோ கொண்டு வந்திருக்கிறேன். பின்னாலே உள்ள உங்கள் அறையில் வந்து கொடுக்கலாமா என்று கேட்டீர்கள். இல்லை, இங்கேயே கொடுத்துவிடுங்கள் என்று சொன்னேன். அதை இங்கே கொடுத்தீர்கள். உடனடியாக, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் அந்தக் குற்றச்சாட்டுத் தொகுப்பை- இதைப் பக்கங்கள்-என்று சொல்வதா, தொகுப்பு என்று சொல்வதா என்று தெரியவில்லை.- 60 பக்கங்கள் கொண்ட ஒரு தொகுப்பை நீங்கள் கொடுத்ததை உங்கள் முன்னாலேயே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்து, இதைப் படித்துப் பார்த்துவிட்டு, உங்கள் பதிலை நான் எதிர்பார்க்கிறேன் என்று சொன்னேன். ஆனால், அந்தப் பட்டியலை, அந்தத் தொகுப்பை, நான் பிரித்து பார்ப்பதற்கு முன்னாலேயே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இதில் ஒரு நீதி விசாரணை வைக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். பின்னர் படித்துப் பார்த்ததிலே, இதே கோரிக்கையை எழுத்துமூலமாகவும் அந்தத் தொகுப்பிலே கொடுத்திருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில், இது என் பொது வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட மிகப் பெரிய களங்கம் என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால், அரசமைப்புச் சட்டத்திலே ஆட்சித் துறை (Executive) நீதித் துறை (Judiciary), சட்டமன்றத் துறை அல்லது பார்லிமெண்ட் (Legislature) என்று மூன்று தனித்தனிப் பிரிவுகளாக இருக்கின்ற நேரத்தில், இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மையைக் கொண்டு போய் நீதிமன்றத்திலே நான் அடகு வைக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கை என்னிடம் வந்தது, உண்மையாகவே என்னுடைய அரசியல் வாழ்க்கையிலே எனக்கு ஏற்பட்ட பெரிய களங்கம் என்று நினைத்து, பெரிதும் வேதனையடைந்தேன்.

அதோடு நின்றுவிடாமல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒருமுறை அல்ல, இரண்டு முறை "இதிலே உங்களால் தீர்ப்புச் சொல்ல முடியாது", காரணம் "பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கின்ற குற்றச்சாட்டு நம்முடைய சபாநாயகர் அவர்களாலே தீர்ப்புச் சொல்ல முடியாத மிகப் பயங்கரமான குற்றச்சாட்டு, ஆகவே இதற்கு ஒரு நீதிபதியை வைத்து..." என்று ஆரம்பித்து தொடர்ந்து 'ஆனால் இது மிகப் பெரிய ஊழல் குற்றச்சாட்டு, பயங்கரமான குற்றச்சாட்டு,

இதற்கு ஒரு நீதிபதியை வைத்துத்தான் விசாரிக்க முடியும் என்பதால், நான் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்' என்று அடுத்துச் சொன்னார்கள்.

கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள். 'குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியையும் தோண்டியது' என்று. ஆங்கிலத்திலே ஒரு பழமொழி Adding insult to injury என்று சொல்வார்கள். அந்தவகையிலே உள்ளது இது. நான் இந்த அவையின் இறையாண்மையைக் காப்பதற்காக இந்த இருக்கையிலே அமர்த்தப்பட்டவன். நான் தானாகவே இதன் இறையாண்மையைக் காட்டிக் கொடுக்கின்ற வகையிலே, ஒரு நீதி விசாரணையை வைக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னதில் எனக்கு ஏற்பட்ட வேதனை எந்த அளவுக்கு என்பதைச் சொல்ல முடியாது. ஆனால் அதற்கு மேல் என்னுடைய நடுநிலைத் தன்மையிலே ஐயப்பாடு ஏற்பட்டு உங்களால் இதை விசாரிக்க முடியாது என்று சொன்னது, அதைக்காட்டிலும் எனக்கு ஒரு பெரிய அவமானம் என்னுடைய பொது வாழ்க்கையிலே ஏற்பட முடியாது என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1-05

பெரிய குற்றச்சாட்டு, பயங்கரமான குற்றச்சாட்டு, ஆகவே நீங்கள் தீர்ப்புச் சொல்ல முடியாது என்றால், சின்ன குற்றச்சாட்டாக இருந்தால் மட்டும் நான் தீர்ப்புச் சொல்லலாம் என்று சொல்கிறீர்களா? அல்லது பயங்கரமான குற்றச்சாட்டு என்ற காரணத்தால் நான் ஆளும் கட்சியை ஒருவகையிலே சார்ந்தவன் என்ற முறையிலே அமைச்சரைப் பாதுகாப்பதற்காக, நான் முறையாக தீர்ப்புச் சொல்ல முடியாது என்று சொல்கிறீர்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால், ஒட்டுமொத்தத்திலே நீதி விசாரணை வைக்க வேண்டும், இதிலே எனக்குத் தீர்ப்புச் சொல்வதற்கு தகுதி இல்லை என்று சொன்னவுடன்— நான் ஒளிவு மறைவில்லாமல் இந்த அவையிலே சொல்கிறேன், என்னுடைய தலைவரான முதலமைச்சரிடம், "இனிமேல் இந்த நாற்காலியிலே நான் உட்காருவதில் அர்த்தம் இல்லை" என்று சொன்னேன். நான் பதவி விலக வேண்டுமென்று அவரிடம் அனுமதி கேட்டேன்; அனுமதி மறுத்துவிட்டார்கள். ஆகவே, மனமில்லாமல் இந்த நாற்காலியிலே தொடர்ந்து உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன் என்பதை மட்டும் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



உங்களால் தீர்ப்புச் சொல்ல முடியாது என்று சொன்ன பிறகு, இந்த 60 பக்க குற்றச்சாட்டையும் புரட்டி ஏராளமான அதிகாரிகளை அழைத்து, உண்மைகளைக் கேட்டு, என் மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் நான் ஒரு தீர்ப்பைச் சொல்லி, அதற்குப் பிறகு, இதிலே நீதி கிடைக்கவில்லை என்று நீங்கள் சொல்லப் போகிறீர்கள். ஏனென்றால், ஏற்கெனவே, 'உங்களுக்கு இதிலே தகுதி கிடையாது' என்று சொல்லிவிட்டீர்கள். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் ஒரு வகையிலே இந்தக் குற்றச்சாட்டிலே ஆதாரம் இல்லை, ஆகவே, அனுமதி மறுக்கிறேன் என்று சொல்லிவிட்டு கூட உட்காரலாமா என்று நான் நினைத்தேன்.

இந்தச் சூழ்நிலையில் பேரவை விதிகள் குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலும், நான் எடுத்து படித்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விதி 93- "ஓர் உறுப்பினர் எழுத்து மூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்குத் தெரிவித்திருந்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ அவர்மீது குற்றம் சாட்டக்கூடாது. அவ்வாறு முன்னறிவிப்பு கொடுப்பது குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்.

மேலும் அவ்வாறான முன்னறிவிப்பினை சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கோ அல்லது அமைச்சருக்கோ, நேரிடையாகவோ அல்லது சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் மூலமாகவோ கொடுக்கலாம்.

எனினும், அவ்வாறு சொல்லவிருக்கும் குற்றச்சாட்டுகள் பேரவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவோ அல்லது பொது நலனுக்கு ஒவ்வாததாகவோ அல்லது பேரவைமுன் இருக்கும் அலுவல்களைக் குறித்து நேரிடையாகத் தொடர்பு இல்லை என பேரவைத் தலைவர் கருதுவாரேயானால் அதனை எந்த நேரத்திலும் எந்த உறுப்பினரையும் தடை செய்யலாம்".

இதை நான் சொல்வதற்குக் காரணம், இந்த விதியிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், நீங்கள் ஒரு குற்றச்சாட்டை அமைச்சர் மீதோ உறுப்பினர் மீதோ என்னுடைய அறையிலே கொடுத்தால், நான் அதைப் பரிசீலித்து, குற்றம் சாட்டப்பட்டவரை அழைத்து முகாந்திரம் என்ன என்று கேட்டு, அதற்குப் பிறகு அதிலே prima facie ஆதாரம், அடிப்படை ஆதாரம் இருப்பதாக ஒரு முடிவுக்கு வந்தால் இந்தத் தேதியிலே இந்த உறுப்பினருக்கு உங்கள்மீது குற்றம் சாட்ட நான்

அனுமதி கொடுத்திருக்கின்றேன், அன்று நீங்கள் பேரவையில் இருக்க வேண்டும் என்று அந்த உறுப்பினருக்கு நான் சொல்ல வேண்டும். மாறாக, மூத்த உறுப்பினரான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல் இந்தக் குற்றச்சாட்டை சொல்லி இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, விதி 92-ல் "பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கென கொண்டு வரப்பெற்ற நிலையான தீர்மானத்தாலன்றிப் பேரவைத் தலைவரின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கக் கூடாது" என்றுள்ளது. அதைத்தான் பலமுறை அன்று சொன்னேன். நான் சொன்ன வேகத்திலேகூட தன்மானம் எனக்கு உண்டு என்று சொல்ல வேண்டியதற்குப் பதிலாக ஏதோ வாய் தவறி உங்களுக்கு இல்லாதது எனக்கு இருக்கிறது என்று நான் சொன்னதாக ஏராளமான கூச்சல்கள் அன்று ஏற்பட்டது. நான் அந்தக் கருத்திலே சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் நான் அதை வாபஸ் வாங்குவதிலே எனக்கு ஒன்றும் மரியாதைப் பிரச்சினை கிடையாது. நான் தன்மானம் உள்ளவன்.

பிற்பகல் 1-10

ஒரு பிரதான எதிர்க்கட்சி, 40 உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சி, என்மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னால், நான் இந்த நாற்காலியில் உட்காரத் தயாராக இல்லை என்றுதான் அன்று முதல் சொல்லி வருகிறேன். எந்தக் காலத்திலும் சட்டமன்ற மரபைக் கடைபிடிப்பது நம் அனைவருடைய கடமை என்ற அடிப்படையில், பேரவைத் தலைவரை எதிர்ப்பது வேறு; அரசை எதிர்ப்பது வேறு என்ற கண்ணோட்டம் சரியாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில், நான் ஆழமாகப் படித்து தீர்ப்புச் சொல்ல முயற்சிப்பதற்கு ஒரே ஒரு காரணம், இது திறந்தவெளி அரசாக இருக்கும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். Right to Information Act-தகவல் அறியும் உரிமைச் சட்டம்—வந்திருக்கிறது. அந்த நிலையில் என்னுடைய துறையும் திறந்தவெளித் துறையாக இருக்க வேண்டும் என்பதிலே நான் அக்கறையாக இருக்கின்றேன்.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த குற்றச்சாட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில், என் தீர்ப்புக்கு நான் பயன்படுத்துகிற ஆதாரங்கள், இவையனைத்தும் என்னுடைய செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, எந்த நேரத்திலும், எந்த உறுப்பினரும் அதைப் போய்ப் பார்க்கலாம். சட்டமன்றத்திற்குள் அங்கீகாரம் பெற்ற எந்தப் பத்திரிகையாளரும் இந்த விவரங்களை என்னுடைய செயலாளர்



அறையிலே போய்ப் பார்க்கலாம். அதைக் காட்ட வேண்டுமென்று நான் செயலாளருக்கு உத்தரவிட்டிருக்கின்றேன். ஆகவே இந்தத் தீர்ப்பு மூலமாக நாட்டு மக்களுக்கு, இதிலே உண்மை இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்த்து சொல்ல வேண்டிய கடமை, இன்றியமையாத கடமை இருப்பதாகக் கருதித்தான் நான் ஒரு வரியிலே ஆதாரம் இல்லை என்று சொல்லாமல், இரண்டு மூன்று நாட்களாக ஏராளமான அதிகாரிகளை அழைத்து, விசாரித்து, விவரமறிந்து இந்தத் தீர்ப்பைச் சொல்ல முயற்சி செய்கின்றேன். இதிலே தண்டனை, குற்றச்சாட்டு கொண்டு வந்த எதிர்க்கட்சித் தலைவருக்கா அல்லது குற்றம் சாட்டப்பட்ட அமைச்சருக்கா என்று கேட்டால், தண்டனை பேரவைத் தலைவருக்குத்தான். நான் இரண்டு, மூன்று நாட்கள் என்னுடைய சொந்தத் தொகுதிக்குப் போகலாம் என்று நினைத்திருந்தேன். இந்தக் குற்றச்சாட்டின் காரணமாக அதையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு, மூன்று நாட்களாக எல்லா அதிகாரிகளையும் அழைத்து, விசாரித்து, இதில் தீர்ப்புச் சொல்லும் நிலையிலே இருக்கின்றேன்.

இங்கே விதிகளைப் படித்ததற்குக் காரணம், பலபேர் பல கருத்துகளைச் சொல்லுகின்றார்கள். அப்படி, பலபேர் பல கருத்துகளைச் சொல்லுகின்ற நேரத்தில், ஒரு கருத்து எனக்கு இருக்கிறது. பொதுவாகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அமைதியான குணம் படைத்தவர். அவசரமாக எதையும் பேசமாட்டார். கடும் சொற்களுக்கு உரியவர் அல்லர் என்பது என்னுடைய கருத்து. அது இன்றும் என் கருத்து. ஆளுநர் உரை முடிந்த பிறகு, நிதிநிலை அறிக்கையைக் கொடுப்பதற்கு முன்னால், ஒரு பேட்டியை படித்துப் பார்த்தேன். அதில் அவர் சொன்னார். 'வரவு செலவுத் திட்டக் கூட்டத்திலே நாங்கள் முதலமைச்சரிடம் பல பிரச்சினைகளைக் கிளப்புவோம், அந்தப் பிரச்சினைகளுக்கு திருப்தியான பதில் வரவில்லையென்றால், அவையை நடத்தவிட மாட்டோம்' என்று ஒரு பேட்டி. அது எதிர்க்கட்சித் தலைவரும், அவர் கட்சியைச் சார்ந்த இங்கே உறுப்பினராக இல்லாத ஒருவரும் கொடுத்த பேட்டி. எனக்கு உறுதியாகத் தெரியும், எதிர்க்கட்சித் தலைவர் அந்த வார்த்தைகளைப் பேசியிருக்கமாட்டார். அப்படிப் பேசக்கூடியவர் அல்ல. ஆனால் துரதிருர்ஷ்டவசமாக அவர் அந்தப் பத்திரிகையின் பேட்டியிலே இருந்த காரணத்தால் நான் அவரைக் குற்றம் சாட்ட வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், 6 ஆம் தேதி குற்றச்சாட்டுக்கு ஆதாரம் என்று என்னிடம் கொடுத்துவிட்டு, அவர் அறையிலே ஒரு பத்திரிகை பேட்டியை வைத்து— அவர் சொன்னால்கூட நான் ஏற்றுக் கொண்டிருப்பேன்—இந்த அவையிலே இல்லாத ஒருவர்,

சட்டமன்றத்தை நான் எப்படி நடத்த வேண்டுமென்று அறிவுரை வழங்கி, நாடாளுமன்றத்திலே எப்படி இருக்கிறது என்று சொல்லி, ஒரு சாதாரண தாளை நீட்டினால்கூட அங்கே அனுமதி கொடுக்கின்றார்கள், இவர் யார் இந்த அவையில் என்று எல்லாம் பேசியிருக்கின்றார்கள். என்னுடைய குறையெல்லாம் அப்படி ஒரு சாதாரண தாளைக்கூட என்னிடம் கொடுக்காமல் பேசினீர்கள் என்பதுதான்.

பிற்பகல் 1-15

குற்றச்சாட்டு சொல்வதற்கு முன்னால், ஒரு தாளை அங்கே கொடுத்தால்கூட போதும் என்று அங்கே பேசப்பட்டது. ஆனால், என்னிடம் எதுவும் கொடுக்காமல், இந்தக் குற்றச்சாட்டை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னாரே என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இப்போது வரிசையாக குற்றச்சாட்டுகள் அவர்கள் சொன்னதை, தேதி வாரியாக படித்து, அதற்குண்டான என்னுடைய தீர்ப்பைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை.

முதலிலே 4-4-2000 நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு:

"என்ன சொல்கிறார்கள் என்றால் இந்த அமைச்சர் என்ன பண்ணியிருக்கிறார் என்றால் இப்போது டெண்டரே கிடையாது, சிங்கிள் டெண்டரிலே கொடுத்துக்கொண்டு இருக்கிறார். ப்ரூவ் பண்ண முடியும்.

..பல பொதுப் பணி வேலைகள் டெண்டரே இல்லாமல் சிங்கிள் டெண்டரில் நடந்துகொண்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டை நான் வைக்க விரும்புகிறேன்." என்பது.

கடந்த காலங்களிலே, ஒருவரிடமிருந்து மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி ஆணை கொடுக்கும் முறை இருந்து வந்தது. அதை இந்த அரசாங்கம் மாற்றி உள்ளது. விளம்பரத்திற்குப் பிறகு ஒப்பந்தப்புள்ளி பட்டியலை பலர் பெற்றுவிட்டு, ஒருவரிடமிருந்து மட்டும் முறையான ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டால், அது சிங்கிள் டெண்டர் என்று கூறப்படும். இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு மாறாக சில அதிகாரிகள் தொடர்ந்து சில இடங்களில் சிங்கிள் டெண்டர் முறையை அமல்படுத்துவதைச் சுட்டிக்காட்டி, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசே பத்திரிகையில் அறிவிப்பு கொடுத்திருக்கிறது. இந்த அறிவிப்பு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்த தொகுப்புப் பட்டியலிலே இடம் பெறுகின்றது. 8-6-1996 அன்று மாலை முரசு பத்திரிகையிலே அரசாங்கத்தால் ஒரு விளம்பரமாகக்



கொடுக்கப்பட்ட அறிவிப்பு. அதை என்னுடைய ஆவணங்களிலே சேர்த்திருக்கிறேன். நீதிமன்றத்திலே வழக்கு நடந்தால் - பல பேர் இங்கே வழக்கறிஞர்களாக இருந்திருக்கின்றீர்கள், சில பேர் அரசியல்ரீதியாக குற்றவாளிகளாகக்கூட இருந்து இருக்கலாம். வழக்கிலே இந்த ஆவணங்களுக்கு எண் கொடுப்பது வழக்கம். ஆகவே, என் சார்பிலே கொடுக்கின்ற ஆவணங்களுக்கு ஒவ்வொரு எண்ணாகக் கொடுத்து, இதை P.1 என்று குறிப்பிடுகின்றேன். பணம் கொடுத்து அரசு விளம்பரமாக கொடுத்த அதிலே,

"தமிழக அரசின் முக்கிய அறிவிப்பு. அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களில் எந்த ஒரு பணிக்கும், இதற்கு முந்தைய ஆட்சியில் இருந்து வந்த, சிங்கிள் டெண்டர் முறையிலே அனுமதி வழங்குவது கூடாது என்றும், பொது டெண்டர் முறையிலேதான் பணிகளுக்கான ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முடிவு எடுத்து அறிவித்திருந்தபோதிலும், சில இடங்களிலே அதிகாரிகள் இன்னமும் பொது டெண்டருக்கான விண்ணப்பப் படிவங்களைக் கோருகின்ற அனைவருக்கும் கொடுக்காமல், மறைமுகமாக பழைய சிங்கிள் டெண்டர் முறையையே கடைப்பிடிப்பதாக புகார்கள் வந்துள்ளன. முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிக்கையின்படி நடந்துகொள்ளாமல், இவ்வாறு முறைகேடாக நடந்துகொள்கின்ற அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசின் சார்பில் அறிவிக்கப்படுகின்றது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, தமிழக அரசின் அன்றைய தலைமைச் செயலர் பின்வரும் ஓர் இரகசிய சுற்றறிக்கையை பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற எல்லா துறைகளுக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பி இருக்கின்றார்.

பிற்பகல் 1-20

"It has been brought to the notice of the Government that some lower level officers in the districts are still perpetrating the single tender system, while entrusting the Government works to the tenderers and that the open tender system is not being strictly followed. The Hon. Chief Minister is very unhappy over this and has decided that strict instructions should go to all officers that the open tender system shall be scrupulously followed. District Collectors and other officers are requested to ensure that open tender system is followed in all Government works strictly.

Severe disciplinary action will be taken against those who do not follow the instructions scrupulously.

The receipt of the D.O. may please be acknowledged" 8-6-1996-ல் பத்திரிகை விளம்பரம் 12-6-1996-ல் இந்தச் சுற்றறிக்கை.

டெண்டரே கிடையாது; சிங்கிள் டெண்டரிலே கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்றும், அதை நிரூபிக்க முடியும் என்றும் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அதை நிரூபிக்கும் வகையில் எந்தவித ஆதாரத்தையும் எனக்குக் கொடுக்கவில்லை. 60 பக்கங்களில் எனக்கு ஒரு தொகுப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் 60 பக்கங்களிலே என்னென்ன இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொன்னால் தெளிவாக இருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த 60 பக்கங்களிலே, முதல் 2 பக்கங்களிலே அவர் எழுதிய கடிதம்; 3-வது பக்கம், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மாலை முரசிலே வந்த விளம்பரம்; சிங்கிள் டெண்டர் முறை கூடாது என்று அரசின் அறிவிப்பு. 4-வது பக்கத்திலே, சேப்பாக்கம் அரசினர் விருந்தினர் மாளிகையில் அவசரப் பணிகளை நாமினேஷன் அடிப்படையிலே செய்யக் கோரும் பொதுத் துறை துணைச் செயலாளரின் கடிதம்; 5-வது பக்கத்திலே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அவசரப் பணிகளை நாமினேஷன் முறையிலே செய்யக் கோரும் சட்டமன்றச் செயலக துணைச் செயலாளரின் கடிதம்; 6,7-வது பக்கங்களிலே வேலை இல்லாத பொறியியல் பட்டதாரிகள் கூட்டுறவுச் சங்கம் தொடங்குவது குறித்த அரசாணை— 1981ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது. அக்கூட்டுறவு சங்கத்திற்கு நிதி உதவி அளிப்பது பற்றிய பொதுப் பணித் துறை— அரசாணை எண் 149, இது 8-வது பக்கம்; நாமினேஷன் முறையைத் தவிர்க்க வலியுறுத்தும் தலைமைப் பொறியாளரின் சுற்றறிக்கை 10 ஆம் பக்கம்.

பேரவைத் தலைவர், அமைச்சர்கள், பேரவைத் துணைத் தலைவர், செயலாளர்கள், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் ஆகியோர் சம்பந்தப்பட்ட பணிகளில், பொதுத் துறை துணைச் செயலாளர் ஒப்பளிப்பின் பேரில் நாமினேஷன் முறையில் பணியைச் செய்ய அனுமதிக்கும் அரசாணை எண் 169, 3-2-1998—இது 11-வது பக்கம்.

12-வது பக்கம் முதல் கடைசி பக்கமான 60ஆம் பக்கம் வரை சென்னையில் உள்ள ஒரு கோட்டத்திலே நாமினேஷன் முறையிலே செய்யப்பட்ட பணி விவரங்கள் - 49 பக்கங்கள், கிட்டத்தட்ட 440



நியமனப் பணிகளினுடைய பட்டியல் கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகின்றேன். சிங்கிள் டெண்டர் என்பது வேறு; நாமினேஷன் என்பது வேறு. "ஆனால், சிங்கிள் டெண்டர் கொடுத்து இருப்பது உறுதியாக என்னிடம் இருக்கிறது" என்று தெளிவாக ஒரு முறை அல்ல, பல முறை சொல்லி இருக்கிறார். "எந்தெந்த இடங்களில் சிங்கிள் டெண்டர் விடப்பட்டு இருக்கிறது என்பது பற்றி டீடெய்ல்டாக ஒரு ரிப்போர்ட் வைத்து இருக்கிறேன். நான் முதலமைச்சரிடம் அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறியுள்ளார். ஆனால், சிங்கிள் டெண்டர் எங்கெங்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதற்கான பட்டியலை எதிர்க்கட்சித் தலைவர், தான் கொடுத்த ஆவணங்களில் தரவில்லை, அவர் கொடுத்த 60 பக்கத் தொகுப்பில், ஒன்றில்கூட சிங்கிள் டெண்டர் முறையில் கொடுக்கப்பட்ட பணிகள் பற்றிய குறிப்பு இல்லை.

குற்றச்சாட்டு 3, "தமிழக அரசின் கொள்கை முடிவு, நாமினேஷன்களை ஒழிப்பது; ஓப்பன் டெண்டர் முறையை அமல்படுத்துவது. ஆனால், அதிகாரிகள் சுயநலத்திற்காக ஓப்பன் டெண்டர் முறையைக் கைகழுவிவிட்டு, நாமினேஷன் முறையை மறைமுகமாகப் புகுத்தி வருகிறார்கள். உதாரணமாக தலைமைச் செயலகம், மருத்துவமனை, சட்டமன்ற விடுதி—அங்கேயெல்லாம் ஓப்பன் டெண்டர் கிடையாது" என்று கூறியுள்ளார். இதுபற்றி பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரிடம் இருந்து விவரங்களை நான் பெற்று இருக்கின்றேன். அதன் எண் P.3.

பிற்பகல் 1-25

இதிலே ஒரு கோட்டத்திலே மாத்திரம் இவ்வளவு என்றால் தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாக எவ்வளவு என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். ஆகவே, நான், என்னுடைய செயலாளர் மூலமாக தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) Buildings அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி பதில் கேட்டேன். இதுதான் அவர் கொடுத்த பதில். "With reference to the Government letter cited, I have to state the following in Seriatim:

ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிலே இந்த வட்டங்கள் எத்தனை என்று முதல் கேள்வி கேட்டேன். அதற்குப் பதில், அந்த Buildings "The Building organisation comprises of 51 divisions in the whole of Tamil Nadu (44 building divisions and 7 electrical divisions). The award of contract work on nomination basis is allowed for certain buildings as below

and the G.O. in which the execution of work through nomination has been permitted is also noted against it.

Secretariat Building; G.O.Ms.No. 169, P.W.D., dated 3-2-1998,

Chennai Raj Bhavan and Ooty Raj Bhavan, G.O.No. 394, P.W.D., dated 20-10-1994.

VIP Bungalows, residences of Hon. Ministers, Hon. Speaker, Deputy Speaker, Chief Whip, Leader of the Opposition, etc., G.O.No. 259, dated 8-5-1998,

Legislators' Hostel; G.O.No. 246, dated 27-10-1998"

அதோடு சொல்கிறார் 1981-லே, வேலையில்லாதப் பட்டதாரிகளுக்கெல்லாம் ஒரு கூட்டுறவு சொசைட்டி ஏற்படுத்தி அரசாங்கமே அதன் மூலதனத்திலே பங்கெடுத்தது.

"The practice of giving works on nomination basis allowed to the following categories in G.O.No. 2297, P.W.D., dated 23-11-1982 was discontinued from May 1997 on the circular of C.E. (B)-

Modern Engineers Construction Co-operative Society,

Pearl Engineers Construction Co-operative Society,

Unemployed Engineers Co-operative Society.

The works in P.W.D. are generally carriedout through open system only and therefore execution of work through nomination basis is not allowed in any division of P.W.D. except for the building wherein specific permission has been accorded by the Government".

அதாவது, தமிழ்நாட்டிலேயே, சென்னை ராஜ்பவன், ஊட்டி ராஜ்பவன், தலைமைச் செயலகம், பழைய காலத்திலே கிரீன்வேஸ் ரோடு என்று அழைத்தார்கள், இப்போது குமாரசாமி ராஜா சாலை—அந்தச் சாலை முழுவதற்குமே அந்தப் பெயர் என்று கருதுகின்றேன். அங்கே குடியிருக்கக்கூடிய அமைச்சர்கள், நீதிபதிகள், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அரசு கொறடா, இவர்கள் குடியிருப்புகளுக்கு Nomination basis-லே வேலைகள் செய்யலாம் என்றும், அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கும் tender இல்லாமல் நாமினேஷன் முறையிலே வேலைகள் செய்யலாம் என்றும், இதைத் தவிர தமிழ்நாட்டிலே வேறு எந்தக் கோட்டத்திலும் நாமினேஷன் மூலமாக வேலை செய்யக்கூடாது என்றும் தெளிவாக எனக்குப் பதில் அளித்திருக்கிறார்கள்.



இதை இந்தத் தருணத்திலே சொல்வதற்குக் காரணம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கோட்டத்திலே இவ்வளவு என்றால் தமிழ்நாடு பூராவும் எவ்வளவு என்று, பூதாகரமாக இருக்கிறதே என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒருவேளை அவர்கள் விசாரிக்கவில்லையோ என்னமோ? ஒரு கோட்டத்திலே இவ்வளவு, மொத்தம் 50 கோட்டங்கள், ஆகவே அதிலே எவ்வளவோ என்று மனக் கணக்கு போட்டிருப்பாரோ என்பது எனக்குத் தெரியாது. இந்த 4 குறிப்பிட்ட இடங்களைத் தவிர வேறு எங்கும் நியமன முறையிலே வேலை செய்யக் கூடாது என்று அரசாங்கம் தெளிவாக உத்தரவு போட்டு, இதற்குத்தான் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். ராஜ்பவன், தலைமைச் செயலகம், வி.வி.ஐ.பி. குடியிருப்புகள் என்று வைத்திருக்கின்றார்கள். இந்தத் துறையிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி; இந்த நான்கு தவிர வேறு எங்கும் இந்த நாமினேஷன் முறையிலே வேலை பார்க்கக் கூடாது. அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-30

தமிழக அரசின் கொள்கை முடிவு, நாமினேஷன்களை ஒழிப்பது. Open Tender முறையை அமல்படுத்துவது. ஆனால் அதிகாரிகள் சுயநலத்திற்காக Open Tender முறையைக் கைகழுவிவிட்டு நாமினேஷன்களை மறைமுகமாகப் புகுத்தி வருகிறார்கள். உதாரணமாக தலைமைச் செயலகம், மருத்துவமனை, சட்டமன்ற விடுதி இங்கேயெல்லாம் Open Tender கிடையாது. அது உண்மை. ஆனால் இதெல்லாம் அரசாங்கம் அனுமதி கொடுத்து, அரசு G.O. மூலமாகச் செய்ததேயொழிய, அதிகாரிகள்மேல் இதிலே குறை சொல்ல முடியாது. இது கொள்கை முடிவு. இந்த முடிவு தவறாக இருந்தால் இதைக்கூட நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று அரசுக்கு ஒரு கோரிக்கை வைக்கலாம். ஆனால் இதிலே அதிகாரிகளை சம்பந்தப்படுத்துவதே முறையல்ல. காரணம் இது அரசு உத்தரவு. G.O., அரசு ஆணை மூலமாக இவர் இந்த இடத்திற்கு எல்லாம் டெண்டர் இல்லாமல் நாமினேஷனிலே வேலை செய்யலாம் என்று தெளிவாக அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி, தீர்ப்புச் சொல்லிக் கொண்டிருக்கும்போது இடையிலே குறுக்கிடக் கூடாது. தீர்ப்புச் சொல்லி முடித்தவுடன் கிளாரிஃபிகேஷன் கேட்கலாம். ஆகவே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நாமினேஷன் முறையில் பணிகளைக் கொடுக்கக் கூடாது என்ற முடிவு எடுத்தது. தலைமைப் பொறியாளர்

(கட்டடங்கள்) கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட Nomination Orders கொடுப்பதை நிறுத்த வேண்டுமென்று, 23-4-1997 நாளிட்ட சுற்றறிக்கையில் அறிவுரை வழங்கி இருக்கிறார்கள்.

அதுபோலவே தலைமைச் செயலகக் கட்டடங்கள், சட்டமன்றச் செயலகக் கட்டடங்கள் தொடர்பான மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை நாமினேஷன் முறையிலே வழங்குவது பல ஆண்டுகாலமாக இருந்து வருகிற ஒன்று. தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரையில் விடுதலை கிடைத்த காலத்திலிருந்து நாமினேஷன் முறையில்தான் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாமினேஷன் முறையைத் தவிர்க்க வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் சுற்றறிக்கையில் தெரிவித்தவுடன் முக்கிய பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. இதுபற்றி 8-2-1998 நாளிட்ட அரசு ஆணை எண் 169-ல் கூட முதல் பத்தியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பணியின் முக்கியத்துவத்தைக் கருதி, வேலையின் அவசரம் கருதி, வேலையில் எந்தவிதத் தடையும் இன்றி துரிதமாக, சிறப்பான முறையிலே குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தலைமைச் செயலக உபகோட்ட பொதுப் பணித் துறையினால் நியமன முறையில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வந்தன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நியமன முறையில் செயல்படுவதைத் தவிர்க்க அரசு கொள்கை அளவிலே முடிவு எடுத்துள்ளதால் தலைமைச் செயலக உபகோட்டத்தின் சிறிய பராமரிப்புப் பணிகள்கூட ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளைத் தொடங்குவதற்கு 45 நாட்கள் காலதாமதம் ஆகிறது என்பது இந்த அரசு ஆணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தின் கட்டட மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள் குறுகிய காலத்தில் ஆணை பெற்று இரண்டு, மூன்று நாட்களிலேயே முடிக்க வேண்டியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளதோடு இந்த அரசு ஆணையில் ஒரு முக்கிய அனுமதியும் அளிக்கப்படுகிறது.

அமைச்சர் பெருமக்கள், சபாநாயகர், துணைச் சபாநாயகர், பேரவைச் செயலர் ஆகியோர் சம்பந்தப்பட்ட பணிகள், இங்கே தலைமைச் செயலகத்திலே ரூபாய் 1 இலட்சத்திற்கு மிகாமல் அவசர வேலைகளுக்கு நியமன முறையிலே பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பொதுப் பணித் துறைச் செயலாளர் சான்று அளிக்க வேண்டும். இதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், இங்கே தலைமைச் செயலகத்திலே எந்த வேலையைச் செய்ய வேண்டுமென்றாலும் துணைச் செயலாளர், பொதுத் துறை



Deputy Secretary, Public Department, அவர்தான் உத்தரவு இடவேண்டும். சட்டமன்ற விடுதியிலே வேலை செய்ய வேண்டுமென்றால் என்னுடைய துறையைச் சேர்ந்த சட்டமன்ற விடுதி துணைச் செயலாளர் அதற்கு உத்தரவு போட வேண்டும். அந்த உத்தரவு பெற்றவுடன் நியமனத்திலே வேலை செய்யலாம்.

அதைப்போலவே, முக்கியமானவர்கள் இருக்கின்ற அந்த வீடுகளிலே, நீதிபதியாக இருந்தாலும் சரி, அமைச்சராக இருந்தாலும் சரி அல்லது பேரவைத் தலைவரோ, துணைத் தலைவரோ எதிர்க்கட்சித் தலைவரோ, கொறடாவாகவோ இருந்தாலும் அவர்களுடைய நேர்முக உதவியாளர்கள் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டால் நியமனத்திலே செய்யலாம் என்று அரசு உத்தரவு இருக்கிறது. அந்த வகையிலே சட்டமன்ற விடுதி என்று எடுத்துக்கொண்டால், 194 அறைகள் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 152 அறைகளுக்கு நியமன வகையிலே பழுதுபார்ப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட எனக்கு மிக நெருக்கமான ஒரு நண்பர், ஒரு சட்டமன்ற உறுப்பினர் பொதுப் பணித் துறையிலேயிருந்து இந்த உத்தரவு வந்ததாகக் கருதிக்கொண்டு இவ்வளவு பேருக்கு இந்த உத்தரவைக் கொடுக்கலாமா என்று கேட்டார்கள். இதிலே பொதுப் பணித் துறை அமைச்சருக்கோ, அந்தத் துறைக்கோ எந்தத் தொடர்பும் கிடையாது. அந்த மராமத்து வேலைகளைப் பார்க்க வேண்டுமென்று உத்தரவு போட்டவன் இந்தப் பாவிதான். ஏனென்றால், அந்த அதிகாரம் எனக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 194 அறைகளிலே, 152 அறைகளில் கடந்த 4 ஆண்டு காலத்தில், உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு,— கட்சி வித்தியாசம் பார்க்காமல் எந்த உறுப்பினர் என்னிடத்திலே வந்து கேட்டாலும்—நான் முதலிலே சொல்லிப் பார்த்தேன். புது சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு தயாராகிக் கொண்டிருக்கிறது, ஆகவே இந்தச் செலவு தேவையா என்று கேட்டுப் பார்த்தேன். அதற்குப் பிறகு ஒருவருக்குக் கொடுத்துவிட்டு, ஒருவருக்குக் கொடுக்கவில்லையென்றால், பிரச்சினை வருமென்று, என்னிடம் யார் வந்து கேட்டாலும் நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். இந்த அடிப்படையிலேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-35

அதைப்போலவே, நாங்கள் குடியிருக்கின்ற பகுதியில்—இதிலே ஏதோ குற்றச்சாட்டை நான் சொல்வதாக யாரும் கருதிவிடக் கூடாது—எங்கள் வீடுகள் இருக்கின்ற பகுதியில், நாங்கள் குடியிருக்கின்ற பகுதியில் மற்றவர்கள் சொல்வதைக் காட்டிலும் என்னுடைய வீட்டிற்கு எவ்வளவு

செலவாகியிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1996-97, 1997-98, 1998-99, 1999-2000 ஆகிய ஆண்டுகளில் நான் குடியிருக்கும் 'எழில்' என்ற வீட்டிற்கு—மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் நான் பேசுவதை சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்— செலவு செய்த தொகை, 7,54,815 ரூபாய். இது நியமனத்திலே செய்யப்பட்டது. எனக்கும் தெரியும். என்னுடைய உதவியாளர், பொறியாளருக்கு எழுதி இதை செலவு செய்யச் சொல்லியிருக்கிறார்.

அதைப்போலவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வீட்டிற்கு செலவு செய்த தொகை, இந்த 4 ஆண்டுகளில் 11,09,030 ரூபாய். இதிலே அவருடைய வீடு என்னுடைய வீட்டைவிட மோசமான நிலைமையிலே இருந்து இருக்கிறது. ஆகவேதான் இந்தச் செலவு. இதிலே வேறு ஒன்றும் உள் அர்த்தம் கிடையாது. எனக்கு இருக்கின்ற உரிமையைப் போல அவர்களுக்கும் அந்த உரிமை உண்டு. அவருடைய உதவியாளரை வைத்து ஒரு கடிதம் கொடுத்தால் உடனே வேலை செய்ய வேண்டும். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே கையெழுத்துப் போட்டு இதிலே இரண்டு கடிதங்களைக் கொடுத்திருக்கிறார். இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆகவே, நியமன முறையிலே, அரசாங்கத்திலே வி.வி.ஐ.பி.க்கள் என்று கருதப்படுகின்ற, ஆளுநர், நீதிபதிகள், அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அரசு கொறடா, எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருடைய இடங்களுக்கும் நியமன முறையிலே செய்து கொடுக்கலாம் என்ற அரசின் உத்தரவின் அடிப்படையிலேதான் இந்த வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த 60 பக்கங்களிலே எங்கேயும் சிங்கிள் டெண்டர் முறையில் அனுமதிக்கப்பட்டிருப்பர் என்று என்னால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நாமினேஷனிலே கொடுத்ததைத்தான் சிங்கிள் டெண்டர் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றார்களா என்று எனக்குத் தெரியாது. அப்படியென்றால், இதிலே நானூற்று சொச்சம் பணிகள் செய்யப்பட்டிருப்பது உண்மை. ஆனால், யார் யாருக்கு, எந்தெந்த இடத்திலே என்று விவரங்கள் பூராவையும் நான் சொல்லிவிட்டேன். தலைமைச் செயலகத்திலே, சென்னை ராஜ்பவனிலே, ஊட்டி ராஜ்பவனிலே, பழைய கிரீன்வேஸ் சாலை— இப்போது குமாரசாமி ராஜா சாலையில் இருக்கின்ற அத்தனை குடியிருப்புகளும் இதில் வரும் ஒவ்வொரு முறையும், ஒரு நீதிபதி மாற்றம் அடைந்தாலும் ஒவ்வொரு



முறையும் அந்த வீடு காலி செய்யப்பட்டு, இன்னொருவர் அந்த வீட்டுக்கு வருவதாக இருந்தாலும், அதை முழுமையாக மராமத்து செய்வதற்கு நாமினேஷன் முறைதான். இது அரசு உத்தரவு. ஆகவே, இதைத் தவிர, சிங்கிள் டெண்டர் சிஸ்டத்திலே, எங்கே கொடுத்திருக்கிறார்கள், எந்த வேலைக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று இந்த 60 பக்கங்களிலே வேறு எங்கும் எனக்கு ஆதாரம் இல்லை. இதிலே, இந்த நாமினேஷன் முறையிலே கொடுத்ததை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "நான் தருகின்ற இந்தத் தகவல்கள் அனைத்தும் ஒரே ஒரு கோட்ட அலுவலகத்தை மட்டும் சார்ந்ததாகும். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழிக்கு ஏற்ப எனக்குத் தெரிந்த தகவல்களைப் பொதுமக்கள் நலன் கருதி தங்களிடம் தருகிறேன்." என்று எழுதியிருக்கிறார். அவர் கொடுத்த புள்ளிவிவரங்கள் தவறு என்று நான் சொல்லவில்லை; சரிதான். ஆனால் இது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் இல்லை. ஒரு சோறுதான். பானையிலே வேறு சோறு கிடையாது. தமிழ்நாட்டிலே வேறு எங்கேயும் நியமன முறை மூலமாக வேலை கிடையாது. ஆகவே, இதைப் பெரிதுபடுத்தி, பூதாகரமாக, இந்த ஒரு கோட்டத்திலே இவ்வளவு என்றால், 50 கோட்டங்களிலே எவ்வளவு என்று எண்ண வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து யாரும் கை தட்டக்கூடாது, அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-40

இதிலே யார் மீதும் குற்றச்சாட்டுச் சொல்வதோ, அல்லது பழி சுமத்துவதோ என்னுடைய வேலை அல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கின்றார்கள். இதிலே ஆதாரம் உள்ளதா, இல்லையா என்பதைச் சொல்வது என்னுடைய கடமை. ஆகவே, இதை நான் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். நான் ஒரு கருத்தைச் சொன்னால், ஆளுங்கட்சி அதை ஆதரித்து ஆரவாரம் செய்வதும், இன்னொரு கருத்தைச் சொன்னால், எதிர்க்கட்சி அதை எதிர்ப்பதும், தயவுசெய்து இதிலே தவிர்க்கப்பட வேண்டும். ஏனென்றால், இப்போது நான் ஒரு நீதிபதியைப்போல ஒரு தீர்ப்பைச் சொல்கின்றேன். நீதிபதி தீர்ப்பைச் சொல்கின்ற நேரத்திலே யாரும் குறுக்கிடக் கூடாது என்பது சட்டம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

``Maintenance என்றால், 1,000, 2,000 ரூபாயா? 10 கோடி, 5 கோடி. எப்படி? சென்னை நகரம் மூன்று division ஆக இருக்கிறது. அந்த மூன்று

division-க்கு ஆண்டிற்கு 10, 10 கோடி, தென்சென்னைக்கு 10 கோடி, மெரினா division-க்கு 10 கோடி வட.சென்னைக்கு 20 கோடி. இந்த கோடிக்கணக்கான ரூபாய் வேலைகளுக்கு டெண்டர் விடாமலேயே single tender-க்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை ஆதாரத்தோடு நான் வைத்திருக்கின்றேன். சென்னை கோட்டங்களிலே ஆண்டிற்கு 40 கோடி ரூபாய் பணிகள் single Tender முறையிலே கொடுக்கப்பட்டுள்ளன" என்றும் எதிரிக்கட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அது உண்மை அல்ல. இந்த மூன்று கோட்டங்களுக்கும், 1999-2000 ஆண்டிலேதான் அதிகமாக ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்த மூன்று கோட்டங்களுக்கும் சேர்த்து, 23.81 கோடி ரூபாய். அதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த பட்டியலிலே 1996 ஆம் ஆண்டு ஆரம்பித்து 2000 ஆண்டு வரை 448 பணிகள் நியமன முறையிலே செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பட்டியலைத்தான், 49 பக்கங்கள், அவர்கள் கொடுத்து இருக்கின்றார்கள். அதற்குண்டான செலவு 4.5 கோடி ரூபாய். இந்த 4.5 கோடி ரூபாய், மொத்தத்தில் எவ்வளவு என்று பார்த்தால்— இந்த நான்கு ஆண்டுகளுக்கு, பொதுப் பணித் துறையிலே கட்டடங்களுக்கு மட்டும் கொடுத்த நிதியைச் சொல்கின்றேன். ஒட்டுமொத்தமாக 268 கோடி ரூபாய். இந்த நான்கு ஆண்டு காலத்திலே நியமனம் மூலமாக செய்த பணியின் மதிப்பு 4 கோடியே 48 இலட்சம் ரூபாய். இதை அதிகம் என்றோ, அல்லது பூதாகரம் என்றோ, single tender system என்றோ, ஊழல் என்றோ எந்தக் கணக்கிலே எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

அதற்கு அடுத்தபடியாக, இதிலேகூட நான் தண்டனை எனக்குத்தான் என்று சொன்னதற்குக் காரணம், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த பட்டியலிலேகூட— அந்தப் பட்டியலை உறுப்பினர்களுக்குக் காட்ட விரும்புகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் அந்தப் பட்டியலை அவையில் காண்பித்தார்)*

இதிலே, இந்த 49 பக்கங்களிலே, 10, 20 பக்கங்களுக்கு வரிசையாக, அழகாக, நேர்த்தியாக இதைக் கொடுத்துவிட்டு, இறுதி column-ல் யார் அந்த ஒப்பந்தக்காரர் என்று கொடுத்துவிட்டார்கள். அதாவது, இங்கு உள்ளது Serial No. 1 முதல் 121 வரை. ஆனால், அதற்குப் பிறகு கொடுத்த பட்டியல்; இதிலே எனக்கு ஏற்பட்ட சிக்கல், இது அவசரமாக நகல் எடுக்கப்பட்டதோ, அதிகாரிகளுக்குத் தெரியாமல் எடுக்கப்பட்டதோ, எப்படியோ என்று அந்த ஆராய்ச்சியிலே நான் இறங்க விரும்பவில்லை.



இந்தக் கடைசிப் பட்டியலிலே இருக்க வேண்டிய ஒப்பந்தக்காரர் யார், எவர் என்று எனக்குத் தெரியாமலேயே உள்ளது கிட்டத்தட்ட இந்தக் கணக்கிலே 300 இலக்கங்களுக்கு. நான் அந்தப் பொறியாளர்களை அழைத்து, அவர்களுடைய அலுவலகங்களிலே இருக்கிற விவரங்களைப் பெற்றுத்தான், ஒட்டுமொத்தமாக, நியமனத்திலே எவ்வளவு கொடுக்கப்பட்டது; யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பதை என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. நான் சொன்னது புரியும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1-45

120-க்கு நீள வாட்டத்தில் பக்கங்கள். ஆனால் அதற்குப் பின்னாலே கொடுக்கிற நேரத்திலே, அப்படி பக்கங்கள் இல்லாமல், நேரடியாக அகல வாட்டத்தில் இந்தக் கடைசி column நகலில் இல்லாமல் போய்விட்டது. இதை நான் அதிகாரிகளை அழைத்துக் கண்டுபிடிக்க வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது என்பதை இப்போது சொல்ல விரும்புகிறேன்.

இவை அத்தனையையும் சொல்லி, இறுதியாக ஒரு மாபெரும் குற்றச்சாட்டைச் சொன்னார். இந்த அவையிலே பேசும்போது. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பினாமி என்று சொல்லி, அவர் பெயர் சுப்பாராவ் என்றும் சொன்னார். இதிலே இந்த விவாதம் நடந்தபோது, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, "குற்றச்சாட்டுப் பட்டியல் உங்களிடம் கிடையாது; ஆகவே, அமைச்சருக்குப் பினாமி என்று சொல்வதை நீங்கள் எப்படி ஏற்றுக்கொள்ளலாம்" என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் என்று கருதுகிறேன்; "அதை எப்படி அனுமதிக்கலாம்?" என்று கேட்டார்கள். ஆகவே, நான் உடனடியாக பத்திரிகையாளர்களுக்கு ஓர் உத்தரவு போட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வார்த்தைகள், தற்போது அவைக்குறிப்பிலே இடம் பெறாது; நான் தீர்ப்புச் சொன்ன பிறகு வேண்டுமானால், அந்த விவரத்தை அனுமதிக்கலாம் என்று சொன்னேன். ஆனால் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னுடைய தீர்ப்பு வருகின்ற வரையில் நான் எந்த வார்த்தையை இடம் பெறக்கூடாது; என்று சொன்னேனோ, அந்த வார்த்தைகளை ஒரு பெரிய பேட்டியில் பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்து, பொதுப் பணித் துறை பொறியில் மாட்டிக் கொள்கிறது" என்ற ஒரு தலைப்போடு ஒரு பத்திரிகையிலே இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இது அவர் தரத்திற்குச் சரியில்லை என்பது என்னுடைய கணக்கு. அதோடு நான் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது, சுப்பாராவ் என்ற ஒரு ஒப்பந்தக்காரரை, பொதுப் பணித் துறை அமைச்சரின் பினாமி என்று சொன்னார்கள். ஆனால், கடிதம் எழுதும்போது, வழக்கம்போல அவருடைய கண்ணியத்தைக் காட்டி, அதிலே, "சுப்பாராவ் என்பவர் பெரும்பலன் அடைந்திருப்பதாகக் கருதுகிறேன்—இந்தச் செயல்பாடுகளில், ஒரு குறிப்பிட்ட கான்ட்ராக்டர், அதாவது திரு. ஜி. சுப்பாராவ் என்பவர் மட்டும் பெரும்பலன் அடைந்திருக்கிறார் என்று நன்கு தெரிய வருகிறது" என்று மிகத் தரமாகச் சொல்லியிருக்கிறார். குற்றச்சாட்டாக, ஆனால் தரமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால், இங்கே அவையிலே பேசும்போது, பினாமி என்று சொன்னார். அதே வார்த்தைகள் பத்திரிகையிலே வந்திருக்கின்றன.

இந்த சுப்பாராவ் என்பவர் யார் என்று விசாரிக்க வேண்டிய கடமை எனக்கு ஏற்பட்டது. சுப்பாராவ் ஒரு ஒப்பந்தக்காரராக, 23 ஆண்டுகளாகப் பணி செய்கின்றார். அவர் முதன்முதலாக ஒப்பந்தக்காரராகப் பதிந்து கொண்டது, 1977இல். 23 ஆண்டுகளாக இந்தப் பணியைச் செய்கின்றார். ஆரம்பத்திலே, 1977-லே அவர் பணி செய்யக்கூடிய தகுதி, ரூ.10,000 ஆக இருந்து, 1979இல், ரூ.40 ஆயிரம் ஆகி, 1982-லே ரூ.1 இலட்சமாகி, 1988-லே, ரூ.2 இலட்சமாகி, 1992-லே ரூ.5 இலட்சமாகி, 1994-லே, ரூ.5 இலட்சமாகி, 1998-லே ரூ.10 இலட்சமாகி, அவருடைய தகுதி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே முக்கியமாக ஒன்றை, மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். 1988-இல் ரூ.2 இலட்சம் என்பது, 1992இல்தான் ரூ.5 இலட்சமாகியிருக்கிறது. 1989 முதல் 1991 வரை, இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அன்றும் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார். அந்தக் காலத்திலே, இந்த உச்சவரம்பு உயர்த்தப்படவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-50

அதுமட்டுமல்லாமல், சுப்பாராவ் அவர்கள் 1977-இலே ஒப்பந்தக்காரராக, தன்னை ஆக்கிக் கொண்டு, 23 ஆண்டுகள் வேலை பார்த்து, அவர்களுடைய வாழ்க்கையை ஓட்டுகின்ற நேரத்தில், திடீரென்று, அவருக்கு ஒரு புது மரியாதை கிடைத்து. அவர், பொதுப் பணித் துறை அமைச்சரின் பினாமி என்ற ஓர் ஆதாரமற்ற குற்றச்சாட்டை, எந்த வகையிலுமே ஏற்றுக்கொள்ள முடியாத எந்த ஆதாரமும் இல்லாத ஒரு குற்றச்சாட்டை இங்கே வைத்திருப்பதை, நான் வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த சுப்பாராவ், எந்தெந்த காலத்திலே, எவ்வளவு பணி செய்திருக்கிறார்கள் என்பதும், ஒரு பட்டியலாக





என்னுடைய தீர்ப்பிலே, ஒரு பகுதியாக இருக்கப் போகின்றது. இதிலே, 1977இலே, அவர் ஒப்பந்தக்காரராகத் தொடங்கி, இன்று வரை ஒப்பந்தக்காரராக இருக்கின்றார். நான் இங்கே ஓர் ஆவணத்தை வைக்கின்றேன். சுப்பாராவ் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை, 1985-இலேயிருந்து, 2000 வரை எவ்வளவு என்று. இது ஒரு சிறிய பட்டியல். ஆகவே, இதைப் படிக்கலாம் என்று கருதுகின்றேன்.

| | | |
|---|---|---|
| 1985-86-ல் | - | Nil |
| 1986-87-ல் | - | 0.55 சதவிகிதம் |
| 1987-88-ல் | - | 1.65 சதவிகிதம் |
| 1988-89-ல் | - | 1.19 சதவிகிதம் |
| 1989-90-ல் | - | 1.40 சதவிகிதம் |
| 1990-91-ல் | - | 2.62 சதவிகிதம் |
| 1991-92-ல் | - | 3.87 சதவிகிதம் |
| 1992-93-ல் | - | 4.87 சதவிகிதம் |
| 1993-94-ல் | - | 5.05 சதவிகிதம் |
| 1994-95-ல் | - | 2.21 சதவிகிதம் |
| 1995-96-ல் | - | 2.54 சதவிகிதம் |
| 1996-97-ல் | - | 3.79 சதவிகிதம் |
| 1997-98-ல் | - | 2.71 சதவிகிதம் |
| 1998-99-ல் | - | 4.69 சதவிகிதம் |
| 1999-2000-ல் | - | 5.22 சதவிகிதம் |

இதுதான் மொத்தம் செலவு செய்த பணத்திலே, அவருக்குக் கொடுத்த வேலையின் மதிப்பு. இதைத் தவிர, அரசாணையின் அடிப்படையிலே நியமனத்திலே கொடுப்பதற்கு, யார் யாருக்கு எந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். ஆகவே, இந்த வேலைகளைப் பொறுத்தவரையில், தலைமைச் செயலகத்திற்கு எந்தக் கோப்பும் வரவேண்டிய அவசியமில்லை. கோட்டப் பொறியாளரோடு இந்தக் கோப்பு முடிந்து விடுகின்றது. தலைமைச் செயலகத்திற்கு வராத கோப்பிலே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தொடர்புடையவராகிறார் என்ற குற்றச்சாட்டிற்கு, வேறு ஏதாவது ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால், நான் அதை

ஏற்றுக்கொள்ள முடியும். இன்னும் சொல்லப்போனால், இந்த மண்டபத்தைச் சீர் செய்தவர். அந்த ஒப்பந்தக்காரர்தான். இந்த மண்டபத்திற்கு அவர் வேலை செய்ததுகூட, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரினால்தான், அந்த வேலையைக் கொடுத்தேன். நான் ஒரு நாள் அறையிலே இருக்கும்போது. அவை நடக்காத நேரத்தில் ஒரு பெரிய கல் மேலிருந்து அவர் உட்காரும் இடத்திலே வந்து விழுந்தது. நான் ஓடோடி வந்து பார்த்தேன். நல்லவேளையாக சட்டமன்றம் நடக்கவில்லை; இல்லையென்றால் என் மீது ஒரு கொலைக் குற்றசாட்டு விழுந்திருக்கும். காரணம், அவ்வளவு உயரத்திலேயிருந்து விழுந்திருக்கிறது என்பதால் உடனடியாக, இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, 10 இலட்சம் ரூபாய் செலவிலே, இந்த வேலைகள் நடந்தன. இந்த வேலை மிக நேர்த்தியாக நடந்தது என்று எல்லா பத்திரிகைகளும் எழுதியிருந்ததை, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள். குற்றச்சாட்டின் தன்மை எப்படி இருந்தாலும்; இந்த வேலையைச் செய்தவர் அந்த ஒப்பந்தக்காரர் சுப்பாராவ் அவர்கள்தான். அதை டெண்டர் முறையிலே, எல்-1-ஆகச் செய்தார். இன்னும் சொல்லப்போனால், இந்த அலங்கார வேலைகளை எல்லாம் சென்னையிலே யாரும் செய்ய முடியாது என்று பம்பாயிலிருந்து ஆட்களை அழைத்துக் கொண்டுவந்து செய்தார் என்று வேலை நடக்கும்போதே என்னிடம் காட்டினார்கள்.

நேர்த்தியாக வேலை செய்ததற்காக, நான் என்னுடைய செயலாளரை விட்டு. அந்தப் பொறியாளருக்கும், அந்த ஒப்பந்தக்காரருக்கும் ஒரு பாராட்டுக் கடிதம் இரண்டு மாதங்களுக்கு முன்னால் எழுதச் சொன்னேன். ஆனால். அப்பொழுது எனக்கு இப்படி ஒரு குற்றச்சாட்டு வரும் என்று தெரியாது. ஆனால், இரண்டு மாதங்களுக்கு முன்னாலே ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினேன். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்த வகையிலே பொதுப் பணித் துறை அமைச்சரோடு சேர்க்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

பிற்பகல் 1-55

நான் ஒருபடி மேலே போய்ச் சொல்கின்றேன். நாம் அனைவரும் ஒரே மாதிரி இருக்க முடியாது. சிலபேர் கெட்டிக்காரர்களாக இருப்போம். சிலபேர் சாதாரணமாக இருப்போம். என்னுடைய கணக்கிலே கெட்டிக்காரர்கள் பட்டியலிலே பொதுப் பணித் துறை அமைச்சரைச் சேர்ப்பேன். அவர் தவறு செய்ய வேண்டும் என்று நினைத்தால், மிகச்



சாதாரண வகையிலே இந்தத் தவறைச் செய்யலாம். நியமனம் யார் பெயரிலே வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று அரசு உத்தரவு (G.O.) இருக்கிறது. இந்த சுப்பாராவை ஆதரிக்க வேண்டுமென்று அவர் நினைத்திருந்தால் அல்லது அதிலே அக்கறை இருந்திருந்தால், அதிகாரிகளை, பொறியாளர்களை கூப்பிட்டு நீங்கள் கொடுத்த வேலையில் அவர் பெயரைப் போடாமல், அவருடைய கொத்தனாருடைய பெயரைப் போடுங்கள், அவருடைய தம்பி பெயரைப் போடுங்கள், அவருடைய அண்ணன் பெயரைப் போடுங்கள், அவருடைய உறவினர்கள் பெயரைப் போடுங்கள் என்று சொல்லி, இவருக்கு இவ்வளவு வேலை கொடுத்ததாக ஒன்றும் ஆதாரம் இல்லாமல் செய்திருக்கலாம். ஆனால், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, முன்னாள் ஆட்சியிலே, எல்லா ஆண்டுகளும் இந்தத் தலைமைச் செயலகத்திலே இவர் வேலை பார்த்திருக்கிறார். இன்னும் சொல்லப் போனால். நான் பொறியாளரை அழைத்துக் கேட்டேன். இந்த சுப்பாராவ் என்ன அவ்வளவு பெரிய ஆளா, நீங்கள் வேலை கொடுப்பதாக ஒரு குற்றச்சாட்டு வந்திருக்கிறது என்றேன். ஆரம்ப காலம் முதல் இந்த சுப்பாராவ், வேலை செய்வது, இந்தத் தலைமைச் செயலகத்திலேதான். ஏனென்றால், இங்கே ஒரு விநோதமான முறையிலே வேலை செய்ய வேண்டும். குறிப்பாக, அரசுச் செயலர்கள் அறையிலே மாலை 6 மணிக்கு மேல், அடுத்த நாள் காலை 8 மணிக்குள்ளே வேலை முடிக்க வேண்டும். இன்னும் அதற்கு மேலே வேலை இருந்தால், விடுமுறை நாட்களான சனி, ஞாயிறுகளிலே வேலை முடிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இன்னும், அதற்கு மேலே ஒன்றைச் சொன்னார்கள். அவரிடம் வேலை பார்ப்பவர்களை போலீசார் ஒரு இரகசிய விசாரணை செய்துவிட்டுதான் அனுமதி கொடுக்கின்றார்கள், ஆகவே, நம்பிக்கையானவர்கள் என்ற முறையிலேதானே ஒழிய வேறொன்றுமில்லை என்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, 268 கோடி ரூபாய் இந்த 4 ஆண்டுகளிலே கட்டடங்களுக்காக மட்டும் பொதுப் பணித் துறையிலே அமைச்சர் கையிலே இருந்தது. நாமினேஷனிலே 4½ கோடி ரூபாய்; இந்த 4½ கோடி ரூபாயிலே சுப்பாராவின் பங்கு 70 இலட்சம் ரூபாய். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் இதிலே பொதுப் பணித் துறை அமைச்சருக்கும், ஒப்பந்தக்காரர் சுப்பாராவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவ்வகையில் ஒரு காகிதம்கூட எனக்குக் கொடுத்த 60 பக்கங்களிலே இல்லை என்பதை என்னுடைய தீர்ப்பாக நான் சொல்ல விரும்புகின்றேன்.

இதற்கு மேலே அதிக நேரம் எடுக்க விரும்பவில்லை. ஆனால், ஒரு பொது விதி உண்டு. குற்றஞ்சாட்டியவர் ஒருவர், குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவர். நான் நீதிபதி, தீர்ப்பு சொல்ல வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்றால், அவருக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். அவர் நிரபராதி என்று சொன்னால், குற்றஞ்சாட்டியவருக்கு நான் ஏதாவது தண்டனை கொடுக்க வேண்டும். இதுதான் பொது விதி. இதற்கு முன்னால்கூட அதைக் கடைபிடித்து இருக்கின்றேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நான் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இதுகூட ஆதாரத்திற்குத்தான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவர் பேச்சிலே சொன்னதைப்போல, பொது நலன் கருதி அவருக்குக் கொடுக்கப்பட்ட விவரங்களை இங்கே கொடுப்பதாகச் சொன்னார்கள். அவருக்குக் கொடுத்ததை இங்கே கொடுத்திருக்கிறார்கள் என்பதிலே எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், இதை அவருக்குக் கொடுத்தவர் ஒரு பெரிய பித்தலாட்டத்தைச் செய்திருக்கிறார்.

பிற்பகல் 2-00

அது பக்கம் 8-9, 8-வது பக்கத்திலே ஓர் அரசாணையைக் குறிப்பிடுகின்றார். G.O. No. Ms.149, 9-வது பக்கத்திலே இந்த அரசாணையின் தொடர்ச்சியா என்று பார்த்தால், அது வேறு ஒரு G.O. முன்னாலே பார்த்தால் குதிரை, பின்னாலே பார்த்தால் கழுதை என்பார்களே, அதைப்போல முதல் பக்கத்திலே கொடுத்திருக்கிற G.O. No. 149; அடுத்த பக்கத்திலே கொடுத்த G.O. No. 2297. இதை நான் திட்டவட்டமாகச் சொல்கின்றேன். இது எதிர்க்கட்சித் தலைவருக்கே தெரியாமல் கொடுக்கப்பட்ட ஒன்று. அப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் நிச்சயமாக அவர் செய்யமாட்டார் என்ற தீர்ப்பையும் நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவருக்குக் கொடுத்ததை அவர் கொடுத்திருக்கின்றார். பல நேரங்களிலே அவருக்கு சில கருத்துகளைச் சொல்லி, பேச கட்டாயப்படுத்துகின்றார்கள். எனக்கு அவரை நன்றாகத் தெரியும். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், நிச்சயமாக எனக்குக் கொடுத்த ஆதாரங்களின் அடிப்படையில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள்மீது எள் அளவுகூட எந்தத் தவறும் இல்லை என்ற தீர்ப்பை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த ஆதாரங்களிலே அவர்மீது எந்தக் குற்றமும் இல்லை. இதிலே இந்த ஆதாரங்களை இதற்கு



மேல் நான் சொல்லத் தேவையில்லை. ஏதோ பெயரளவிற்காவது கண்டிக்க வேண்டாமா என்று நான் கருதினேன். ஆனால் ஒன்று, அவர் எதிர்க்கட்சித் தலைவர், நான் பேரவைத் தலைவராக இந்த நான்கு ஆண்டுகளில் பலமுறை சொல்லி வருவது, விதிகளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் மரபுகளையும் முன்மாதிரிகளையும்தான் அதிகம் மதிக்கின்றேன். அந்த வகையிலே எப்பொழுது பிரச்சினை எழுப்பினாலும் மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். என்னை இந்த இருக்கையிலே அமர்த்தி நீங்கள் எல்லாம் வாழ்த்திப் பேசும்போது எல்லோருமே, ஒருமுகமாகச் சொன்னீர்கள்; காணாமல் போன மரபுகளைத் தேடிக்கொடுங்கள் என்றுதான் சொன்னீர்கள். நான் முயற்சி செய்கின்றேன். அதைத் தேடிவிட்டேனா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டிலே ஆதாரம் இல்லை என்று நான் சொன்ன பிறகு, குற்றஞ் சாட்டப்பட்டவர் நூற்றுக்கு நூறு நிரபராதி என்று தீர்ப்பு சொன்ன பிறகு, குற்றஞ் சாட்டியவர் மீது என்ன நடவடிக்கை என்று நியாயமாகக் கேட்பார்கள். எனக்கு அதிலே ஏற்படுகின்ற சிக்கல், தனிப்பட்ட முறையிலே எதிர்க்கட்சித் தலைவரை நான் மதிப்பது என்பது ஒன்று. இந்த அவையின் இறையாண்மையைக் காப்பாற்றுவதிலே முதலமைச்சருக்கு அடுத்தாற்போல எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு என்று நான் நினைக்கின்றேன். அவ்வளவுதான் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க விரும்புகின்றேன். குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய முதுமையின் காரணமாகவும், அவருடைய அனுபவத்தின் காரணமாகவும் எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இதிலே ஏதோ அவசரப்பட்டு, இதைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் நான் பெயருக்காவது ஏதாவது ஒரு தண்டனை "அல்லது கண்டனம் என்று சொன்னால், வருங்காலத்திலே ஒரு மோசமான மரபு இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்திலே ஏற்பட்டு, இனிமேல் யாரும் எதிர்க்கட்சித் தலைவராக உட்கார முடியாத ஒரு சூழ்நிலை இங்கே ஏற்பட்டுவிடும். எது ஆளும் கட்சி, எது எதிர்க்கட்சி என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. மரபின் அடிப்படையிலே ஏற்கெனவே ஓர் எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவருக்கு தண்டனை கொடுத்துவிட்டார்கள். அது இந்த ஆண்டிலே இத்தனாம் தேதி, இந்தப் பேரவைத் தலைவர் செய்தார். ஆகவே, இதிலே தவறு ஒன்றுமில்லை என்று ஒரு மோசமான மரபை எதிர்காலத்திலே ஏற்படுத்தும் என்ற வகையில், இப்படிப்பட்ட மரபை ஏற்படுத்துவதற்கு நான் காரணமாக இருக்கக் கூடாது, அதுவும் நான் பெரிதும் மதிக்கின்ற சட்டமன்ற வரலாற்றிலேயே 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து சட்டமன்ற

உறுப்பினராக இருந்து, அரசியல் ரீதியாக எந்த விமர்சனத்திற்கும் ஆளாக்கப்படாமல், சட்டமன்ற மரபுகளைக் காப்பாற்றுவதிலே, கடைப்பிடிப்பதிலே முதலமைச்சரைப் போல இந்த நாட்டிலே வேறு யாரும் கிடையாது என்ற சூழ்நிலையில், அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இப்படி ஓர் எதிர்க்கட்சித் தலைவருக்கு இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது என்று வரலாற்றிலே இடம் பெறக் கூடாது என்று நான் விரும்புகின்றேன். ஆகவே இதிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று கூறி, இதிலே வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கத் தயாராக இல்லை, நான் எடுக்கப் போவது இல்லை என்று இந்தத் தீர்ப்பைப் பொறுத்த அளவிலே என்னுடைய தீர்ப்பை முடிக்கின்றேன். (குறுக்கீடு) தீர்ப்பிற்குப் பிறகு விளக்கம் சொல்லக் கூடாது. என்னுடைய தீர்ப்பில் உங்களுக்குத் திருப்தி இல்லையென்றால், வேறு ஏதாவது நடவடிக்கை எடுங்கள்.

பிற்பகல் 2-05

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** திருப்தி இல்லை என்பதனால்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், நீங்கள் அதற்கு விளக்கம் சொல்வதற்கு நான் அனுமதிக்க முடியாது. அப்பொழுது ஒவ்வொரு தீர்ப்புக்கும் நான் விளக்கம்....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தீர்ப்பு வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இன்னும் சொல்கிறேன். இதிலே ஒன்றும் தவறு இல்லை. உங்கள் தீர்ப்பு சரியில்லை என்று நீங்கள் வெளிநடப்பு செய்வதாக இருந்தாலும் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் என்னுடைய தீர்ப்பில் நாம் இரண்டு பேரும் விவாதம் பண்ணக்கூடாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இல்லை, இல்லை. உங்களுக்கு சில விளக்கங்கள். அதாவது நான் கொடுத்திருக்கிற தகவலிலே....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள், எல்லோரும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எல்லோரையும் அமைதியாக வைத்திருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் கொடுத்திருக்கிற அந்த குற்றச்சாட்டுகளிலே ஒரு G.O.-வைக் காட்டி அந்த G.O.-விலே 1 இலட்சம் ரூபாய்க்குள்ளேதான் வேலை நடக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், அதற்கு மேலே 1½ இலட்சம் 2 இலட்சம் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இன்னொன்று, எந்தெந்த டிபார்ட்மெண்ட் என்பதில் உதாரணமாக, செக்கரடேரியட் என்று சொன்னீர்கள். நம்முடைய சட்டமன்ற விடுதி என்று சொன்னீர்கள். அடுத்தது, கவர்னர் மாளிகை என்று சொன்னீர்கள். அடுத்தது, அமைச்சர்கள் வீடு என்று சொன்னீர்கள். இது அல்லாத இடங்களில் நிறைய வேலைகள் நடந்திருக்கின்றன. அதையெல்லாம் நீங்கள் பார்க்கவில்லையோ என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். அப்படி நடந்திருக்கிறது என்று சொன்னால் இந்த உத்தரவு போட்டதற்கு முன்னாலே நடந்திருக்கும். அதை நீங்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த உத்தரவு போட்டது எப்போது என்றால் (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் சொல்லி முடிக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னேன். 1982-லேயே வேலை இல்லாத பட்டதாரிகள், பொறியியல் பட்டதாரிகள் என்று பலவிதமாகப் பிரித்து கூட்டுறவு சொஸைட்டி அமைப்பதற்கு அனுமதி கொடுத்து, அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்லி முடிக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** எனக்கு மறந்து போய் விடும். சொல்லிவிடுகிறேன். அதாவது G.O. போட்ட பிறகு இந்த 1 இலட்சம் ரூபாய்க்கு மேலே வேலை கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் சொல்லக்கூடிய இடங்களைத் தவிர மற்ற இடங்களிலேயும் நாமினேஷன் முறையில் வேலை நடந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நான் ஏதோ மிகப் பெரிய தவறு செய்துவிட்டதாக இங்கே சொல்லி, என்னை நீங்கள் மன்னிப்பது போல் சொன்னீர்கள். நான் உண்மையிலேயே உங்கள்மீது பெரிய மரியாதை வைத்திருந்தேன். ஆனால் நீங்கள் அளித்தது ஒருதலைப்பட்சமான தீர்ப்பு என்பதால் நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். காரணம், மிகப் பெரிய குடும்பப் பாரம்பரியமிக்க நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் நியாயம் வழங்குவார்கள் என்று

நான் மிகப் பொறுப்போடு அதிகாரிகளை எல்லாம் பார்த்து, சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் பார்த்துப் பேசி உங்களுக்குக் கொடுத்த இந்தக் குற்றச்சாட்டை (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விடுங்கள். நீங்கள் சொல்லி முடியுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஒருதலைப்பட்சமாக தீர்ப்புச் சொல்லிவிட்டீர்கள் என்ற வருத்தத்தோடு இப்போது நாங்கள் எல்லாம் வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி காக்கவும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதோடு இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் நிரூபிப்பதற்கு நீங்கள் ஒரு நீதிபதியை நியமியுங்கள். நாங்கள் முழுமையாக குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு நானும் எங்களுடைய இயக்கமும் எதிர்க் கட்சிகளும் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தைத் தங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் தீர்ப்புச் சொல்லப் போகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதுதான். அந்தக் கடிதத்தின்படி தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன். எனக்கு ஒரு அனுமதி தருவதாக நீங்கள் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய ஜட்ஜ்மெண்ட்டை நீங்கள் விமர்சனம் பண்ணக்கூடாது.

**திரு. ச. அழகிரி:** விமர்சனம் பண்ண மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருதலைப்பட்சமான தீர்ப்பு என்று சொல்லுங்கள்.





**திரு. ச. அழகிரி:** நீங்கள் ஒரு வாய்ப்பு கொடுப்பதாகச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8-6-1996 அன்று தமிழக அரசு ஓர் அறிவிப்பைப் பத்திரிகைகளிலே வெளியிட்டிருந்தார்கள். அதிலே சிங்கிள் டெண்டர் முறையோ, நாமினேஷன் முறையோ இருக்க என்று பத்திரிகைகளிலே செய்தி வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாமினேஷன் முறை இல்லை, சிங்கிள் டெண்டர்தான்.

**திரு. ச. அழகிரி:** அதன் பிறகு 13-10-1997 அன்று அரசாணை எண் 169-ல் 1 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்ட வேலைகளை தலைமைச் செயலகத்திலே வி.ஐ.பி-க்கள் தங்குகிற இடங்களிலே செய்து கொள்ளலாம் என்று அதன் பிறகு ஓர் அரசாணை வந்திருக்கிறது. ஆக 8-6-1996-க்கும் 13-10-1997-க்கும் இடையிலே 11-9-1996-ல் சட்டமன்றப் பேரவையினுடைய வெஜிடேரியன், நான்-வெஜிடேரியன் உணவு விடுதிகளிலே அன்-லிமிடெட்-ஆக எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து கொள்ளலாம் என்று ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் பிறகு 19-2-1997-லே State Guest House-லே 25 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய்க்கு....

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள், நான் விளக்கம் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் யாரும் குறுக்கே பேசக்கூடாது. 8-6-1996 அன்று சிங்கிள் டெண்டர் முறை ஒன்றைத்தான் அவர்கள் தவிர்க்கச் சொல்லி இருக்கிறார்கள். நன்றாகத் தெளிவாக படித்துப் பாருங்கள். நாமினேஷன் முறை, நான் ஏற்கெனவே சொன்னேன், இந்தத் தலைமைச் செயலகம் ஏற்பட்ட காலத்திலிருந்து நாமினேஷன் முறைதான். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அதற்ப்பிறகு 1997-லே இந்தமாதிரி நாமினேஷனையெல்லாம் நிறுத்த வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் ஒரு சுற்றிக்கையை அனுப்புகிறார். அதற்கப்புறம்தான் இந்த 4 அரசாணைகளைப் போட்டிருக்கிறார்கள். ஆகையினாலே இந்த நான்கு ஆணைகளின் அடிப்படையிலும், எந்த எந்த இடங்களுக்கு நாமினேஷன் முறையிலே

வேலை செய்யலாம் என்று இருக்கிறது. அதை வைத்துத்தான் நான் சொன்னேனேயொழிய வேறல்ல. நீங்கள் சொல்லும் 8-6-1996 என்பது சிங்கிள் டெண்டருக்குத்தான் போடப்பட்ட விளம்பரம்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 169-லே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 13-10-1997 தேதியில், தற்போது எந்தவித அரசுப் பணிகளுக்கும் நியமன முறையில் செயல்படுவதைத் தவிர்க்க வேண்டி அரசு முடிவெடுத்திருக்கிற காரணத்தால் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம்.

**திரு. ச. அழகிரி:** அதன்பிறகுதான், இந்த நாமினேஷனெல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். அதற்காகத் தனி அரசாணை போட்டிருக்கிறார்கள். அரசாணை போடாமல் கொடுக்கவில்லை. அரசாணை போட்டது சரியா, இல்லையா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதைத்தான் நாங்கள் தவறு என்று சொல்லுகிறோம். அதாவது அதற்கு முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இதே தவறுகள்தான் நடைபெற்றன. தேவைப்படுகிறபோதெல்லாம் ஒரு அரசாணையைப் போட்டு அதன் மூலமாக நீங்கள் நாமினேஷன் வேலை தருவது என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ஆட்சி இந்த ஆட்சி என்று நீங்கள் பேசுவது முறையல்ல. நான் எனக்குத் தெரிந்த விளக்கத்தை...

**திரு. ச. அழகிரி:** நாமினேஷன் வேலை கொடுக்கக்கூடாது என்று சொன்ன பிறகு, நீங்கள் நாமினேஷன் வேலை கொடுப்பதற்காகவே நீங்கள் ஓர் அரசாணையைப் போட்டிருக்கிறீர்கள் என்பது குற்றச்சாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது குற்றச்சாட்டு இல்லை. நாமினேஷன் அடிப்படையிலே வேலை செய்ததை, தவறு என்றும், இதைச் செய்யக் கூடாது என்றும் சொல்லாமல், இதிலே அனைவரும் பலன் அடைந்திருக்கிறோம்.



**திரு. ச. அழகிரி:** 13-10-1997-லே ஒரு இலட்சம் ரூபாய் வரை நாமினேஷன் முறையிலே செய்யலாம் என்று ஒரு G.O. போட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பே, இந்த G.O. போடுவதற்கு முன்பே, (குறுக்கீடு) இந்த அரசாணை வருவதற்கு முன்பே, 11-9-1996-லேயும், 19-2-1997-லேயும் ஒரு பெரிய தொகையை நாமினேஷன் முறையில் கொடுத்திருக்கிறார்கள். அது தவறு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கொஞ்சம் படித்துப் பாருங்கள். நான் சொல்கிறேன், அதாவது பொதுத் துறையிலேயிருந்த துணைச் செயலாளரின் கடிதத்தை, எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் கடிதத்தை வைத்திருந்தார்கள். அது Chepauk Guest House சம்பந்தப்பட்டது. அதற்கு ஒரு தனி G.O. போட்டுத்தான் அந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அந்த G.O. நம்பரை கோட் பண்ணித்தான் அவர் சொல்லியிருக்கிறார். அதை நன்றாகப் பாருங்கள்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இனிமேல் இதிலே வந்து விவாதத்தை அனுமதிக்கமாட்டேன். இதுதான் என்னுடைய தீர்ப்பு...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நீங்கள் இதை அனுமதித்தாக வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இனிமேல் விவாதத்தை அனுமதிக்க முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது, உங்கள் மேலே நம்பிக்கை இல்லை என்று சொல்லக்கூடிய நிலை வந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என் மேலே குற்றச்சாட்டை வையுங்கள். எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. நீங்கள் தாராளமாகச் சொல்லலாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது என் வீட்டுக்காக 11 இலட்சம் ரூபாய் செலவு என்றும், ஏதோ நானே நாமினேஷன் கொடுத்தது மாதிரியும் ஒரு வாதத்தைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) 11 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்குமா அந்த வீட்டிற்கு? அதை நீங்கள் முதலிலே விசாரிக்க வேண்டும். இதுவெல்லாம், ஏதோ நான் நாமினேஷன் கொடுத்தது மாதிரியும் (குறுக்கீடுகள்) ஒரேயொரு சுவர் எழுப்பியிருக்கிறார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால்...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் ஏதோ நாமினேஷன் கொடுத்தது மாதிரியும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாமினேஷன் கொடுக்கிறது ....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தயவுசெய்து ஒரு குற்றச்சாட்டை, நம்முடைய சபாநாயகர் அவர்கள் என்மேலே ஒரு களங்கம் வருவதுமாதிரி ஒரு சூழ்நிலையை இப்போது உருவாக்கிவிட்டீர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நயமாக, நான் இன்னும் நயமாக ஒரு முறைக்குப் பலமுறை சொல்கிறேன்,

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது, இதிலே முழுக்க, முழுக்க இந்த நாமினேஷன் ஒர்க் இன்னின்ன இடங்களுக்குக் கொடுக்கலாம் என்று G.O. சரியாக இருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. அதை மீறி, இரண்டு இலட்சம் ரூபாய், 1.50 இலட்சம் ரூபாய்க்கெல்லாம் வேலை நடந்திருக்கிறது. ஒரு டிவிஷனிலே மட்டும் 400-க்கும் மேற்பட்ட வேலைகள், இங்கேயே 3 டிவிஷன்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் வேறு டிவிஷன்களெல்லாம் இருக்கின்றன. ஆகவே, அதற்கொரு நீதி விசாரணையை வைத்தால்தான் சரியாக வரும் என்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். உங்களுக்கு ஒரு களங்கம் வந்து விடக் கூடாது, உங்களுக்குக் கெட்ட பெயர் வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான். நான் முதலிலேயே சொன்னேன், நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். இப்போதாவது ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிச்சயமாக வைக்க மாட்டேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இனிமேல் discussion-க்கு allow பண்ண முடியாது. அழகிரி, தயவுசெய்து மன்னியுங்கள். உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் எதிர்கட்சித் தலைவர் சொன்னது மாதிரி நீங்கள் வேறு ஏதாவது வழியிலே செய்யுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் இதிலே இன்னொரு discussion-ஐ allow பண்ணமுடியாது.



**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமினேஷன் வேலைகளிலே 25 இலட்சம் ரூபாய்க்கு மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இது நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நியாயம், அநியாயம் எல்லாம் இல்லை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் என்ற முறையில் சொல்கிறேன். இந்த அவையில் தாங்கள் தீர்ப்பு சொன்னதற்குப் பின்னர் யார் வேண்டுமானாலும் தங்கள் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கலாம் என்றாலும், மாறாக தீர்ப்பைப்பற்றி மேலும் விவாதிக்க இந்த அவையில் அனுமதிக்கக்கூடாது என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அது அவையின் உரிமை என்ற முறையில் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்...

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் சொல்வது மாதிரி என்றால் நீங்கள் தீர்ப்புச் சொல்வதற்கு முன்னாலேயே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்கு ஒரு கருத்து....

**திரு. ச. அழகிரி:** இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொன்னதைக் கேட்டேன். நான் விளக்கம்தான் சொல்கிறேன், உங்களுக்கு (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன், அவை முன்னவர் சொன்னதை விட்டு விடுங்கள்.

பிற்பகல் 2-15

**திரு. ச. அழகிரி:** அவை முன்னவர் சொல்கிற மாதிரி நடக்க வேண்டும் என்றால் நீங்கள் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னாலேயே விவாதிக்க வாய்ப்பளித்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பை விவாதிக்கவே கூடாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய தலைவர் ஒரு குற்றச்சாட்டுப்

பிரச்சினையை இந்த அவையில் விவாதிப்பதாக இருந்தால் prima facie இருப்பதாக அவைத் தலைவர் அவர்கள் கருதுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால்தான் அனுமதிக்கலாம். தாங்கள் இப்போது தீர்ப்பு சொன்னதிலேகூட prima facie இருப்பதுபோலக் கருதிக்கொண்டு தங்களிடத்திலே தரப்பட்ட அந்தப் புகார் குறித்து, தாங்கள் முழு அளவுக்கு விசாரணை நடத்தி, உங்களுடைய அறிவுக்கு எட்டிய வரையில், உங்களுடைய புத்திக்குப் பட்ட வரையில் முழு அளவுக்கு விசாரணை நடத்தி, இந்த அவைக்கு நியாயம் வழங்குவதற்காகத் தெரிவித்திருக்கிறீர்கள். prima facie இருப்பதாக நிரூபிக்கப்படாத, ஏற்றுகொள்ளப்படாத நிலையில் தொடர்ந்து அதுகுறித்து விவாதிப்பதை இந்த அவை அனுமதிக்கக்கூடாது. அதன்மூலம் அவையினுடைய உரிமையை மீறுவதற்குத் தாங்கள் இடம் தரக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஒரே ஒரு request. G.O. எல்லாம் படித்துப் பார்த்து விட்டேன். G.O.-வில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் யாருக்கும் contract கொடுக்கக்கூடாது. அதில் 1½ இலட்சம் ரூபாய் வரையில் எடுத்திருக்கிறார்கள் என்று நான் prove பண்ணியிருக்கிறேன். அதன் பிறகு நீங்கள் சொன்ன வேலைகளைத் தவிர மற்ற வேலைகளையும் எடுத்திருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லியிருக்கிறேன். அதை எல்லாம் நீங்கள் விட்டுவிட்டதால்தான் நான் உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்ற வார்த்தையைச் சொல்ல வேண்டிய ஒரு கட்டாய நிலை எனக்கு ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாக மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுக்குப் பதில் சொல்லி, இதற்கு மேல் யாரையும் பேசவிடமாட்டேன். நான் ஏற்கெனவே சொன்னேன். பொதுப் பணித் துறை அமைச்சருக்கு ஒரு பினாமி என்பதுதான் ஒரு முக்கியமான குற்றச்சாட்டு. ஆனால், சேப்பாக்கத்தில் இருக்கிற அரசினர் விருந்தினர் இல்லத்திலே 25 இலட்சம் ரூபாய்க்கு வேலைகளை நியமனம் மூலமாகக் கொடுக்கலாம் என்ற உத்தரவு அதிலே இருக்கிறது. இது கொள்கைக்கு விரோதமாகக் கொடுக்கப்பட்டதா இல்லையா என்பது நீங்கள் விவாதிக்கக்கூடிய பொருள்.



**திரு. ச. அழகிரி:** அதுதான் எங்களுக்கு முக்கியம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் சொல்லி முடித்து விடுகிறேன். நீங்கள் பேசக்கூடாது. நான் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் பேசக்கூடாது. அதற்கு ஒரு G.O. இல்லாமல் அவர் சொல்லியிருந்தார் என்றால் இது நிச்சயம் தவறு. எப்படி நீங்கள் G.O. pass பண்ணலாம் என்று நீங்கள் கேட்பது, அது வேறு விஷயம். அவசர முக்கியத்துவம் கருதி State Guest House-ல் அமைச்சர்கள் தங்கி, வீடுகள் இல்லாத சூழ்நிலையில் 25 இலட்சம் ரூபாய்க்கு அதுவும் நீங்கள் அந்த break-up figures-ஐ பார்த்தீர்களென்றால், அப்போது அந்த Unemployed Engineers Society-க்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 10 பேரோ, 12 பேரோ அந்த வேலையைப் பார்த்திருக்கிறார்கள். அதில் 1 இலட்சம் ரூபாய்க்கு இந்த சுப்பாராவ் ஒரு வேலையைப் பார்த்திருக்கிறார். (குறுக்கீடு) நான் இனிமேல் discussion-ஐ allow பண்ண முடியாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு point of order-ஐ எழுப்புகிறேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் தீர்ப்பு கொடுங்கள். அது வேறு. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் எல்லாம் உட்காருங்கள்.

## 8. எதிர்க்கட்சித் தலைவர் மீது முதலமைச்சர் பேரவைத் தலைவரிடம் கொடுத்த குற்றச்சாட்டு பற்றி தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்றை என்னுடைய பார்வைக்கு வைத்தார்கள். அதிலே பிரச்சினை என்ன என்பதை நான் முதலிலேயே சொல்லிவிடுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் தொகுதி பக்கத்திலே இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு முக்கியமான பொதுப்பணித் துறை வேலை. வேலையின் பெயர் பார்த்திபனூர் ரெகுலேட்டரிலிருந்து பிரியும் இடதுபுறக் கால்வாய் சீரமைக்கும் பணி. அது ஒரு வேலை. இன்னொன்று வலதுபுறக் கால்வாய் சீரமைக்கும் பணி. இந்த வேலையின் மதிப்பு ஒரு கோடியே 53 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய். இதிலே முறையாக டெண்டர்கள் கோரப்பட்டன. நான்கு பேர் டெண்டர் கொடுத்தார்கள். அதிலே தனுஷ்கோடி என்பவர் 1 கோடியே 33 இலட்சத்திற்கு டெண்டர் கொடுத்திருக்கிறார். சேகர்

என்பவர் 1 கோடியே 58 இலட்சத்திற்கு டெண்டர் கொடுத்திருக்கிறார். E.C.C.I நிறுவனம் 2 கோடியே 3 இலட்சத்திற்கு டெண்டர் கொடுத்திருக்கிறது. எ.என். சுப்பிரமணி என்பவர் 2 கோடியே 29 இலட்சத்திற்கு டெண்டர் கொடுத்திருக்கிறார். இந்த டெண்டர் கமிட்டி 13-11-1997 அன்று கூடிற்று. இதிலே மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நேரத்திலே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தார்.

பிற்பகல் 2-20

"1 கோடி 33 இலட்சம் ரூபாய்க்கு கோரியுள்ள திரு. தனுஷ்கோடி அவர்கள் நல்ல ஒப்பந்தக்காரர் அல்ல. அவருக்கு அதைக் கொடுத்தால் வேலை ஒழுங்காக நடக்காது. அவருக்குத் தகுதி இல்லை. ஆகவே, E.C.C.I. நிறுவனம் 2 கோடி 3 இலட்சம் ரூபாய் கோரியிருந்தாலும் அவர்களுக்குத்தான் அந்த வேலையைக் கொடுக்க வேண்டும். காரணம் அவர்கள் புகழ் பெற்ற நிறுவனம். சென்னையிலே Anna Fly-over கட்டிய நிறுவனம்; இராமநாதபுரம் நகரத்திலே ஒரு கலையரங்கம்—மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்கள்— 1 கோடி ரூபாய் செலவிலே அதை அவர்கள் கட்டினார்கள். கிழக்கரையிலே சாலை போடுவதற்கு 75 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கே கடன் கொடுத்தார்கள்" என்று சொல்லி அவரிடம் கேட்டார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டார் என்பதால் முதலமைச்சருக்கு ஒரு கடிதம் வைத்தார்கள். அதிலே ஒன்றும் ஒளிவு மறைவாக அவர் சொல்லவில்லை, டெண்டருக்குக் கீழே திரு. தனுஷ்கோடி என்பவர் 13 பெர்சன்ட் குறைத்து— டெண்டரின் மதிப்பு 1 கோடி 53 இலட்சம் ரூபாய்— 1 கோடி 33 இலட்சத்திற்குக் கேட்டிருக்கிறார். இந்த E.C.C.I. நிறுவனம் 2 கோடி 3 இலட்சத்திற்குக் கேட்டிருக்கிறது.. முதலமைச்சருக்கே ஒரு கடிதம் கொடுக்கின்றார். "நான் போய் பொதுப்பணித் துறை அமைச்சரிடம் இதைப்பற்றி பேசினேன். இது எங்கள், விவசாயத்திற்கு உயிர்நாடியான வாய்க்கால். ஆகவே, இந்த தனுஷ்கோடி என்பவருக்குக் கொடுக்காமல், இந்த E.C.C.I. நிறுவனம் டெண்டருக்கு மேல் 32 பெர்சன்ட் அதிகம் கேட்டிருந்தாலும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். மேற்படி முறையீட்டையும் மீறி தனுஷ்கோடி அரசு மதிப்பீட்டிற்கு 13 சதவீதம் குறைவாகப் போட்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக, எங்களுக்கு உயிர்நாடியான இந்த வாய்க்கால் வேலையை தமிழக அரசின் பொதுப்பணித் துறை அவர்களுக்கு வழங்கியுள்ளது. உலக வங்கி நிதி என்பது தமிழக மக்கள் மீது விழுகின்ற கடன் தொகையாகும்.



அந்தத் தொகையைப் பெற்று செய்கின்ற வேலையால் மக்களுக்கு பயன் இல்லையென்றால், பெற்ற கடனை எப்படி திரும்பச் செலுத்த முடியும்? E.C.C.I. நிறுவனம் தங்களுடைய டெண்டரில் மண் வேலைக்கு அரசு நிர்ணயித்த தொகை கட்டுப்படியாகாத நிலையில்— மண் வேலையில் மட்டுமே அதிக தொகை போடப்பட்டுள்ளது— இதர வேலைகளுக்கு, கட்டுமான வேலைகளுக்கு அரசு நிர்ணயித்த தொகைக்குக் குறைவாகப் போட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக அதிகம் 32 பெர்சன்ட் உலக வங்கி வேலைக்குக் குறைவு, அதிகம் என்பது சம்பந்தப்பட்ட வேலையைப் பொறுத்தது. தமிழகத்தில் முதல்தரமான ஒப்பந்தக்காரரான E.C.C.I. நிறுவனத்தை எந்தவிதமான உள்நோக்கமும் இன்றி சிபாரிசு செய்கிறேன்" என்று எழுதியுள்ளார்.

அதிலே அவர் எதையும் மறைக்கவில்லை. அது உண்மை. ஆனால், 1 கோடி 50 இலட்சம் ரூபாய் வேலை இது. 70 இலட்சம் ரூபாய் அரசாங்கம் அதிகமாகச் செலவு பண்ணலாம் என்று ஒரு பரிந்துரை கொடுத்திருக்கிறார்கள். இதுதான் இதிலே பிரச்சினை. நான் நூற்றுக்கு நூறு அவர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். அவர் எந்த உள்நோக்கத்தோடும் சொல்லவில்லை. அந்த வேலை நல்லமுறையிலே நடக்க வேண்டும் என்று சொன்னார். அந்தக் கடிதத்தைக் கொடுத்தார். ஆனால், இந்த தனுஷ்கோடி என்பவருக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று இவர் சொல்வது, அடிப்படையிலேயே நியாயமாக இல்லை. காரணம் என்னவென்றால், இதிலே ஒப்பந்தக்காரர்களுக்கு என்னென்ன தகுதி இருக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட 15, 20 தகுதிகளை உலக வங்கியிலே சொல்லி, அந்தத் தகுதிகள் உள்ளவர்களிடமிருந்துதான் இங்கே டெண்டர் வாங்கலாம் என்று கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இந்த தனுஷ்கோடி உலக வங்கியின் கணக்கில் தகுதியானவர் என்றுதான் அவருக்கு Tender Form-மே கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, எனக்கு இருக்கின்ற பிரச்சினை எல்லாம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பொதுநலன் கருதி இந்தக் கடிதத்தைக் கொடுத்ததிலேகூட வருத்தம் இல்லை. ஆனால், அந்தக் கடிதத்தை, என்னுடைய கருத்திலே, வேறு விதமாகக் கொடுத்திருக்க வேண்டும். இந்த தனுஷ்கோடிக்கு கொடுப்பதனால் எங்களுக்கு எந்த இலாபமும் கிடையாது, ஆகவே, இந்த டெண்டரை இப்போது இரத்து செய்துவிட்டு மீண்டும் டெண்டர் கேளுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அல்லது இந்த E.C.C.I. நிறுவனம் யார் என்று எல்லோருக்கும் தெரியும்; முதலமைச்சருக்கும் தெரியும்; பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். அவர்கள் பல தர்ம காரியங்களைச்

செய்கின்றனர். பிரமாதமாகச் செய்கின்றனர். ஆகவே, இந்த தனுஷ்கோடி கேட்ட அளவிற்கு அவர்களை குறைத்துக் கேட்கச் சொல்கின்றேன்; அப்பொழுதாவது நீங்கள் அதைப் பரிசீலனை செய்யலாம் என்று கேட்டிருக்கலாம். அப்படியும் கேட்கவில்லை. 1½ கோடி ரூபாய் வேலைக்கு 70 இலட்சம் ரூபாய் அதிகம் கொடுத்தால்கூட பரவாயில்லை என்று ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 2-25

நான் மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) தீர்ப்புச் சொல்லும்போது யாரும் எழுந்து நிற்கக்கூடாது. (குறுக்கீடு) திரு. அப்பாவு, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொல்வது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. இந்தப் பிரச்சினையில் நான் தீர்ப்புச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்வது அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நான் கேட்க முடியாது. நான் இந்தப் பிரச்சினையில் தீர்ப்புச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். நீங்கள் வேறு ஏதோ பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் கேட்க முடியாது. நீங்கள் எதைச் சொன்னாலும் நான் கேட்க முடியாது. நீங்கள் எதைக் கேட்டாலும் நான் கொடுக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் பேசினால் நான் நடவடிக்கை எடுப்பேன். நான் இதைப்பற்றி தீர்ப்புச் சொல்கிறேன். நீங்கள் இடையிலே பேசக்கூடாது. (குறுக்கீடு) எனக்கு இந்த முன்னுதாரணம் எல்லாம் வேண்டாம். யாருக்கும் நான் அனுமதி தர முடியாது. நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது. நீங்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. நீங்கள் பேசியது அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நான் உங்களை வெளியேற்றி உத்தரவு போடவேண்டிய சூழ்நிலை வரும். நான் பேசும்போது நீங்கள் குறுக்கே எழுந்து நிற்கக்கூடாது.

**THIRU J. HEMACHANDRAN:** I am on a point of order. Hon, Speaker Sir, Hon. Speaker has said, இந்த லெட்டரிலே எதிர்க்கட்சித் தலைவர் எழுதியதில் எந்த உள்நோக்கமும் இல்லையென்று அவர் சொல்லியிருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று நீங்களே சொன்னதற்குப் பிறகு. What is the relevancy of discussing this letter further?

**HON. SPEAKER:** There is no relevancy. That is what I am saying. My point is I hold that he has no other ulterior motive. I accept straightaway. All I say is....



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** உள்நோக்கம் இல்லை என்று நீங்கள் சொன்ன பிறகு, ஒன்றரை கோடி ரூபாய் டெண்டரை 2 கோடி ரூபாய்க்குக் கேட்டார்கள், நான் அவருக்கு கொடுக்கச் சொன்னேன் என்ற ஒரு வார்த்தையைச் சொன்னதால்தான், அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் கேட்டார்கள்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையில்லை. உங்களுடைய கட்சி உறுப்பினர் எழுந்து நின்று சொன்னாரே, அதைத்தான் நான் சொன்னேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதாவது, அதற்கு ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் சொல்லி விடுகிறேன். இந்த தனுஷ்கோடி எப்படி ஒரு தகுதியில்லாத காண்ட்ராக்டர் என்று... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால் (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள், நான் சொல்கிறேன். இது தமிழ்நாடு அரசு எடுக்கின்ற முடிவு இல்லை. உலக வங்கி எடுக்கின்ற முடிவு. தனுஷ்கோடிக்குத் தகுதியில்லை என்றால் உலக வங்கி ஏற்றுக்கொள்ளாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தனுஷ்கோடி அந்த வேலையை எடுப்பதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லாதவர் என்று E.C.C.I. நிறுவனமே நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் E.C.C.I. நிறுவனம் கடிதம் எழுதுவதற்கு என்ன இருக்கிறது? அவர்களும் போட்டி போட்டு டெண்டர் கேட்டார்கள். அவர்கள் அதைத்தான் செய்வார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்த E.C.C.I. என்பவர்கள் யார்? ரகுமான் என்பவருடைய கம்பெனிதான் அது. அவர் பெரிய முதலாளி. கீழக்கரையில் உள்ள முதலாளி ரகுமான். அவர் பல தர்ம காரியங்கள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறார். அது வேறு விஷயம். ஆனால் அவர்கள் 2 கோடி ரூபாய், ஒன்றரை கோடி ரூபாய்க்கெல்லாம் வேலைகள் எடுக்கமாட்டார்கள். அவர் எடுத்தால் 10 கோடி, 20 கோடி, 30 கோடி என்றுதான் வேலைகளை எடுப்பார். அவர் அவருக்காக இந்த டெண்டரைக் கேட்கவில்லை. அவர் கேட்டதே, அவரிடம் ஐயப்பன்

என்ற ஒரு பினாமி இருக்கிறார். அந்த பினாமிக்குக் கொடுப்பதற்காகத்தான் இந்த வேலைகள் எல்லாம் நடந்தன. ஆனால், அது நடக்காமல் போய்விட்டது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்போதுகூட வந்து பாருங்கள். அந்த தனுஷ்கோடி எடுத்திருக்கிற வேலையை வேண்டுமானால் வந்து பாருங்கள். ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்களே அந்த ரோட்டில் மூன்று முறை போயிருக்கிறார்கள். அந்த வேலை எப்படி நடந்திருக்கிறது என்று பாருங்கள். ஏனென்றால் இதையெல்லாம் ரிசர்ச் பண்ண வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறல்ல. ஏனென்றால், பார்த்திபனூர் ரெகுலேட்டர் என்பது இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய ஒரு உயிர்நாடியான கால்வாய். அந்தக் கால்வாயில் இப்போது செய்திருக்கிற வேலை, பாதி அளவு தரம்கூட கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதில் எந்த உள்நோக்கமும் இல்லை என்று நான் சொன்ன பிறகும், நீங்கள் பேசிக் கொண்டேயிருப்பது முறையில்லை. உள்நோக்கம் கிடையாது என்று நான் சொன்னேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதோடு விட்டிருந்தால் பரவாயில்லை. 2 கோடி ரூபாய்க்குக் கொடுக்கச் சொன்னேன் என்று சொல்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவரம் இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், (குறுக்கீடு) அதை எப்படி நான் அனுமதிக்க முடியும்? நான் தீர்ப்பை முடிக்க வேண்டாமா? (குறுக்கீடு) நான் எங்கே போய் முடிக்கப் போகிறேன் என்று தெரியுமா? நீங்கள் தோழமையாக இருக்கும் நேரத்தில், மாண்புமிகு முதல்வரிடமோ, பொதுப்பணித் துறை அமைச்சரிடமோ, உரிமையோடு, இதில் அதிகம் 70 இலட்சம் ஆனாலும்கூட பரவாயில்லை, கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். நல்லவேளையாக அது கொடுக்கப் படவில்லை. ஏதோ நீங்கள் சொன்னதற்காக அந்தப் பரிந்துரையை ஏற்று இருந்தால் ஒன்றரை கோடி ரூபாய்க்கான கடைசி டெண்டரை விட்டுவிட்டு 70 இலட்சம் ரூபாய் அதிகம் கொடுத்து அனுமதித்திருந்தால், ஒரு பெரிய ஊழல் இந்த நாட்டிலே நடந்திருக்கிறது என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மீதே ஒரு குற்றச்சாட்டு வந்திருக்கும்.



பிற்பகல் 2-30

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவரவர்களே, E.C.C.I-னுடைய வேலையின் தரத்தைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தரத்தை எல்லாம் நான் பார்க்க முடியாது. இது என் வேலையா? நான் இன்ஜினியரா? கொத்தனாரா? World Bank பார்த்து கொடுத்த வேலை இது.

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே, Point of order......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் உட்காரவில்லை என்றால், நான் நிச்சயமாக வெளியேற்றுவேன். உங்களிடமிருந்து எந்த விளக்கமும் தேவையில்லை. (குறுக்கீடு) நான் தீர்ப்பு சொல்லும்போது எந்த பாயின்ட் ஆஃப் ஆர்டரும் கிடையாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் சொல்வது நியாயம். அதே நேரத்திலே 7·கோடி ரூபாய்க்கு செய்ய வேண்டிய வேலையை 8 கோடி ரூபாய்க்கு தர வேண்டுமென்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு தனித் தீர்மானம் கொண்டு வாருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் சொல்வது அவைக் குறிப்பிலே ஏறாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**டாக்டர் தே. குமாரதாஸ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே, நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், யார் புனிதமானவர், யார் யோக்கியன் என்று தீர்ப்பு சொல்கிற இடத்தில் நான் இல்லை. நீங்கள் கொடுத்த குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறதா? இல்லையா?

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு? அவரைக் கேட்டு அவரிடம் பேசிவிட்டேன். உங்களுக்கு என்ன தெரியும், நான் பேசவில்லையென்று. (குறுக்கீடு) நான் அவரிடம் பேசவில்லை என்று நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே சபாநாயகர் தீர்ப்பைச் சொல்கிறபோது குறுக்கிட்டுப் பேச யாரையும் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வேண்டுமென்றே குறுக்கிட்டுப் பேசுவார்களேயானால் அவர்களுடைய நோக்கம் வேறு. அதற்கு, இந்த அவை அனுமதிக்கக்கூடாது. அதற்கான தீர்மானத்தை நான் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்படும்.

**திரு. மு. அப்பாவு:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. நான் தீர்ப்பு சொல்லும்போது எந்த பாயின்ட் ஆஃப் ஆர்டரும் கிடையாது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தீர்ப்பிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது; விளக்கம் கிடையாது; கேட்க உரிமை கிடையாது. ஒருவேளை தீர்ப்பு பிடிக்காவிட்டால், அதற்காக கண்டனம்கூட வெளியிலே போய் தெரிவிக்கலாமே தவிர, இந்த அவையிலே தீர்ப்பை மறுத்துப் பேச யாருக்கும் உரிமை கிடையாது. இன்னும் சொல்லப்போனால், தீர்ப்பு என்ன என்று சொல்வதற்கு முன்னால் குறுக்கிட்டு தீர்ப்பு வழங்கவிடாமல் தடுப்பதை அனுமதிக்கக்கூடாது. இல்லையானால் அதற்கான தீர்மானம் கொண்டு வர வேண்டிய அவசியத்தில் நான் இருக்கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** **

**திரு. மு. அப்பாவு:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொல்வதைக் கேட்க மாட்டேன். பாயின்ட் ஆஃப் ஆர்டர் இதிலே கிடையாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நான் கேட்க முடியாது; உட்காருங்கள். தீர்ப்பு சொல்கிறபோது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் பேசி விட்டீர்கள். உட்காருங்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நான் கேட்க முடியாது. நீங்கள் பேசுவது சம்பந்தம் இல்லாதது. நீங்கள் தொடர்ந்து பேசினால் உங்களை நான் அவையிலிருந்து வெளியேற்றுவேன். (குறுக்கீடு) அவையை விட்டு வெளியேற்றுவேன். அவையை விட்டு வெளியேற்றுவேன். இதுதான் கடைசி முறை. நான் அனுமதி தர முடியாது.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் என்னை ஜனநாயகவாதியாகவே கருதவில்லை. நீங்கள் இன்று பேசுவதைப் பார்த்தால் என்னை நீங்கள் ஜனநாயகவாதியாகவே கருதவில்லை. (குறுக்கீடு) எந்த உள்நோக்கமும் கிடையாது என்று நான் பேசிய பிறகு, நீங்கள் திரும்ப பேசிக் கொண்டு இருப்பதில் நியாயமே இல்லை.

**திரு. மு. அப்பாவு:** நாங்கள் பேசுவதற்கு அனுமதி தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்காக உங்களுடைய கருத்துக்களை கேட்க வேண்டும். நான் தீர்ப்பு சொல்கிறபோது கருத்தா கேட்பது? (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது; அனுமதி கிடையாது. நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நில்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் குற்றச்சாட்டை திரும்ப கொண்டு வாருங்கள். நான் இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

(திரு. சி. ஞானசேகரன், திரு. ஏ.வி.ஏ. நாசர், டாக்டர் கிருஷ்ணசாமி, திரு. சி. வேலாயுதன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

நீங்கள் யார் பேசுவதையும் நான் கேட்க முடியாது. அனுமதி கிடையாது. (Interruption) No, I am not allowing any point of order.

இதுதான் இரண்டாவது தீர்ப்பு.

பிற்பகல் 2-35

## 9. மாண்புமிகு முதலமைச்சர் மீது திரு. பி.ஆர். சுந்தரம் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்றாவது தீர்ப்பைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவையில் பேசியபோது, இதிலே உரிமைப் பிரச்சினை எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டேன். அதை மீண்டும் வலியுறுத்தி மாண்புமிகு முதலமைச்சர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மீது எந்த உரிமை மீறலும் இல்லை என்று தீர்ப்பு கூறுகின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (17-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

78. மானியக் கோரிக்கை எண் 1 - நிலவரி, மானியக் கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் மானியக் கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

79. வருவாய்த் துறையின் சாதனை அறிக்கை, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

80. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்தி மூன்றாவது அறிக்கை. (1999-2000).

81. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (1999-2000).

82. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்தைந்தாவது அறிக்கை. (1999-2000).

83. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்தாறாவது அறிக்கை. (1999-2000).

84. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (1999-2000).



## இணைப்பு

**(43 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

### வருவாய்த் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

### கோரிக்கை எண் 1-நில வருவாய்த் துறை

### கோரிக்கை எண் 40-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

### கோரிக்கை எண் 45-இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**1. முன்னுரை**

வருவாய்த் துறை அனைத்து நிர்வாகத் துறைகளின் தாயாக விளங்குகின்றது என்று சொல்லலாம். மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அநேகமாக வருவாய்த் துறை தொடர்புடையதாக இருக்கிறது. இத்துறையின் பணி எங்கும் பரவி, நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கி வருகிறது. கட்டுக்கோப்பான சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வருவாய்த் துறையின் பங்கு மிகப் பெரியதாகும்.

(2) நிலம் தொடர்புடைய அனைத்து செயல்களுக்கும் வருவாய்த் துறையே பொறுப்பாகும். அனைத்து நில மாற்றங்கள் தொடர்பானதும் இதில் அடங்கும். நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், நில வருவாய் ஆவணங்களைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், நிலப் பட்டாக்கள் வழங்குதல், நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி, வேளாண்மை வருமான வரி ஆகியவற்றை நிர்ணயிப்பதுடன், அவற்றை வசூல் செய்யும் பணியும் வருவாய்த் துறையின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

(3) இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இன்னல்களைத் துடைப்பதில் முன்னின்று உடனடியாகச் செயல்படுவதும் வருவாய்த் துறையே ஆகும். புயல் வெள்ள காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுடைய துன்பங்களைப் போக்கி, பாதுகாப்பான இடத்தில், குடியமர்த்தி, அவர்களுடைய உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றி, உணவு, உடை மற்றும் உதவிப் பணம் ஆகிய நிவாரணங்களை தாமதமின்றி வழங்குவதும் வருவாய்த் துறையே ஆகும்.

(4) சமூகத்திற்கும், மக்களுக்கும் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு ஏதுவாக, எப்பொழுது, எங்கெங்கு அவசியமாகிறதோ அப்பொழுது அங்கெல்லாம், மாவட்டங்கள், வட்டங்கள் முதலிய வருவாய் அமைப்புகளைச் சீரமைக்க அரசு முனைந்துள்ளது. பொறுப்புள்ளதும், திறமைமிக்கதுமான நிர்வாகத்தை கீழ்மட்ட அளவில் உருவாக்குவதற்கு ஏதுவாக, மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் பரந்து விரிந்த பாரம்பரியமிக்க அலுவலர்களைக் கொண்ட வருவாய் நிர்வாகத்தின் மேற்குறிப்பிட்ட பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்களின் துணையுடன் செம்மையாக நிறைவேற்றப்படுகின்றன.

## 2. நிலவரி

ஒரு நிலத்தின் இனம், வளம், தரம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். உள்ளூர் வரி, உள்ளூர் மேல்வரி, கூடுதல் வரி, கூடுதல் தண்ணீர் வரி ஆகியவை அடிப்படை நிலவரியின் மீது விதிக்கப்படுவதுடன் நிலவரியை உள்ளடக்கியதாகும். 1-7-1967 முதல் அனைத்து புன்செய் நிலங்களுக்கும் விதிக்கப்படும் அடிப்படைத் தீர்வை இரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 1-7-1971 முதல் 5 ஏக்கர் மற்றும் அதற்குக் குறைவாக நன்செய் நிலங்கள் உள்ள தனி நபருக்கு மொத்த நன்செய் தீர்வையில் புன்செய் நிலத்தீர்வை அளவுக்கு நிலவரி இரத்து செய்யப்பட்டுள்ளது.

(2) நிலவரி வசூல் சுமுகமான முறையில் செய்யப்படுகிறது. நிலவரி வசூல் செய்ய ஜப்தி நடவடிக்கை மேற்கொள்வது 1989 முதல் கைவிடப்பட்டது. இருப்பினும், 5 ஏக்கருக்கு மேல் புன்செய் நிலமோ அல்லது 2.5 ஏக்கருக்கு மேல் நன்செய் நிலமோ வைத்திருக்கும் பட்டாதாரர்களிடம், அவர்கள் நிலத்தில் 50 விழுக்காட்டுக்கு மேல் பயிர் விளைச்சல் இருந்தால், ஒரு பசலி ஆண்டுக்கான நிலுவை நிலவரித் தொகையையும் நடப்பு ஆண்டுக்கான நிலவரித் தொகையையும் வசூல் செய்ய டிசம்பர் 1994-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

(3) நிலவரி மற்றும் இதர தொகைகளை வசூல் செய்வதில், நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டு அளவை எய்தும் வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் பணியை பாராட்டும் வகையில், அவர்களின் பணிப்பதிவேடுகளில் சிறப்புக் குறிப்பு (Red entry)



பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், நிலவரி வசூலில் சாதனை புரிந்த வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நற்சான்றிதழ், பாராட்டுப் பத்திரம் போன்றவை அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகின்றன.

(4) நிலவரி தள்ளுபடி

**(i) பருவகால நிலவரி தள்ளுபடி:**

ஒரு விவசாயி தனக்கு நிலவரி தள்ளுபடி பெற விரும்பினால், எந்த நிலத்திற்கு தள்ளுபடி வழங்கப்படவேண்டும் என்பதைக் குறிப்பாக எழுத்து மூலமாக உரிய காலத்தில், சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். பின்னர், பயிராய்வு அலுவலரின் ஆய்வுக் குறிப்பின் அடிப்படையில் அதிகாரம் பெற்ற வருவாய் அலுவலரால் நிலவரி தள்ளுபடி அனுமதிக்கப்படும். பருவ கால தள்ளுபடியை பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேல் வரி மற்றும் கூடுதல் மேல்வரி தள்ளுபடி வழங்கப்படுவதில்லை.

**(ii) வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் நிலவரி வசூலிப்பதை நிறுத்தி வைத்தலும் தள்ளுபடி செய்தலும்.**

சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில், அதாவது பரவலான வறட்சி அல்லது பெருவாரியான நிலங்களில் பயிர் பாதிப்பு ஏற்படும்போது, நிலவரி தீர்வை நிறுத்திவைப்பு அல்லது தள்ளுபடி அரசால் அனுமதிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில் நிலவரி பாக்கித் தொகை மற்றும் அரசு கடன்கள் ஆகியவை வசூலிப்பது அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. பயிர் உற்பத்தி 50 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தால் நிலவரி பாக்கித் தொகை, உள்ளூர் மேல்வரி, உள்ளூர் கூடுதல் மேல் வரி மற்றும் அரசு கடன்கள் ஆகியவற்றை வசூலிப்பது ஆகியவை அடுத்து வரும் பசலிக்கு ஒத்தி வைக்கப்படும்.

## 3. வேளாண்மை வருமானவரி

தமிழ்நாட்டில் 1955ஆம் ஆண்டில் வேளாண்மை வருமான வரிச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு வரிவிதிக்கப்பட்டது. பின்னர், 1958-ஆம் ஆண்டில் மலைத்தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு செய்வதற்காகச் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

(2) சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும்முகத்தான், மலைத்தோட்டமல்லாத பயிர்களின் மீது வேளாண்மை வருமானவரி விதிப்பது 1-4-1992 முதல் கைவிடப்பட்டது. இரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய், பாக்கு, கிராம்பு மற்றும் மிளகு ஆகிய மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே தற்போது வேளாண்மை வருமானவரி விதிக்கப்படுகிறது. 1-4-1992 முதல் 8 ஏக்கரும் அதற்கு மேலும் நிலங்களை உடையவர்கள் மட்டுமே தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள். 8 சாதாரண ஏக்கர் முதல் 50 சாதாரண ஏக்கர் வரை இணக்கமுறை வரிவிதிப்பு அனுமதிக்கப்படுகிறது.

(3) மலைத்தோட்டப் பயிரல்லாத இனங்களின் வருமான வரி நிலுவையினை வசூலிக்கும் பணி 1-6-1992 முதல் வட்டாட்சியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுயவரிவிதிப்பு மற்றும் முன்னதாக வரி செலுத்தும் முறைக்கும், 1992-93 வரிவிதிப்பு ஆண்டு முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரி விலக்கிற்கான வருமான உச்சவரம்பு தற்பொழுது ரூ.28,000 ஆகும்.

## 4. நகர்ப்புற நிலவரி

அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்கள் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் வைத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1-7-1963-ல் சென்னை நகரில் மட்டும் அறிமுகம் செய்யப்பட்டது. பின்னர், மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும், சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

(2) பின்னர், இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் தேதி விரிவுபடுத்தப்பட்டது. கீழ்க்கண்ட நகராட்சிகளும், நகரியங்களும் 1-7-1991 முதல் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன.

### நகராட்சிகள்

மயிலாடுதுறை
காஞ்சிபுரம்
கடலூர்
வேலூர்
கும்பகோணம்
உடுமலைப்பேட்டை



விழுப்புரம்
புதுக்கோட்டை
ஈரோடு
பொள்ளாச்சி
தஞ்சாவூர்
திருப்பூர்
தூத்துக்குடி
பழனி
காரைக்குடி
இராஜபாளையம்
நாமக்கல்
உதகமண்டலம்
திண்டுக்கல்
கரூர்
நாகர்கோவில்

### நகரியங்கள்

கொடைக்கானல்
மேட்டூர்

(3) நகர்ப்புற நிலவரிச் சட்டம் அமலில் உள்ள எல்லா பகுதிகளுக்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்பட்டது.

வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:-

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்தும் | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | |
|---|---|---|---|
| 1. முதல் இரண்டு மனைகள் | வரியில்லை | 1. முதல் மூன்று மனைகள் | வரியில்லை |
| 2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5. இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

[2000 ஏப்ரல் 12

(4) பொதுமக்கள் நன்கு புரிந்து கொள்ளும் வண்ணம், நகர்ப்புற நிலவரி வரிவிதிப்புக் கொள்கை சீராகவும் எளிதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக தற்போதைய வரிவிதிப்பு முறையை மாற்றி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(5) நகர்ப்புற நிலவரி செலுத்துபவர்களின் பெயர்கள், நிலுவையாக உள்ள தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(6) இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ல் கீழ்க்கண்ட நிலங்கள் வரிவிதிப்பினின்றும் விலக்கு பெறுகின்றன:-

(1) மத்திய, மாநில அரசு நிலங்கள்;

(2) பொதுவழிபாட்டுக்கான நிலங்கள்;

(3) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்;

(4) மயான பூமி நிலங்கள்;

(5) சாலைகளாக பயன்படும் நிலங்கள்;

(6) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்;

(7) பொது பூங்காக்கள், நூலகங்கள், மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்;

(8) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்;

(7) விவசாயத்திற்குப் பயன்படும் நிலங்கள், நகர்ப்புற நிலவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படுகின்றன. தர்ம மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில், அந்நிறுவனங்களுக்கு அதிகமான சிரமம் இருப்பின் பிரிவு 27(1)-ன் கீழ் அரசு வரிவிலக்கு அளிக்கிறது.

(8) கீழ்க்கண்ட அமைப்புகளுக்கும் அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது.

(அ) சிறுதொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீதம் சலுகை;



2000 ஏப்ரல் 12]

(ஆ) சங்கீத நாடக சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை;

(இ) திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை;

(ஈ) குடிசைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழுச்சலுகை;

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தாவிட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் தள்ளுபடி தரப்படுகிறது.

(9) நகர்ப்புற நிலவரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாக தீர்வு செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும், அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளையே தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் தீர்ப்பாயமாக செயல்படுவார்.

5. நில நிர்வாகம்

அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும், வருவாய்த் துறையால் பராமரிக்கப்படுகின்றன. அரசு நிலங்கள் - ஒப்படை, நிலமாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை மூலம் தனியாருக்கும், அரசின் பல்வேறு துறைகள், அரசு சார்ந்த துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தற்போது அரசு வசம் உள்ள நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதால், அரசு வசம் உள்ள நிலங்களை வழங்குவது குறித்த ஒவ்வொரு செயற்குறிப்பும் அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

(அ) ஒப்படை

அரசு நிலங்கள் வீட்டுமனைகளாகவும், சாகுபடி செய்வதற்காகவும் என்று இரு வகைகளில் ஒப்படை செய்யப்படுகின்றன.

(i) வீட்டுமனை வழங்குதல்

உணவும், வீட்டு வசதியும் மக்களின் அடிப்படைத் தேவைகளாகும். சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ளவர்களை முன்னேற்றுவதற்காக சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கு இந்த அடிப்படை வசதிகளைத் தருவது இந்த அரசு ஏற்றுக்கொண்ட குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைய பல்வேறு திட்டங்களை அரசு

செயலாற்றி வருகிறது. ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது.

(2) வருவாய் நிலை ஆணை 21-இன் கீழ் வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு குறைவாக இருப்பின், அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. வீட்டுமனைகளை ஒப்படை செய்வதில் கீழ்க்கண்ட முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:-

(அ) எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் பிரதேச இராணுவப்படை உட்பட முப்படையில் பணியில் இருந்த போது உயிரிழந்தவர்கள் மற்றும் செயலிழந்தவர்களின் குடும்பங்கள்;

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்;

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்;

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்;

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்;

(ஊ) ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்;

(எ) நிலமற்ற ஏழைகள்;

பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு மனைவி அல்லது பயனாளியின் குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர் பெயரில் ஒப்படை செய்யப்படுகின்றது. ஒவ்வொரு ஒப்படைதாரரும் வீட்டுமனை ஒப்படை பெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்குள் குடிசை அல்லது வீடு கட்ட வேண்டும்; மற்றும் இரண்டு மரங்களை வளர்க்க வேண்டும். மேலும், ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டு வரை கோட்ட வருவாய் அலுவலரின் அனுமதியின்றி ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனையை விற்பனை, கொடை முதலானவை மூலம் வேறு எவருக்கும் உரிமை மாற்றம் செய்யக்கூடாது என்ற நிபந்தனைக்கு இந்த ஒப்படைகள் உட்பட்டதாகும்.

(3) நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி, கிராமங்களில் 3 சென்ட், நகராட்சிகளில் 1½ சென்ட், மாநகராட்சிகளில் 1 சென்ட் ஒப்படை செய்யப்படுகிறது.



(4) இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும், ஓர் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. 1998-99-இல் வீட்டுமனை ஒப்படை இலக்கு 60,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 2,27,414 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. 1999-2000-இல் வீட்டுமனை ஒப்படை இலக்கு 60,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. பிப்ரவரி 2000 வரை 1,58,012 வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(5) புறம்போக்கு நிலங்கள் பெரும்பாலும் ஏழைகளால் அதிக அளவில் நீண்டகாலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு உதவுவதற்காக, உயர்மட்டக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், 10 ஆண்டுகளுக்கு மேலாக, அரசுக்குத் தேவையில்லாத புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புப் பகுதிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று புலத்தணிக்கை செய்து, வீட்டுமனை ஒப்படைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சியர்களே வழங்கி அத்தகைய புறம்போக்கு பகுதிகளில் உள்ள ஆக்கிரமணங்களை முறைப்படுத்தலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.

(6) ஒப்படை நேர்வுகளை விரைவில் முடிவு செய்வதற்காக வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதி அதிகார வரம்பை அரசு அண்மையில் கீழ்க்கண்டபடி உயர்த்தியுள்ளது:-

| | அதிகாரம் படைத்த அலுவலர் | உயர்த்தப்பட்ட வரம்பு |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் | ரூ.10,000 |
| 2. | கோட்டாட்சியர் | ரூ.20,000 |
| 3. | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000 |
| 4. | மாவட்ட ஆட்சியர் | ரூ.2,00,000 |
| 5. | சிறப்பு ஆணையர் (ம) நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000 |
| 6. | அரசு | ரூ.2,50,000க்கு மேல் |

**(ii) விவசாய நிலம் ஒப்படை செய்தல்**

நமது பொருளாதாரத்தில் விவசாயம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. கிராமங்களிலுள்ள ஏழை மக்கள், பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும் அதைச் சார்ந்த தொழில்களையுமே நம்பி இருக்கிறார்கள். ஆனால், அனைவரும் சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ள இயலாது.

வேளாண்மை சீர்திருத்தத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்பிருந்தே ஏழை மற்றும் நலிந்த பிரிவு மக்களுக்கு நிலங்களை அரசு வழங்கி வருகிறது. இதனால், ஏழை மக்கள் விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளையும் தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்வது ஆகிய இரு பயன்களை அடைவது சாத்தியமாகிறது. விவசாய நில ஒப்படை, வருவாய் நிலை ஆணை 15-ன் கீழ் செய்யப்படுகிறது.

(2) ஏழைகளுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. ஒருவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000-மும் அதற்கு குறைவாகவும் இருப்பின், அவர் ஏழை எனக் கருதப்படுகிறார். வீட்டுமனை ஒப்படையில் பின்பற்றப்படும் முன்னுரிமை வரிசைப்படியே நில ஒப்படையும் வழங்கப்படுகிறது.

(3) கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து, 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும், அம்மாவட்டத்தில் இந்த உயரளவு, ஒரு ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெண்கள் நலத்தை மேம்படுத்தும் நோக்கில், நில ஒப்படை, மனைவி/பெண் உறுப்பினர்கள் பெயரில் செய்யப்படுகின்றன. ஒப்படை வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் பயிர் செய்யப்பட வேண்டும். மேலும், ஒப்படைதாரர் குறைந்தது 10 மரங்களை ஒப்படை நிலத்தில் நடவேண்டும். ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால், எவ்வித இழப்பீடும் வழங்காமல் நிலத்தை அரசு மீள எடுத்துக்கொள்ளும்.

(4) பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சமுதாய நிலங்களை பாதுகாப்பதை அரசு தனது தலையாய கடமையாக கருதுகிறது. எனவே, ஏரி, குளங்கள், கால்வாய், ஓடை போன்ற அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளையும், மந்தைவெளி, மேய்க்கால் மற்றும் மயானம் புறம்போக்குகளையும், ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

(5) இயற்கைச் சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும், நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப்



பிரதேசங்களிலும் வேளாண்மைக்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

(6) பெரிய நகரங்களைச் சுற்றிலும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக நிலங்கள் தேவைப்படுகின்றன. எனவே, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற மாநகர எல்லைக்குள்ளும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

(7) வீட்டுமனை ஒப்படையில் உள்ளது போலவே, நில ஒப்படை செய்வதிலும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(8) 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு நில ஒப்படை வழங்கப்பட்டுள்ளது:-

| வருடம் | நிர்ணியிக்கப் பட்ட இலக்கு (ஏக்கரில்) | ஒப்படை செய்யப்பட்ட பரப்பளவு (ஏக்கரில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1998-99 | 4,000 | 10,917.71 | 15,969 |
| 1999-2000 (பிப்ரவரி 2000 வரை) | 4,000 | 7811.57 | 13,178 |

**(ஆ) நிலக் குத்தகை:**

பொதுவாக அரசு நிலங்கள் குறிப்பிட்ட கால வரையறைக்கு தனியார்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும், நிறுவனங்களுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விவசாயமில்லாத இதர நோக்கங்களுக்காக, வருவாய் நிலையாணை எண் 24-ஏ இன்கீழ் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. வணிக நோக்கமற்ற பயன்களுக்கு வழங்கப்படும் குத்தகை இனங்களில், அளிக்கப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கான இதர இனங்களில் நிலமதிப்பில் 14 விழுக்காடும் ஆண்டுக் குத்தகைத் தொகையாக வசூலிக்கப்பட்டு வந்தது. தலவரி, தலமேல்வரி ஆகியவை. தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் கீழ் குத்தகைத் தொகையில் 600% வசூலிக்கப்பட்டு வந்தது.

(2) ஆனால், அரசு 4-6-1998 முதல், அரசு நிலங்களை குத்தகைக்கு அளிக்கும் போது ஆண்டுக் குத்தகையை, கீழ்க்கண்டவாறு திருத்தியமைத்துள்ளது:-

| பயன்பாடு | குத்தகைக் கட்டணம் | தலவரி | தலமேல் வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |
| வணிகமற்ற நோக்கம் | 1% | 1% | 5% | 7% |

குத்தகைக் காலம் பொதுவாக ஒரு தடவையில் 3 ஆண்டுகளாகும். எனினும், எந்த ஒரு அரசு நிலத்தையும் அதிகபட்சமாக 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கலாம். குத்தகைத் தொகை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுவதாகும்.

(3) இதுவரையில் 1,352 இனங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.15 கோடி குத்தகைத் தொகையாக அரசுக்கு வருவாய் கிடைக்கிறது.

**(இ) நில மாற்றம்:**

மைய அரசுத் துறைகளுக்கு நிலங்களும், கட்டடங்களும், வருவாய் நிலை ஆணை எண் 23 இன்கீழ் சந்தை மதிப்பீடு வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன. இருப்பினும், சென்னையில் கடற்கரையிலிருந்து திருமயிலை வரையிலும், அதன்பின் அங்கிருந்து வேளச்சேரி வரையிலுமான துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கான நிலங்கள் இரயில்வே துறைக்கு நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(2) மாநில அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 23ஏ இன் கீழ் நிலமாற்றம் செய்யப்படுகின்றன. பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமத்துவபுரங்கள், உழவர் சந்தைகள் போன்ற வணிக நோக்கமற்ற பயன்பாட்டிற்கென கேட்கப்படும்பொழுது நிலக்கிரயம் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால், வணிக நோக்கத்திற்கென நிலங்கள் கேட்கப்படும் பொழுது, சந்தை மதிப்பு வசூலிக்கப்படுகிறது.

(3) ஆட்சேபணையற்ற நிலங்களை, நிலமதிப்பு வரம்பின்றி பொதுப் பணித் துறை மற்றும் தொடர்புடைய துறைகளைக் கலந்து ஆலோசித்தபின், அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்ய அரசாணை (நிலை) எண் 503, வருவாய்த் துறை, நாள் 21-9-1999 இன்படி மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



(4) துறைகளின் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் நிலம், அத்துறைகளால் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால், அத்தகைய நிலங்கள் வருவாய்த் துறையால், திரும்பப் பெறப்பட்டு நிலம் கோரி பிற துறைகள் விண்ணப்பம் செய்தால் அத்துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**(ஈ) நில உரிமை மாற்றம்:**

துணை மின் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், குடிசைவாழ் மக்களுக்கென குடியிருப்புகள், அங்காடிகள், சாலைகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், போன்ற பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை மேம்படுத்துவதற்காகவும், நிலம் வழங்கும் தேவை எழும்பொழுது, வருவாய் (நிலை) ஆணை எண் 24இன் கீழ் உள்ள நிபந்தைகளுடன் அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. பொதுவாக இலாப நோக்கமின்றி, பொது நோக்கத்துக்காகத் தேவைப்படின், நிலக்கிரயமின்றியும், வணிக நோக்கத்துக்காகத் தேவைப்படின் நிலத்தின் சந்தை மதிப்பினைக் கிரயமாக வசூலித்துக் கொண்டும், அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அரசாணை (நிலை) எண் 67, வருவாய், நாள் 4-2-2000-இன்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்கு நிலம் வழங்கும்போது ஏழை, எளிய குடிசை வாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றியும், இதர நோக்கங்களுக்காக மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக்கிரயமாக ரூ.5,000/- மட்டும் வசூலித்துக் கொண்டும், அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. நில உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படின், எந்தவிதமான இழப்பீடும் வழங்காமல், அந்நிலங்களை அரசுக்கு மீளப்பெறுவதற்கான விதிமுறைகள் வருவாய் நிலையாணையில் வகுக்கப்பட்டுள்ளன.

**(உ) முறையற்ற ஆக்கிரமணங்களை அகற்றுதல்:**

அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இருக்கும் நிலங்களையும் தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு ஒப்படை செய்தல், வளர்ச்சி மற்றும் பொது நன்மைக்கு அளிப்பதன் மூலம் நன்கு பயன்படுத்த வேண்டும். இந்தக் கொள்கை அடிப்படையில் அரசு நிலங்களின் மீது ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும். இருப்பினும், பொது நன்மைக்கு என ஒதுக்கி வைக்கப்படாத மற்றும் தரிசாக உள்ள

நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்புகளின் தன்மை, அவைகளின் அமைவு ஆகியவற்றைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் ஆக்கிரமிப்புகள் வரன்முறைப்படுத்த தகுதியுடையவை ஆகின்றன.

2. ஆனால், நீர்வழிப் புறம்போக்குகள், மேய்கால் நிலங்கள், கோவில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை எனக் கருதப்படுகின்றன. அவை, அகற்றப்பட வேண்டும். வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், முறையற்ற ஆக்கிரமிப்புகளை ஆக்கிரமணச் சட்டப்படி முன் அறிவிப்பு அளித்த பின், அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

**6. மரப்பட்டா திட்டம் :**

மரப்பட்டா திட்டம் (2-சி பட்டா) இம்மாநிலத்தில் பல வருடங்களாக நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய இலை, பழம் மற்றும் அதன் அனைத்துப் பயன்களையும் பெறும் உரிமை அருகில் இருக்கும் நில உடைமைதாரர் அல்லது யாரால் அம்மரங்களைப் பாதுகாக்க முடியுமோ அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால், அம்மரங்கள் மற்றும் நிலத்தின் மீதான உரிமை அரசிடமே இருக்கும் 2-சி மரப்பட்டா வழங்குவதற்குப் பயனாளிகளின் தகுதி மற்றும் தேர்வுக்குரிய நிபந்தனைகள் பின்வருமாறு:-

(அ) கிராமம், குடியிருப்பில் குடியிருப்போர்:

(ஆ) குடியிருப்பில்லாத கிராமமாக இருப்பின், அண்மையில் கிராமத்தில் குடியிருப்போர்.

(இ) 2-சி மரப்பட்டாதாரர், மரங்களைப் பராமரிக்க வேண்டும் என்பதால் மரங்கள் உள்ள இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் வசிப்போர்.

(ஈ) மரங்கள் தனித்தனி நிலங்களில் இருக்குமானால், மரங்களுக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.



**7. நில எடுப்பு:**

1894 ஆம் ஆண்டு நில எடுப்பு சட்டப்படி (மத்திய சட்டம் 1,1894) மைய மற்றும் மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

(2) இச்சட்டத்தின்படி, சாதாரண பிரிவின்கீழ் நில எடுப்பு நடவடிக்கைகள் முடிப்பதற்கு மூன்று ஆண்டு காலம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

(3) அவசரமாக நிலம் தேவைப்படும் பொழுது நில எடுப்புச் சட்டத்தின் அவசர பிரிவு மற்றும் 17(2) இல் வழிவகைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டப் பிரிவு 17(1)-இன்படி பிரிவு 9(1)-இன் கீழ் அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்கு பிறகு நிலத்தை கையகப்படுத்தலாம். பிரிவு 17(2)இன்படி, பிரிவு 9(1) இன்கீழ் அறிவிப்பு வெளியிட்டவுடன் நிலத்தை உடனடியாக கையகப்படுத்தலாம்.

(4) நில எடுப்பு சட்டத்தின் கீழ் நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை விரைவாக்குவதற்காக காலவரையறை நிர்ணயம் செய்யும் ஒரு திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்தி முறையை (Pert chart) அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்ட மதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்தி முறைப்படி, அவசரப் பிரிவின் கீழ் நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவுபெற ஆறு மாத காலமாகும். சாதாரணப் பிரிவின்கீழ் ஆட்சேபணையற்ற இனங்களில் நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவு பெற, பதினோரு மாதங்களும் ஆறு நாட்களும், ஆட்சேபணையுள்ள இனங்களில் பதிமூன்று மாதங்களும் ஆகும்.

(5) எல்லாவற்றிற்கும் மேலாக நில எடுப்பு சட்டத்தின்கீழ் இயல்பாக நேரும் காலதாமதத்தைத் தவிர்த்து உடனடியாக நிலத்தை கையகப்படுத்த தனிப்பட்டபேச்சுவார்த்தை மூலம் நில உடைமைதாரர்களிடமிருந்து நிலத்தை வாங்கும், வழிமுறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நோக்கத்திற்காக இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒப்புக் கொள்ளப்பட்ட விலை, நிலத்தின் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றுள் எது குறைவோ அதில் 150 சதவீதம் வரையிலும், ஆனால் அதிகபட்சமாக ரூபாய் 20 இலட்சத்திற்கு உட்பட்டும் இருந்தால், அதனை ஏற்றுக்கொள்ள மாவட்ட அளிவிலான பேச்சுவார்த்தைக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 20 இலட்சத்திற்கு மேற்பட்டிருந்தால் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றுள் எது குறைவோ அதில் 150 சதவீத விலையை ஏற்பதற்கு மாநில குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 12

(6) 4(1) அறிவிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஒப்படைப்பு செய்யும் அதிகார வரம்பை அரசு கீழ்க்கண்டவாறு பரவலாக்கியுள்ளது:-

| | |
|---|---|
| 1) மாவட்ட ஆட்சியர் | 40 ஏக்கர் வரை அதன் மதிப்பு ரூ.25 இலட்சத்தை மிகாத வரையிலும். |
| 2) நிலநிர்வாக ஆணையர் | 75 ஏக்கர் வரை அதன் மதிப்பு ரூ.25 இலட்சத்திற்கு மேலும், ரூ.50 இலட்சத்தை மிகாத வரையிலும். |
| 3) அரசு | மற்ற அனைத்து இனங்களிலும். |

(7) இம்மாநிலத்தில், தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக, 1997ஆம் ஆண்டு "தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும் சட்டம்" அரசால் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் படி நில உரிமையாளருக்கு உரிய வாய்ப்பு அளித்த பிறகு, எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது என்று தெரிவிக்கும் அறிக்கையை தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்த பின்பு நிலத்தினை கையகப்படுத்தலாம். இச்சட்டத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள திருத்தச் சட்டத்திற்கு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் அண்மையில் பெறப்பட்டு இச்சட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**8. நிலச் சீர்த்திருத்தம்:**

வேளாண்மை நிலங்கள் சிலரது வசம் குவிந்து, அதன் மூலம் வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும். உபரியாக உள்ள அந்நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கோடு, 1961-ஆம் ஆண்டுடைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

(2) இந்தச் சட்டம், 6-4-1960 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டப்படி, 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டது. குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருந்தால் 30 தர ஏக்கர் உச்சவரம்பு தவிர, ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் ஒட்டு மொத்த உச்சவரம்பு, 60 தர ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டது. சட்டம் அமலுக்கு வந்த நாளான 6-4-1960 அன்று குடும்பத்தின் பெண் உறுப்பினருக்கென்று



2000 ஏப்ரல் 12]

சொந்த நிலம் இருந்திருந்தால், சீதன சொத்தாக 10 தர ஏக்கர் வரை வைத்திருக்க அவருக்கு உரிமையுண்டு.

(3) கிராமத்தில் உள்ள நிலமற்ற ஏழை மக்களுக்கு இன்னும் அதிக அளவில் விநியோகம் செய்வதற்காக கூடுதல் உபரி நிலங்களைப் பெறும் நோக்கத்துடன், உச்சவரம்பின் அளவு, இவ்வரசால் 1970 ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது. நிலச் சீர்த்திருத்தச் சட்டம் 58/61க்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம், நில உச்சவரம்பு, 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. முதன்மைச் சட்டத்தில் கரும்பு பயிரிடும் நிலங்களுக்கும் முழுதும் மேய்ச்சலுக்குப் பயன்படும் நிலங்களுக்கும் விலக்களிக்கப்பட்டிருந்தது. ஆனால், தமிழ்நாடு சட்டம் 41/71 இன்படி மேற்கண்ட நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விலக்கு 15-1-1972 முதல் திரும்பப் பெறப்பட்டது.

(4) மேலும் முதன்மைச் சட்டத்தில் (58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த (உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்த சட்டம், 1972 (தமிழ்நாடு சட்டம் 20/72) மூலம் 40 தர ஏக்கராக குறைக்கப்பட்டது.

(5) பின்பு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த (நில உச்சரம்பு நிர்ணயித்தல்) நான்காவது திருத்தச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 39/72) குடும்பத்தின் ஒட்டுமொத்த உச்சவரம்பு 40 தர ஏக்கரிலிருந்து, 30 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. முதன்மைச் சட்டத்தில் அறக்கட்டளைகள் கவரப்படவில்லை. தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) மூன்றாவது சட்டத் திருத்தத்தின்படி அறக்கட்டளைகளின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு அறக்கட்டளைகளின் தன்மையைப் பொறுத்து, உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. சுருங்கக் கூறின், இன்றைய நிலையில் நம் மாநிலத்தில் ஒரு நபர் அதிகபட்சமாக வைத்திருக்கக் கூடிய நில அளவு 15 தர ஏக்கர் ஆகும். ஒரு குடும்பம் அதிகபட்சமாக 30 தர ஏக்கர் விவசாய நிலம் வைத்துக் கொள்ளலாம். உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கர் புன்செய் அல்லது 11/2 ஏக்கர் நன்செய் என்ற அளவில், 1965ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில ஒதுக்கீடு) விதிகளின் கீழ் ஒப்படை செய்யப்படுகின்றது.

(6) நில உச்சவரம்பு குறைக்கப்பட்டதன் பயனாக, கிடைக்கப்பெற்ற அதிகப்படியான உபரி நிலம் மற்றும் அவற்றை நிலமற்ற நபர்களுக்கு

ஒப்படை செய்தது பற்றிய விவரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது:-

| ஆண்டு | உபரியாக அறிவிக்கப்பட்ட நிலம் (ஏக்கரில்) | ஒப்படை செய்யப் பட்ட நிலம் (ஏக்கரில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1961-1970 | 19,028 | 14,074 | 7,978 |
| 1971-1980 | 1,08,132 | 70,730 | 51,244 |
| 1981-1990 | 50,834 | 59,647 | 53,494 |
| 1991-1995 | 15,093 | 34,953 | 21,297 |
| 1-1-1996 முதல் 29-2-2000 வரை | 6,530 | 8,824 | 7,098 |
| மொத்தம் | **1,99,617** | **1,88,228** | **1,41,111** |

(7) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தை மைய அரசு ஏற்படுத்தியது. இத்திட்டத்தின்படி ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.2,500 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும், மாநில அரசும் சரிசமமாக பகிர்ந்து கொண்டன. இத்திட்டத்தின் கீழ் 30 விழுக்காடு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு நிதியுதவி வழங்குவதற்கு என்று தனியாக வகை செய்யப்பட்டுள்ளது. 1997-98ஆம் நிதி ஆண்டிலிருந்து இத்திட்டச் செலவினை மாநில அரசே முழுமையாக ஏற்று வருகிறது.

(8) **குடிவாரச் சட்டங்கள்:**

(அ) வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு:

பயிரிடும் குத்தகைதாரர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காக பல குடிவாரச் சட்டங்கள் அவ்வப்போது இயற்றப்படுகின்றன. 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955) இன்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தை சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தைத் தவிர்த்து மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ, நில





உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும் வகையில் செயல்புரிந்தாலோ தவிர, பயிரிடும் நிலத்திலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப் படையினரைத் தவிர, வேறு எந்த நில உடைமையாளரும், மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி, மற்ற காரணங்களுக்காகக் குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தை மீளப் பெற முடியாது.

(2) இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில பகுதிகள், அண்மையில் சில ஆண்டுகளாகவே வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் விவசாயிகள் தங்கள் மகசூல் இழக்க நேரிட்டு, குத்தகைத் தொகையினைச் செலுத்த இயலாமல் உள்ளனர். குத்தகை செலுத்துவதற்கு தவறிய காரணத்திற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட நேரிட்டது. நிலக்கிழார்களுக்கு செலுத்தத்தக்கதாகவுள்ள குத்தகைத் தொகையினை செலுத்தாமல் நிலுவையில் வைத்திருக்கின்ற பயிரிடும் குத்தகைதாரர்களை, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து காப்பதற்காக 1997 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1997) இவ்வரசால் கொண்டுவரப்பட்டது. வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் 1996 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் அன்றோ, அல்லது அதற்கு முன்போ நிலக்கிழாருக்கு கொடுக்க வேண்டியதாகவிருந்து, இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளான, 25-4-1997 அன்று செலுத்தப்படாமல் சேர்ந்துள்ள அல்லது 1997 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளில் முடிவடைகின்ற பசலி ஆண்டிற்கு செலுத்தத்தக்க குத்தகைத் தொகையை செலுத்துவது தள்ளிவைக்கப்பட்டது. அவ்வாறு தள்ளி வைக்கப்பட்ட காலங்களில் மேற்சொன்ன குத்தகைத் தொகையினை செலுத்தாததற்காக அந்த குத்தகையாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் இருக்கவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டது. இச்சட்டம் வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படாத வேலூர், தேனி, நீலகிரி, ஈரோடு, நாமக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய 6 மாவட்டங்களைத் தவிர்த்து, மற்ற, அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தும். ஆயினும் இச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிவாரணம், 30-6-1999-க்கு பிறகு நீட்டிக்கப்படவில்லை.

*(ஆ) நியாய குத்தகை நிர்ணயித்தல்:*

1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)

குத்தகைதாரர்களால் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினை நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது பொது பொறுப்புக் கழகங்களுக்குக் குத்தகைத் தொகையாக அளிக்க வழிவகை செய்கின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர்கள் செலுத்துவர். ஆனால், விவசாய செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**(இ) பொறுப்புக் கழகங்களின் நிலங்களை முறைப்படுத்துதல்:**

1961-ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61) பொது பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. எந்த ஒரு பொது பொறுப்புக் கழகமும், தன்னுடைய பண்ணை சொந்த சாகுபடிக்கு 20 தர ஏக்கருக்கு மேல் நிலத்தினை வைத்துக் கொள்ளக்கூடாது. இதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையான பயிரிடும் குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விடவேண்டும்.

**(ஈ) நியாய ஊதியம் வழங்குதல்:**

1969-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்தவதற்காக இயற்றப்பட்டுள்ளது. வருவாய்த் துறை ஆணை (நிலை) எண் 42, நாள் 27-1-2000-இல் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை பின்வருமாறு உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ.எண் | விவசாயத் தொழிலாளர் வகை | குறைந்த பட்ச ஊதியம் |
|---|---|---|
| 1 | தங்கள் சொந்த ஏர் மாட்டோடு உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.100/- |
| 2 | தங்கள் சொந்த ஏர் மாடு இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றுக்கு ரூ.54/- |
| 3 | அறுவடை, கதிர் அறுப்பு, களத்திற்கு எடுத்துச் சென்று கதிர் அடித்தல், அவைகளை அளந்து மற்றும் | நாள் ஒன்றிற்கு ஆறு மணி நேரம் வேலைசெய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ. 54 |



| | | |
|---|---|---|
| | மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணியில் ஈடுபடும் தொழிலாளர் | நாள் ஒன்றிற்கு ஐந்து மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45 அல்லது மொத்த விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி அவற்றில் எது அதிகமோ அது. |
| 4 | நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்- இதர விவசாயப் பணிகளில் ஈடுபடுவோர் | நாள் ஒன்றிற்கு 6 மணிநேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ. 54. 5 மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45. |

**(உ) குத்தகை உரிமைகள் பதிவு:**

1969-ஆம் ஆண்டய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969) குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்கள் அல்லது பொது பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்களது பெயர்களைப் பதிவு செய்ய இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, வட்டாட்சியர் பதிவு அலுவராவார், அவர் குத்தகை உரிமைப் பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்து, குத்தகைதாரர்களை அவர் பதிவு செய்ய இச்சட்டப்பிரிவு 4-இன்கீழ் அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 5(எ) இன்படி வட்டார அளவில் ஒரு அலுவலர் சார்பற்ற ஆலோசனைக் குழு அமைக்கப்படும். ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளர் ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும், சமூக நல ஊழியர்கள் மூவரும் இக்குழுவில் இருப்பர். பதிவு அலுவலர் குத்தகை உரிமை ஆவணம் தயாரிப்பதில் இக்குழு உதவிபுரியும்.

**(ஊ) குடியிருப்பு உரிமை வழங்குதல்:**

(i) 1971-ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் தமிழ்நாடு சட்டம் 40/71) குடியிருப்புகளில் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி 19-6-1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில், குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர்,

உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு வில்லங்கம் ஏதுமின்றி அவரிடமே நிலைபெற்று இருக்கும்.

(ii) தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் 1978 (தமிழ்நாடு சட்டம் 38/76), குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் 1-7-1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமக் கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க வகை செய்கின்றது.

(iii) இந்த அரசால் இயற்றப்பட்ட தமிழ்நாடு குடியிருப்புச் சட்டங்கள் சார்ந்த திருத்தச் சட்டம் 1990 (தமிழ்நாடு சட்டம் 39/90) மூலம் குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு 1-4-1990 வரை காலக்கெடுவை நீட்டி, 1-4-1990 அன்று குடியிருப்பு அனுபோகத்தில் வைத்துள்ள குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்பு மீதான உரிமையைப் பெற்று பயன்பெற வகை செய்கிறது.

**(9) நிலத் தீர்ப்பாயங்கள் அமைத்தல்:**

(1) நிலச் சீர்த்திருத்த வழக்குகளை துரிதமாக முடிவு செய்வதற்காக, மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையிலான நிலத் தீர்ப்பாயங்கள் அமைக்கப் பெற்றன. தற்பொழுது, மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகின்றது.

(2) 1-11-1990 முதல் தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தத் தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டு, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இருந்த நிலச்சீர்திருத்தம் சம்பந்தமான நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் சீராய்வு மனுக்கள் அதிகார வரம்பு நீக்கப்பட்டு அவ்வழக்குகள் இத்தனி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டன. இருப்பினும், சமீபத்தில் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முடிவுகள் உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்சின் நீதிப்பேராணை வரம்புக்குட்பட்டவை என உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

தீர்ப்பாயத்தில் முடிக்கப்பெற்ற வழக்குகளின் விவரங்கள் பின்வருமாறு:-





| | | வழக்குகள் | பல்வகை மனுக்கள் |
|---|---|---|---|
| 1 | உயர்நீதிமன்றத்தில் இருந்து மாற்றப்பட்ட வழக்குகள் | 900 | 701 |
| 2 | தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த தனி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 744 | 2,102 |
| | மொத்தம் | 1,644 | 2,803 |
| (அ) | மாற்றம் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை | 892 | 699 |
| (ஆ) | தமிழ்நாடு நிலச்சீர்த்திருத்த தனி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றவை (29-2-2000 முடிய) | 682 | 2004 |
| | மொத்தம் | **1,574** | **2,703** |
| | நிலுவை | 70 | 100 |

**(10) வருவாய் நீதி மன்றங்கள்:**

1969ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை பதிவுச் சட்டத்தின் கீழ் வட்டாட்சியர்கள் பிறப்பிக்கும் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய துணை ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட வருவாய் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955, தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (நியாயவாரம் வழங்குதல்) சட்டம் 1956, தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 1961, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல்) சட்டம் 1961 மற்றும் தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் 1976 ஆகிய பல குடிவாரச் சட்டங்களையும் இந்நீதிமன்றங்கள் நிர்வகித்து வருகின்றன.

**9. நகர்ப்புற நில உச்சவரம்பு:**

ஒரு சில நில உடைமையாளர் வசம் குவிந்துள்ள விவசாய நிலங்களை கையகப்படுத்தி கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பது அவசியமாக இருப்பது போலவே, நகர்ப்புற நிலங்களையும் சமமாக பகிர்ந்தளிப்பதும் அவசியமாக இருந்தது. இந்த நோக்கில் தான் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. அதன்மூலம் சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புறக் கூட்டுப்பகுதிகளில், நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து, அவர்கள் இலாப நோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. இச்சட்டம், விரும்பிய பலனை அளிக்கவில்லை. அதற்கு மாறாக நகர்ப்புற நிலங்களின் விலை அதிகரித்ததோடு தொழில் அபிவிருத்தி மற்றும் வீடு கட்டும் தொழில் தடையுற்றது. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில், வெற்று உபரி நிலங்களை அரசு கையகப்படுத்துவதற்கு இடையூறாக வழக்குகள் பெருகின. எதிர்பார்த்த அளவுக்கு இச்சட்டம் அதன் நோக்கங்களை அடைவதில் தவறிவிட்டது என்று பொது மக்களிடையே ஒருமித்த கருத்து நிலவியதால், ஒட்டுமொத்த நன்மைக்காகவும், மாநில வளர்ச்சிக்காகவும் இச்சட்டத்தை நீக்கறவு செய்ய வேண்டியதாயிற்று.

(2) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99) இன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் வைத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மற்றும் முதன்மைச் சட்டப் பிரிவு 21(1)-ன்கீழ் விலக்களிப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீக்கறவுச் சட்டம் பொருந்தாது.

(3) முதன்மைச் சட்டத்தின்கீழ் இதுவரை 2,381 ஹெக்டேர் மிகை வெற்று நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில், 109 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளன. 343 ஹெக்டேர் நிலத்தினை அரசுத் துறை, அரசு கழகங்கள், வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 538 ஹெக்டேர் நிலப்பரப்பு ஆக்கிரமிப்பிலும், 55 ஹெக்டேர் நிலப்பரப்பு மேல்முறையீட்டிலும் உள்ளன. 1,336 ஹெக்டேர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்வதற்கு உள்ளது.





(4) மேற்படி மிகை வெற்று நிலத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய அரசு கருதியுள்ளது. இது குறித்த முன்மொழிவு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

(5) இது தவிர, இதுபோன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை, நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது 1½ கிரவுண்டு வரை, குடியிருப்புக்காக வாங்கியிருப்பின், அதனை, அரசு நிர்ணயித்துள்ள மண்டல மதிப்பினைச் செலுத்தி வரன்முறைப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

**10. இடைத்தரகர்களை ஒழித்தலும், ரயத்துவாரியாக மாற்றலும்:**

சுதந்திரத்திற்கு முன்பு, ஜமீன் கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து ஜமீன்தாரர்கள் வரி வசூல் செய்து கணிசமான தொகையை நிர்வாகம் மற்றும் பராமரிப்புச் செலவுக்கு என்று தாங்களே வைத்துக்கொண்டு, ஒரு பகுதித் தொகையை அரசுக்கு செலுத்தி வந்தனர்.

(2) சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில் வேளாண்மை சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து பல சட்டங்கள் கீழ்க்கண்டவாறு இயற்றப்பட்டன:-

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948)

(ஆ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)

(இ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

(ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின்மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 (தமிழ்நாடு சட்டம் 31/1973)

தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் சட்டம் நீங்கலாக ஏனைய சட்டங்களைப் பொறுத்தவரை அனேகமாக அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

(3) ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்களின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் பொருந்தாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த நீதிப் பேராணைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர், மேற்படி தள்ளுபடி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்கள் அளித்துள்ளனர். மனுதாரர்கள் தங்களது சிவில் மற்றும் மேல்முறையீடுகளைத் திரும்பப் பெறுவதற்கு உச்ச நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர். சட்டப்பிரிவு 9-இன்கீழ் ரயத்துவாரி பட்டா கோரி, ஏற்கனவே அரசுக்கு அளித்துள்ள மனுக்கள் மீது நடவடிக்கை தொடருவதாகவும் தெரிவித்தனர். இதனை உச்ச நீதிமன்றம் ஏற்று, எல்லா மேல்முறையீடுகளையும் திரும்பப் பெற்றதாக கருதி தள்ளுபடி செய்தது. சட்டப் பிரிவு 9 அல்லது 17-இன்கீழ் அவர்களது விண்ணப்பங்கள் மீது முடிவு எடுக்குமாறு மாநில அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது. 24/1969 சட்டத்தினை அரசியல் சட்டத்தின் 9 ஆவது அட்டவணையில் சேர்த்து அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதா என்பது குறித்த சில மேல்முறையீடுகளையும், நீதிப் பேராணைகள் மனுவையும் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய விசாரணை மன்றத்திற்கு (Bench) உச்சநீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளது.

(4) நில உடைமைதாரர்களுக்கு இழப்பீடு தொகையும், தர்ம சத்திரங்கள், கல்வி மற்றும் ஆலய நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடையும் வழங்க பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன. இழப்பீடு தொகையை நடுவர் நீதிமன்றத்தில் வைப்பு செய்து ஒரே தவணையில் நில உடைமைதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சமய சார்புடைய நிறுவனங்களுக்கு அவை செயல்படும் காலம்வரை, ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட தஸ்திக் கொடை மாவட்ட வருவாய் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தஸ்திக் கொடை ஒவ்வொரு ஆண்டும் தொடரும் செலவினமாகும். சமய சார்புள்ள நிறுவனங்கள் இருக்கும்வரை ஆண்டுக்கொருமுறை இது வழங்கப்படுகிறது.

**11. நில அளவை, நிலப்பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு:-**

நில அளவைப் பதிவுருக்கள் துறை, இம்மாநில நிர்வாகத்தின் ஒரு மிகப் பழமையான துறையாகும். இத்துறை வருவாய் நிலஅளவை (Cadastral Survey) புலப்படங்கள் தயாரித்தல் தொடர்பான அனைத்துப்





பணிகளை மேற்கொண்டு வருகிறது. கிராமம் மற்றும் நகர்ப் பகுதிகளில் நிலஅளவைப் பணி மேற்கொள்வது இதன் முக்கியப் பொறுப்பாகும்.

(2) மிகப் பழமையான மரபு வழிப்பட்ட நடைமுறைகளையே இத்துறை பின்பற்றி வருகிறது. எனவே இத்துறையின் செயல்பாட்டினை நவீன மயமாக்குவதற்கான பலதரப்பட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென மின்னணு தொலைதூர அளவைக் கருவிகள் மைக்ரோ ஆப்டிக் தியோடலைட், மின்னணு ஸ்கிரைபர் போன்ற நவீன உபகரணங்கள் இத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(3) இயல்பான பராமரிப்புப் பணிகளுடன் கீழ்க்கண்ட திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

**(i)** *நத்தம் நில அளவை:*

இம்மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில் சென்னை மாவட்டத்தின் 5 வட்டங்கள் நீங்கலாக 28 மாவட்டங்களில் உள்ள 201 வட்டங்களில் நத்தம் நில அளவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

201 வட்டங்களில், 193 வட்டங்களில் நத்தம் நில அளவைப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு, புல அளவைப் பணி 190 வட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி 3 வட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சிய 8 வட்டங்களில் நடப்பு ஆண்டில் இப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

31-1-2000 முடிய 4,467 சதுரகிலோமீட்டர் பரப்பில் அளவைப் பணி முடிவுற்று, 4,431 சதுர கிலோமீட்டர் பரப்பு ஆவணங்கள் நிலவரித் திட்ட தொடர்பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**(ii)** *நத்தம் நில வரித் திட்டம்:*

அரசாணை (நிலை) எண் 1177, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 30-10-1987 மற்றும் அரசாணை (நிலை) எண் 1971, வருவாய்த் துறை, நாள் 14-10-1988-இன்படி நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நத்தம் நிலவரித் திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு பொது நலத்திட்டம். மனைக்கு உரியவர் தங்களது குடியிருப்பு மனைகளுக்கு உரிமை பெறுவதுடன் அதனை மேம்படுத்துவதற்கு வளர்ச்சிக் கடன் முதலிய இதர பயன்களைப் பெற உரிமம் உள்ளவராகிறார். மேலும் பதிவுருக்கள் அன்றைய நிலையில் மேம்படுத்தப்படுகின்றது. நிலவரித்

[2000 ஏப்ரல் 12

திட்டப்பணி மேற்கொள்ள வேண்டியுள்ள 193 வட்டங்களில், 184 வட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 9 வட்டங்களில் தொடங்க வேண்டியுள்ளது. 1-2-2000 வரை, நத்தம் திட்டத்தின் கீழ் 74,14,654 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 86,98,118 நில உடைமைதாரர்கள் இதனால் பயன் பெற்றுள்ளனர்.

(iii) நகர நில அளவைப்பணி:

நகர அளவையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, முதல் நகர அளவை, துணை நகர அளவை ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. தமிழகத்தில் 29 மாவட்டங்களில் 108 நகராட்சிகளில் 82 நகரங்களிலும், 6 மாநகராட்சிகளிலும் இப்பணி எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. 60 நகரங்களிலும், ஒரு மாநகராட்சியிலும் மற்றும் ஒரு மாநகராட்சியின் ஒரு பகுதியிலும் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. 22 நகரங்களிலும் 4 மாநகராட்சிகளிலும் இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள 26 நகரங்களில் இப்பணி நடப்பு நிதி ஆண்டில் படிப்படியாக மேற்கொள்ளப்படும். 31-1-2000 வரை 1,588 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அளவைப்பணி முடிந்து, 1,473 சதுர கிலோமீட்டர் பரப்பிற்கான ஆவணங்கள் தனி அலுவலரின் இறுதி தணிக்கைக்காகவும், வருவாய்த் துறையின் தொடர் பணி மேற்கொள்ளவும் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

(iv) மலைக்கிராம அளவைப் பணி:

வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், நாமக்கல், சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் கீழ்க்குறிப்பிட்ட 6 மலைகளை உள்ளடக்கி, 66 கிராமங்களில் மலை அளவை எடுத்துக் கொள்ளப்பட்டு அளவைப் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

1. ஜவ்வாது மலை.
2. ஏலகிரி மலை
3. பச்சை மலை.
4. கொல்லி மலை.
5. அரநூத்து மலை.
6. ஆனை மலை.

31-1-2000 வரை 861 சதுர கிலோமீட்டர் பரப்பில் அளவைப் பணி முடிவுற்று, 858 சதுர கிலோ மீட்டர் பரப்பு ஆவணங்கள் நிலவரித் திட்டத் தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 12]

**(4) வருவாய்ப் பதிவுகள், பதிவேடுகள் பராமரித்தல்:**

பொது மக்களுக்கு தமது உடைமை குறித்த புல எல்லையை தெரிந்து கொள்வது, வருவாய் கணக்குகளில் தமது உடைமைகளைப் பதிவு செய்வது, நிலங்களைப் பிரிக்கும் போது நில அளவைப்பதிவேடுகளில் தேவையான பதிவுகள் செய்தல் மற்றும் உரிய கட்டணத் தொகை பெற்று நில உடைமைதாரர்களுக்கு தேவையான புலப்பட நகல்கள் வழங்குதல் ஆகிய பணிகளை ஒவ்வொரு வட்ட அலுவலகத்திலும் உள்ள நில அளவைப் பராமரிப்புப் பணியாளர் மூலம் இத்துறை செய்கிறது. மேலும், பொதுமக்களுக்கு தேவையான கிராமப் படங்கள், வட்டப் படங்கள், மாவட்ட படங்கள், சுற்றுலா பயணிகளுக்கான வரைபடங்கள் மற்றும் பாதைகளைக் காட்டும் பல்வகையான படங்கள் ஆகியவை மாவட்டங்களிலும் மற்றும் சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்திலும் உள்ள விற்பனை அலகுகள் மூலமாக குறைந்த செலவில் பொதுமக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**(5) நில அளவைப் பயிற்சி நிலையம்:**

நில அளவைத் துறை பணியாளர்களுக்கு நவீன நில அளவைத் தொழில் நுட்பத்திலும், கருவிகளும் பயிற்சி வழங்குவதற்கென சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு நவீன தொழில்நுட்ப நில அளவைப் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ரூ.127.03 இலட்சம் அனுமதித்துள்ளது.

**(6) வருவாய்த் துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப் பதிவுருக்களை மேம்படுத்துதல்:**

"வருவாய்த் துறை நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில பதிவுருக்களை மேம்படுத்தும் திட்டத்தின்" கீழ் 50:50 விகித அடிப்படையில் நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உள்ளமைப்பு களை வலுப்படுத்தவும், கட்டடம் கட்டுவதற்கும் என 1989-90 முதல் 1995-96 ஆம் ஆண்டு வரை ரூ.722 இலட்சம் நிதி உதவியை மைய அரசிடமிருந்து அரசு பெற்றுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.646 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**(7) நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம்:**

(i) நிலப் பதிவுருக்கள் கணினி மயமாக்கும் திட்டம், மைய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஒரு முன்னோடி திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் ஏனைய மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கப்பட்டது.

(ii) இதற்கென இதுவரை மைய அரசிடமிருந்து ரூ.513 இலட்சம் பெறப்பட்டதில் ரூ.409.11 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

(iii) தேசிய தகவல் மையம், கணினிகளை வழங்கி, 3 ஆண்டுகளுக்கு பராமரிப்பதுடன் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டும். தடைபடாத மின்வசதி, கணினி, மேசை-நாற்காலிகள் போன்ற உள்கட்டமைப்புகளை மாநில அரசு வழங்கி அடிப்படை பதிவுருக்களான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா விவரக் குறிப்புகள் கைப்பற்றல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டும். 29 மாவட்ட தலைநகரங்களிலும் உள் கட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தினால் பென்டியம் அடிப்படையிலான கணினிகள் அனைத்து மாவட்ட தலைமையிடங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டன.

(iv) 'அ' பதிவேடு விவரக் குறிப்புகள் 16,736 கிராமங்கட்கும், சிட்டா விவரக் குறிப்புகள் 16,502 கிராமங்கட்கும் கைப்பற்று செய்யப்பட்டு விட்டன.

(v) உள்கட்டமைப்பு வசதிகள் மொத்தமுள்ள 206 வட்டங்களில் 178-ல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கணினி வழங்கப்பட வேண்டியுள்ளது. 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் முடிவுற்ற 50 வட்டங்கள், முதல் கட்ட கணினி மூலமான செயலாக்கத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன. 100 விழுக்காடு நிதி உதவித் திட்டத்தின் கீழ் மேற்சொன்ன 50 வட்டங்களில் கணினிகள் நிறுவுவதற்காக மைய அரசு ரூ.133 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த 50 வட்டங்களுக்குத் தேவைப்படும் கணினிகள் வாங்கி நிறுவும் பணி தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(vi) இத்திட்டம், எஞ்சிய வட்டங்களில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். மாநிலம் முழுதும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தும் முன், வட்ட அளவிலான கணினி மயமாக்கத்துக்காக தயாரிக்கப்படும் மென்பொருள் மாதிரிகளைத் திறனாய்வு செய்வதற்கும், டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக்குழு ஒன்றினை அரசு நியமித்துள்ளது.

(vii) புலப்படச் சுவடிகள் (F.M.B.) மற்றும் கிராம நிலப்படங்கள் (Village Maps) கணினி மயமாக்கும் பணி திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்திலும், ஈரோடு மாவட்டம், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிப்பாளையம்





வட்டங்களிலும், ரூ.124.36 இலட்சத்தில் மைய அரசின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(viii) விண்கோள் சமிக்ஞையின் அடிப்படையில் ஜி.பி.எஸ். (Global Positioning System) தொழில் நுட்பமுறையில் கடாஸ்ட்ரல் நில அளவைப் பணியினை,. ஒரு வட்டத்தில் சோதனை முறையில் நடப்பு ஆண்டில் செயல்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது.

**12. நில உரிமைப் பதிவேடு:**

விவசாய நில உடைமைதாரர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்க 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு சட்டம் வகை செய்கிறது. நில உரிமைக்கு சான்றாவணமாக இப்பதிவேடு விளங்கும். கடன் வழங்கும் நிறுவனங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் வில்லங்க சான்றினை வற்புறுத்தாது விவசாயிகளுக்கு கடன் வழங்க இப்பதிவேடு உதவுகிறது.

(2) இத்திட்டம் முதல் கட்டமாக (1) வேலூர் (2) தஞ்சாவூர் (3) திருச்சிராப்பள்ளி (4) பெரம்பலூர் (5) கரூர் (6) கோயம்புத்தூர் (7) மதுரை (8) தேனி மற்றும் (9) தூத்துக்குடி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் செயல்பாடு முழுமைபெறத் தேவையான, இச்சட்டப் பிரிவு 5, 9 மற்றும் 15 வேலூர் மாவட்டத்தில் செயல்பாட்டிற்கு கொணரப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள எட்டு மாவட்டங்களில் ஏற்கெனவே வழங்கப்பட்ட பதிவேடுகளில் நாளது வரையிலான மாற்றங்களைச் செய்து சட்டத்தின் மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் உரிய அறிவிக்கைகளை வெளியிட்டு, இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முழு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

(3) இதர மாவட்டங்களில் உள்ள நிலஉடைமைதாரர்கள் அனைவருக்கும் இந்த நிதி ஆண்டு இறுதிக்குள் நில உரிமைப்பதிவேடுகள் வழங்கப்படும்.

**13. மழை/வெள்ளம் 1999:**

ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்குப் பருவமழைக் காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் தமிழ்நாடு பெரு மழையை எதிர்நோக்குகிறது. அச்சமயத்தில் ஏற்படும் மனித உயிரிழப்புக்களைத் தவர்க்கவும், சொத்துக்கள் மற்றும் முக்கிய அமைப்புகளைப் பாதுகாக்கவும் அரசால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநிலம் முழுவதும் 53 புயல் எச்சரிக்கை மையங்கள்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. மழையினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக கடலோர மாவட்டங்களில் 123 புயல் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(2) 1999 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை பொதுவாக இயல்பாகவே இருந்தது. 1999ஆம் ஆண்டில் இயல்பான சராசரி மழையளவான 441.72 மி.மீக்கு பதிலாக 475.52 மி.மீ. மழை பெய்துள்ளது. 19-11-1999 முதல் 25-11-1999 வரையிலான குறுகிய காலத்தில் கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகபட்ச மழை பெய்துள்ளது.

(3) திருச்சிராப்பள்ளி நகரில் 22-11-1999 அன்று மட்டும் 330.40 மி.மீ. மழை பெய்தது. இதன் காரணமாக நகரில் பெருத்த வெள்ளம் ஏற்பட்டது. உய்யக்கொண்டான் ஆற்றில் திடீர் வெள்ளம் காரணமாக திருச்சிராப்பள்ளி நகரின் தாழ்வான பகுதிகளிலும், புதிதாக உருவான தாழ்வான குடியிருப்புப் பகுதிகளிலும் வெள்ளம் புகுந்ததால் அப்பகுதியிலுள்ள மக்கள் இராணுவத்தின் உதவியுடன் படகுகள் மூலம் பத்திரமான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். திருச்சிராப்பள்ளி நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், கோரையாறு மற்றும் உய்யக்கொண்டான் ஆற்றோர/தாழ்வான பகுதிகளிலிருந்தும் 18,380 குடும்பங்களைச் சார்ந்த 36,199 நபர்கள் வெளியேற்றப்பட்டு 22-11-1999 முதல் 26-11-1999 வரை ஐந்து நாட்களுக்கு 50 பாதுகாப்பு மையங்களில் தங்க வைத்து உணவு வழங்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 57 கிராமங்களைச் சார்ந்த 28,355 நபர்கள் வெளியேற்றப்பட்டு, 63 உணவு மையங்களில் தங்க வைக்கப்பட்டனர். திருவாரூர் மாவட்டத்தில் 14,097 குடும்பங்களைச் சார்ந்த 59,020 நபர்கள் 76 உணவு மையங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

(4) வரலாறு காணாத பெருமழையினால் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் சாலைகள், நீர்ப்பாசன ஆதாரங்கள் மற்றும் பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றிற்குச் சேதம் ஏற்பட்டது. மாநிலத்தில் மழை வெள்ளத்தின் காரணமாக 103 நபர்கள் உயிர் இழந்தனர். 626 கால்நடைகள் இறந்துள்ளன. 7,991 குடிசைகள் முழுமையாகவும், 28,498 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் பயிர்கள் ஓரளவிற்கு சேதமடைந்தன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது:-





உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நிவாரணமாக ரூ.15,000/- மாவட்டாட்சியர்களால் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.1,000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.500 வீதமும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி 1999-ஆம் ஆண்டு அக்டோபர்-டிசம்பர் திங்களில் வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.15.45 இலட்சமும், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.1.83 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

(5) இறந்த கால்நடைகளுக்குக்கூட, முதிர்ந்த பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ.5,000/- வீதமும், பசு மற்றும் எருமை கன்று ஒன்றுக்கு ரூ.3,000/- வீதமும் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1,000 வீதமும் ஒவ்வொரு உரிமையாளருக்கும் இரண்டு கால்நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிவாரணத் தொகையினை உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் பொருட்டு, கருவூல விதி 27-இன்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கு தற்போது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(6) வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள், நீர்ப்பாசன ஆதாரங்கள், பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றினைச் சீரமைக்க அரசு இதுவரை ரூ.32.25 கோடி வழங்கியுள்ளது. இது தவிர, கரூர் மாவட்டத்தில் சேதமடைந்த மாநில நெடுஞ்சாலைகளைச் சீரமைக்க ரூ.75 இலட்சமும், திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் முழுவதுமாக சேதமடைந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.28.93 இலட்சமும் வழங்குவது குறித்து அரசின் தீவிர ஆய்வில் உள்ளது.

(7) இயற்கை இடர்பாடுகளினால் முழுமையாக பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றக்கு ரூ.1,000 வீதமும், இதர பயிர்களுக்கு பயிர்களின் வகைக்கேற்ப ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.400 முதல் ரூ.4,000 வரையும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதைத்தவிர, இயற்கை இடர்பாடுகள் காரணமாக பூச்சித் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடையும் பயிர்களுக்கும் இயற்கை இடர்பாடு நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க தற்போது அரசு ஆணையிட்டுள்ளது.

(8) மழைக்கு முன்னால் மாநில அளவில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளினாலும், மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும் உயிரிழப்பு

மற்றும் சொத்துக்கள், பயிர்களுக்கு ஏற்படவிருந்த சேதங்கள் குறைக்கப்பட்டன. மாவட்ட நிர்வாகம் எடுத்த துரித நடவடிக்கைகளால், நீர்நிலை ஆதாரங்களில் கரைகள் சரியான நேரத்தில் பழுது பார்க்கப்பட்டு, சேதாரங்கள் தவிர்க்கப்பட்டன.

**14. நலத் திட்டங்கள்**

(i) தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டம்:

31-7-1998 வரை, பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரணமடைந்தால், அவரை இழந்து நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயரினைத் துடைக்கும்பொருட்டு தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அக்குடும்பத்திற்கு ரூ.7,500 நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. இவ்வாறு நிவாரணமாக வழங்கப்பட்டு வந்த ரூ.7,500-ல் மத்திய அரசு ரூ.5,000 மற்றும் தமிழ்நாடு அரசு ரூ.2,500 ஏற்று வந்தன. 1-8-1998 முதல் இவ்வுதவித் தொகை ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டு, முழுத் தொகையையும் மத்திய அரசே தனது தேசிய குடும்ப நலத் திட்டத்தின்கீழ் ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்குக் குடும்ப ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ.7,200-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(2) இத்திட்டத்தின்கீழ் 1990-91 முதல் 1999-2000 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | ஆண்டு. | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட நிதியுதவி. (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 1990-91 | 22,154 | 6,36,65,000 |
| 2 | 1991-92 | 22,161 | 6,69,56,000 |
| 3 | 1992-93 | 39,087 | 12,66,39,335 |
| 4 | 1993-94 | 36,835 | 15,62,00,000 |
| 5 | 1994-95 | 19,296 | 11,48,90,295 |
| 6 | 1995-96 | 54,762 | 24,56,39,000 |
| 7 | 1996-97 | 61,755 | 30,88,62,970 |
| 8 | 1997-98 | 40,034 | 26,18,70,000 |
| 9 | 1998-99 | 37,214 | 35,91,91,000 |
| 10 | 1999-2000 (1/2000 வரை) | 16,366 | 13,64,12,000 |



(ii) விபத்து நிவாரணத் திட்டம்:

ஏழைத் தொழிலாளர்கள் தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் இறக்க நேரிட்டால் அல்லது காயங் களினால் அங்கங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக ஒருங்கிணைந்த விபத்து நிவாரண திட்டம் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி விண்ணப்பம் செய்வதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்பட வில்லை. 1989ஆம் ஆண்டு இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டபோது 22 வகையான ஏழைத் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர். தற்போது 44 வகை ஏழைத் தொழிலாளர்கள் பயனடையும் வண்ணம் இத்திட்டம் நீட்டிக்கப் பட்டுள்ளது.

(2) விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் நபர்களின் குடும்பங்களுக்கு 28-8-1996 முதல் ரூ.15,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. இதில் ரூ.10,000 தொகையை மைய அரசு அதன் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் வழங்குகிறது. எஞ்சிய ரூ.5,000 தொகையை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது.

(3) இத்திட்டத்தின்கீழ் விபத்தில் உடல் ஊனமுற்றோர்களுக்கு ரூ.5,000 முதல் ரூ.10,000 வரை அவர்களின் ஊனத்திற்கேற்றவாறு நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தது. 27-10-1999 முதல் இந்நிவாரணம் ரூ.7,500 லிருந்து ரூ.15,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

(4) இத்திட்டத்தின்கீழ் 1990-91 முதல் 1999-2000 வரை கீழ்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:—

| வ.எண். | ஆண்டு. | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட நிதியுதவி. (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 1990-91 | 998 | 88,65,000 |
| 2 | 1991-92 | 1,081 | 91,36,000 |
| 3 | 1992-93 | 961 | 70,00,000 |
| 4 | 1993-94 | 991 | 66,06,000 |
| 5 | 1994-95 | 1,024 | 89,74,000 |
| 6 | 1995-96 | 1,836 | 2,00,89,000 |
| 7 | 1996-97 | 1.548 | 1,33,41,000 |
| 8 | 1997-98 | 992 | 1,20,29,000 |
| 9 | 1998-99 | 1,578 | 2,36,73,000 |
| 10 | 1999-2000 (1/2000 வரை) | 429 | 43,75,000 |

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.